# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 30 செவ்வாய்க்கிழமை (16.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 355


# சரணடைய வந்த எவருமே வெள்ளைக்கொடி பிடிக்கவில்லை

## மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று சாட்சியம்



கொழும்பு, நவம்பர்16

**இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைய வந்தவர்களைப் படையினர் சுட்டுக்கொல்லவில்லை. சரணடைய வந்தவர்கள் வெள்ளைக் கொடிகளையோ அல்லது கறுப்புக் கொடிகளையோ ஏந்தி வரவில்லை. நிர்வாணமாக சரணடைய வந்தவர்களையும் இராணுவம் பொறுப் பேற்றுக் கொண்டது - என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மேல்நீதிமன்றில் தெரிவித்தார்.**

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளான தீபாலி விஜேசுந்தர, எச்.என்.பி.பி. வராவெல, சர்பிக் ரஷீக் ஆகியோர் முன்னிலையில் நேற்று நடைபெற்றது. அவ்வேளை இவ்வழக்கின் மூன்றாவது சாட்சியாளராக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சாட்சியமளித்தார்.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரம் குறித்து நிபுணர் குழு ஆராய்கிறது

கொழும்பு, நவ. 16

இலங்கையில் இடம் பெற்றன என்று கூறப்படும் மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் ஆகியவை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தனக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்த மூவர்அடங்கிய நிபுணர் குழு இலங்கை விவகாரம் குறித்து ஆராய்ந்து வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிடைக்கப் பெற்ற தரவுகள் குறித்து திறம்பட ஆராயப்பட்டு வருவதாக ஐ.நா. சபையின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் இன்னசிற்றி பிரஸ் இலங்கை விவகாரம் தொடர்பாக நிபுணர் குழு முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து பர்ஹான் ஹக்கிடம் கேள்வி எழுப்பி இருந்தது. அதற்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அல்-ஜசீரா தொலைக்காட்சியில் இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது இனந்தெரியாததோர் கல், தக்காளி, முட்டை வீச்சு!

### கைகட்டிப் பார்த்திருந்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 16

''நாம் இலங்கையர்'' அமைப் பின் ஏற்பாட்டில் யாழ். பஸ் நிலையத்தின் முன்பாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது நேற் றுப் பிற்பகல் இனந்தெரியாதோர் கற்கள், தக்காளிப் பழம், முட்டை என்பவற்றை வீசித்தாக்குதல் நடத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இந்த ஆர்ப் பாட்டத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக்களும் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் வாகனங்களில் ஏறி அங்கிருந்து சென்றவுடன் திடீ ரென அவ்விடத்துக்கு வந்த இனந்தெரியாதோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மக் கள் மீது கற்கள் மற்றும் முட்டைகள், தக்காளிப் பழங்களை வீசித்தாக்குதல் நடத்தினார்கள். பஸ்நிலையத்தின் நான்கு திசைகளில் இருந்தும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதல் நடத்தியவர்கள் அனைவரும் சிவில் உடையில் காணப்பட்டனர்.

பாடசாலைகள் முடிந்து மாணவர்கள் சென்றமையால் ஆஸ்பத்திரி வீதி அந்த நேரத்தில் சனக் கூட்டம் நிறைந்ததாகக் காணப்பட்டது. அந்தவேளை யிலேயே இந்தத் தாக்குதலும் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்றவேளை அப்பகுதியில் பொலிஸாரும், இராணுவத் தினரும் அங்கு கடமையில் இருந்தனர். நடமாடும் பொலிஸ் நிலையம் ஒன்றும் அந்தப் பகு தியில் உள்ளது. இனந்தெரியாத இந்த நபர்கள் பகிரங்கமாகத் தாக்குதலை மேற் கொண்ட போதும் அங்கு நின்ற பொலிஸாரோ, இராணுவத்தினரோ அவர்களைக் கைதுசெய்ய எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனச் சம்பவத்தை நேரில் பார்த்தோர் தெரிவித்தனர். எனினும் இந்தச் சம்பவத்தின்போது எவரும் காயமடையவில்லை. (த-86)

## ஜே.வி.பி. உறுப்பினர்களை யாழ். மக்களே தாக்கியிருக்கலாம்

### அரசாங்கம் இப்படிக் கூறுகிறது

கொழும்பு, நவ. 16

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் அவரது சகாக்கள் மீது யாழ். தமிழ் மக்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம். இத் தாக்குதல் சம்பவத்துக்கும், அரசுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை.

- இப்படி தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு கொழும்பிலிருந்து சென்று இவர்கள் கோரிக்கை விடுப்பதை யாழ்ப்பாண மக்கள் விரும்பியிருக்க மாட்டார்கள். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்றும் அவர் கூறினார். (ஒ-சி)

### சந்தனமணம் வீசட்டும்...



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் கால பதவியேற்பு நிகழ்வையொட்டி பதினொரு நிமிடங்களில் பதினொரு லட்சம் மரக்கன்றுகள் நேற்று நாடு முழுவதும் நடப்பட்டன. அலரி மாளிகையில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு ஜனாதிபதி வெண்சந்தன மரக்கன்று ஒன்றை நட்டு இத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

### ஊழியர் சேமலாப மற்றும் நம்பிக்கை நிதிய

## திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 16

அரசினால்மேற்கொள்ளப்படவுள்ள ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய திருத்த சட்டத்தின் மூலம் தொழிலாளர்களின் உரிமைகள் பாதிப்படையவுள்ளதாக தெரிவித்து அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் நாடளாவிய ரீதியில் நேற்று ஆர்ப் பாட்டங்களை நடத்தியது.

இதன்படி தனியார்துறை ஊழியர்கள் தமது நிறுவனங்களின் முன்றலில் பகல் போசன இடைவேளையின்போதும்,

(04ஆம் பக்கம் பார்க்க)

## சிறையில் வாடும் போராளிகளைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுமதி வழங்குக

### இலங்கை அரசுக்கு கனடா வலியுறுத்து

கொழும்பு, நவ. 16

சிறையில் வாடும் போராளிகளை செஞ்சிலுவைச் சங்கம் பார்வையிட அனுமதி வழங்க வேண்டும் என்று இலங்கை அரசை கனடா வலியுறுத்தியுள்ளது. இலங்கை தொடர்பான கனடா அரசின் நிலைப்பாடு பற்றி கனடா ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பருஸ்ரான்ரொன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனங்களுக்கிடையே நல்லுணர்வை ஏற்படுத் தல், மீள்கட்டுமானம் ஆகியவற்றை விரைந்து முன்னெடுக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

மொழி, மதம், இன வேறுபாடு ஆகியவற்றுக்கப்பால் சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகளை சகல இனங்களுக்குமான அரசியல் தீர்வை இலங்கை அரசானது வழங்க.

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜே.வி.பி. மீதான தாக்குதலுக்கு தமிழ்க் கட்சிகள் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.16

ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி உட்பட அவரது குழுவினர் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலைத் தமிழ்க் கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் இத்தாக்குதல் தொடர்பாகக் கண்டனம் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்து கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி உட்பட மூவர் தாக்கப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம். அங்கு ஓர் அரசியல்வாதிக்கு உரிய பாதுகாப்பும் மரியாதையும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். இதற்கு மாறாக இவர்கள் தாக்கப்பட்டமையானது அநாகரிகமான செயலாகும் - என்றார்.

இத்தாக்குதலை யாழ். மாநகர சபையும், ஈ.பி.டி.பியும் வன்மையாகக் கண்டித்துள்ளன என யாழ்.மேயர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். யுத்தத்துக்குப் பின்னரான ஒரு சூழலில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றமை மனவருத்தத்துக்கு உரியது என்றும் அவர் கூறினார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவிக்கையில், இது அரச பயங்கரவாதத்தின் ஒரு வடிவமாகும். இதை ஜே.வி.பியை விரும்பாத தமிழ் மக்கள் நடத்தினர் என வர்ணிப்பது முட்டாள்தனமாகும்.

அரச பயங்கரவாதம் தமிழ் மக்களுக்கு ஒரு புதிய விடயம் அல்ல. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழும்மக்களுக்கு இது பழகிப்போன விடயமாகும். அரச பயங்கரவாதத்தின் மூலமான அனுபவங்களைத் தமிழ் மக்கள் மறக்க முடியாது. 1971இலும், 1989இலும் அரச பயங்கரவாதத்தின் தாக்கங்களை அனுபவித்த ஜே.வி.பி. சமீப காலமாக அவற்றை மறந்திருந்தது.

தமிழ் மக்கள் உச்சக்கட்ட துன்பங்களை அனுபவிக்கும் போது, அவை ஜே.வி.பியினருக்கு வலித்திருக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும். எனினும், இதனை மறந்துவிட்டு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சகோதரர்களுக்கும் எதிராக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட தாக்குதல்களை மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்றார்.

இதேவேளை, இத்தாக்குதல் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவித்து தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.கஜேந்திரன் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியும் குழுவினரும் தாக்கப்பட்டமையானது தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் அரசியல் செயற்பாட்டுக்கு விடுத்த ஓர் அச்சுறுத்தலாகும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எமது கட்சியின் அரசியல் செயற்பாட்டைத் தடுக்க முனைகிறார்கள். - என்றார். (ஒ-சி)

## கல்வி ஊக்குவிப்பு...





கண்டாவளை மகாவித்தியாலயத்துக்கு நேற்று வருகை தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மாணவருக்கு காலணிகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாவணவர்களையும் படங்களில் காணலம்.

### தமிழ் நாட்டில் பிறந்த

# ஈழ அகதிகளின் குழந்தைகளுக்கு பிறப்புச்சான்றிதழ், குடியுரிமை

### இலங்கைத் தூதரகம் வழங்கி வருகிறது

சென்னை, நவ. 16

தமிழ்நாட்டில் பிறந்த இலங்கை அகதிகளின் பிள்ளைகளுக்கு இலங்கை பிறப்புச் சான்றிதழும், இலங்கை குடியுரிமையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இலங்கை துணைத் தூதரகம் முதற்கட்டமாக 252 பேருக்கு இலங்கை பிறப்புச் சான்றிதழ்களை அடுத்த மாதம் 22ஆம் திகதி வழங்குகின்றது.

இலங்கை பிறப்புச் சான்றிதழ்களை வழங்கிய அடுத்த சில மாதங்களுக்குப் பின்னர் அவர்களுக்கான இலங்கை குடியுரிமைச் சான்றுகளையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேற்படி பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு தாய், தந்தையரது திருமணச் சான்று மற்றும் பிறப்புச் சான்று, பிள்ளை இந்தியாவில் பிறந்ததற்கான அத்தாட்சி சான்றுகள் இருந்தால் இலங்கை பிறப்புச் சான்று வழங்கப்படும் என்று சம்பந்தப்பட்ட துறையினர் கூறியுள்ளனர்.

மேற்படி இலங்கை பிறப்புச் சான்று, இலங்கை குடியுரிமைச் சான்று ஆகியவற்றை தமிழ் நாட்டில் பெற்று இலங்கை திரும்புவர்கள் உடனடியாக அங்கு வழங்கப்படும் அடையாள அட்டை மற்றும் வாகனம் ஓட்டும் உரிமம் போன்றவற்றைப் பெறமுடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 113 அகதி முகாம்களில் சுமார் 73 ஆயிரம் இலங்கை அகதிகள் வசித்து வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகள், கல்வி வசதிகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றை மத்திய அரசுடன் இணைந்து மாநில அரசு கடந்த 20 ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் இருந்து தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வருபவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டியிருந்தது. அதற்குப் பிற்பாடு ஏற்பட்ட அமைதிப் பேச்சுக் காலங்களில் பலர் இலங்கைக்குத் திரும்பிவிட்டனர்.

ஆனால், இலங்கையில் முழுமையான அமைதி, பாது காப்பு, மீண்டும் அகதி வாழ்க்கை இல்லாத சூழல் ஆகியவை ஏற்படும்போது மேலும் பலர் இலங்கைக்குத் திரும்பத் தயார் நிலையில் உள்ளனர்.

இதேவேளை, கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாடு அகதி முகாம்களில் சுமார் 20 ஆயிரத்து 500 குழந்தைகள் பிறந்துள்ளன எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இவர்களுக்கான இலங்கை பிறப்புச் சான்றுகளைப் பலர் பெற்றிருக்கவில்லை. பிறப்புச் சான்று இல்லாத காரணத்தால் இலங்கை குடியுரிமையும் பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இங்கு குழந்தைகள் பிறந்ததும் வைத்தியசாலையில் வழங்கப்படும் பிறப்புச் சீட்டுடன் தமிழகத்தில் வழங்கப்படும் உள்ளூர் பிறப்புச் சான்றையும் பலர் பெற்று வைத்திருக்கின்றனர். ஆனால், அவற்றைக் கொண்டு இந்தியாவில் இலங்கை கடவுச்சீட்டு பெறுவதோ, இலங்கையில் கடவுச்சீட்டு பெறுவதோ அல்லது அடையாள அட்டை பெறுவதோ முடியாத காரியமாகவும் அமைந்துள்ளது.

எனவே, இதனை அவதானித்த தமிழ்நாடு அரசு தமிழ் நாட்டில் அகதி மக்களுக்காக பணிசெய்துவரும் 'ஆபர் இந்தியா' என்ற தொண்டு நிறுவனத்துடனும், சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்துடனும் இணைந்து இங்கு பிறந்த குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழை வழங்க ஏற்பாடு செய்துள்ளது. (ஓ-சி)

### கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்.வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயத்தின் புலமைப்பரிசில் கௌரவிப்பு நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு அதிபர் திருமதி பு.சண்முகராசா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரி ச.மாணிக்கராசா, லயன் டாக்டர் தியாகராசா ஆகியோர் கலந்துகொள்வர்.

### பாராட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 16

சாவகச்சேரி, கல்வயல், ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்தின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டுவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இளவாலை, வித்தகபுரத்தில் மீள்குடியமர்வு; மீண்டும் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

தெல்லிப்பழைப் பிரதேசத்திலுள்ள இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் மீள்குடியேற்றப் பதிவு செய்த குடும்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னர் மீண்டும் தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அரச அதிபர் தெரிவித்திருப்பதாவது:-

யாழ். மாவட்டத்தில் மீள் குடியேற்றப்படாத பிரதேசங்களில் பொதுமக்கள் படிப்படியாக மீள்குடியேற்றப்பட்டு வருகின்றனர். இதன் ஒரு கட்டமாக தெல்லிப்பழையில் மேற்படி கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

எனவே இப்பிரதேசங்களில்களுக்கு அத்தியாவசிய சேவைகளை ஏற்படுத்த அங்கு செல்லவுள்ள அரசாங்க திணைக்களங்கள், தாங்கள் சேவையில் ஈடுபடுத்தவுள்ள தமது உத்தியோகத்தர்களது பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், வாகன இலக்கங்கள், சாரதியின் பெயர் விவரங்கள் போன்றவற்றை மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் திட்டப் பணிப்பாளரிடம் இன்று சமர்ப்பிக்கவும்.

அத்துடன் அரசசார்பற்ற நிறுவனங்கள் வாழ்வாதார செயற்பாடுகளை மேற்குறிப்பிட்ட கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் மீள்குடியமரும் மக்களுக்கு ஏற்படுத்தல் தொடர்பான சுருக்கமான திட்டமுன்மொழிவுகளை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-16)

## ஊர்காவற்றுறையில் இருந்துவந்த மினிபஸ் வங்களாவடியில் நேற்றுத் தடம் புரண்டது

### காயமுற்றவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில்,

யாழ்ப்பாணம், நவ. 16

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணிகளுடன் வந்த மினிபஸ் தடம்புரண்டதில் எழுவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் வங்களாவடியில் இடம்பெற்றுள்ளது.

அராலிச்சந்தி, வங்களாவடியில் வந்துகொண்டிருந்த சமயம் பின்னால் வந்த லொறி மோதியதில் மினிபஸ் தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் வேலணையைச் சேர்ந்த பஸ் நடத்துநரான ரட்ணகோபால் மயூரன் (வயது-27), மெலிஞ்சிமுனையைச் சேர்ந்த சீமாம்பிள்ளை ஜெயக்குமார் (வயது-38), நாரந்தனையைச் சேர்ந்த ஜேசுதாசன் வசந்தகுமார் (வயது-40), வேலணையைச் சேர்ந்த ரி.எப்.எலிசபெத் (வயது-39), பி.பிரோமினம்மா (வயது-65) ஆகியோரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஒ-16-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பில் உள்ளோர் விவரங்களை வெளியிடுமாறு யாழ். பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம்

## ஜே.வி.பி.எம்.பிக்கள் கலந்து கொண்டனர்

யாழ்ப்பாணம்.நவ-16

காணாமல் போனோர் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை வெளியிடுமாறும் அவர்களை விடுதலை செய்யுமாறும் கோரி நேற்று காலை யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் நூற்றுக் கணக்கான மக்கள் திரண்டு கதறியழுத வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜே.வி.பியின் கிளை அமைப்புக்களில் ஒன்றான 'நாம் இலங்கையர்கள்' என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சோமவன்ச அமரசிங்க, கட்சியின் பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா, கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேரன்,நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி, கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வீரராஜ் லலித்குமார், மாகாண சபை உறுப்பினர் மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் காணாமற் போனோரின் படங்களைத் தாங்கியவாறு கதறியழுதனர். 'எமது பிள்ளைகளை விடுதலை செய்யுங்கள். இல்லையேல் நாம் எமது உயிரை மாய்த்துக் கொள்வோம்' எனக் கூறி அழுதனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் வயது முதிர்ந்தவர்களே அதிகம் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது, கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனோரின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவுகள் தமது கோரிக்கையை முன்வைத்து கையெழுத்துப் போராட்டத்தையும் ஆரம்பித்தனர்.

ஆர்ப்பாட்டம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்னால் சில மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுக் கொண்டிருந்தபோது யாழ். நகரப் பகுதியில் பதற்றமான நிலைமையும் காணப்பட்டது. (த-14-86)

## மோ. சைக்கிள் டிராக்டர் விபத்தில் இளைஞர் பலி!


தென்மராட்சி, நவ:16

சாவகச்சேரி, நுணாவில் - பருத்தித்துறை வீதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற டிராக்டர் மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் அந்த இடத்திலேயே பலியானார்.

சம்பவத்தில் மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த தையல் நிலையப் பணியாளரான பாலசுந்தரம் விக்னேஸ்வரன் (வயது-30) என்பவரே மரணமானவராவார்.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.(ஒ-16-131-207)

## இங்கும் பரவுகிறது ...?



அமைதியின்மை: 'நாம் இலங்கையர்' அமைப்பின் ஏற்பாட்டில் காணாமற்போனோர் மற்றும் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் விவரங்களை வெளியிடக்கோரி நேற்று யாழ். பஸ் நிலையத்தில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரசார செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். (த - 14)

# மேலதிக அதிகாரங்களுடன் மீண்டும் அரச அதிபர்கள், உதவி அரச அதிபர்கள்

கொழும்பு நவ. 16

மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் என்ற பதவிப் பெயர்களுக்குப் பதிலாக அராசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகிய பதவிப் பெயர்களை வழங்கி அவர்களின் அதிகாரங்களையும் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

250 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நாகொட பிரதேச செயலகத்தின் இரண்டு மாடிக் கட்டடத்தைத் திறந்து வைத்த விழாவில் உரையாற்றிய போதே நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே செனவிரத்ன அரசின் இத்தீர்மானத்தை தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், பிரதேச நிர்வாகத்தை வரிவுபடுத்துவது தொடர்பாக 1992ஆம் ஆண்டில் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் அவர்களுக்கு அவசியமான அதிகாரங்கள் வழங்கப்படாமையின் காரணமாக அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தடைகள் ஏற்பட்டுள்ளன. எனவே அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர் பதவிகள் மீண்டும் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு நெறிப்படுத்தல் மற்றும் மீளாய்வுகளை மேற்கொள்ளும் அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், செயற்றிறன் மிக்க சேவையை மக்களுக்கு வழங்குவதே இதன் குறிக்கோள்-என்றார். (த-22)

# குற்றச்சாட்டுக்கள் இன்றி இளைஞர், யுவதிகள் தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது நியாயமா?

## இது ஜனநாயக செயற்பாடா என்று கேட்கிறார் ஜே.வி.பி. தலைவர்

யாழ்ப்பாணம். நவ-16

குற்றச்சாட்டுக்கள் எவையும் இன்றி அப்பாவி இளைஞர், யுவதிகளைத் தடுத்து வைத்திருப்பது ஜனநாயக செயற்பாடா?

உண்மையில் மஹிந்தராஜபக்ஷ ஜனநாயகத்தை நாட்டில் பேணுவாராக இருந்தால் தடுப்புக் காவலில் உள்ளவர்களை விடுதலை செய்யவேண்டும். குற்றமுள்ளவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும்.

ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். பஸ்நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தை அடுத்து ஊடகங்களுக்கு பேட்டி அளிக்கையில் மேற்கண்டவாறு அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

எந்தவித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாத ஆயிரக் கணக்கான இளைஞர்கள் விடுவிக்கப்படாது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஜனநாயக ஆட்சி எனக் கூறிக் கொள்ளும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் இந்தச் செயல் வன்மையாக கண்டிக்கத் தக்கது.

எமது பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் எனப் பல ஆயிரம் பெற்றோர்கள் எம்மிடம் முறையிட்ட வண்ணமுள்ளனர். எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை வெளியிடக் கோரியும், அவர்களை விடுதலை செய்யக் கோரியும், தொடர்ந்தும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் நாம் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்-என்றார்.

ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கருத்து தெரிவிக்கும் போது அரசுடன் சேர்ந்து இயங்கும் சிங்களக் குண்டர்களாலேயே எமது கட்சி உறுப்பினர்கள் நேற்று முன்தினம் தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார் (ஒ-14)

# பலாலி படை முகாமில் மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தார் தளபதி ஹத்துருசிங்க

யாழ்ப்பாணம் நவ.16

ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பை முன்னிட்டு மரம் நடும் திட்டத்தை பலாலி படைத்தளத்தில் யாழ். மாவட்டப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க வைபவ ரீதியாக ஆரம்பித்தார்.

அதைத் தொடர்ந்து 300 தென்னைமரக் கன்றுகள் பலாலி படைத்தளப் பிரதேசத்தில் படையினரால் நடப்பட்டன.

அதைத்தொடர்ந்து ஆனையிறவிலிருந்து எழுதுமட்டுவாழ் வரை ஏ-9 பாதையில் 22 கிலோ மீற்றர் தூரத்துக்கு இருமருங்கிலும் தென்னை, பனை மற்றும் பயன்தரு மரக்கன்றுகளைப் படையினர் நட்டனர்.

இலங்கை முழுவதும் படையினர் தமது முகாம்களில் 50 ஆயிரம் மரக்கன்றுகளை நேற்று நட்டனர் என்று பலாலி படை முகாமின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ஒ-ஐ)

# யாழ். வந்த தெற்கு பல்கலை. மாணவர் 50 பேர் பொலிஸாரால் பலவந்தமாக வெளியேற்றம்

## 3 மணி நேர விசாரணையின் பின் அதிரடி நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.16

'நாம் இலங்கையர்' என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டு நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்குவதற்காக யாழ். நகர் வந்த அனைத்துப் பல்கலைக் கழக மாணவர்கள் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் மூன்று மணிநேரம் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார். என ஜே.வி.பியினர் தெரிவித்தனர். அதன் பின்னர் அவர்கள் மாவட்டத்தை விட்டு பொலிஸாரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும்தெரிவித்ததாவது:-

யாழ். நகருக்குள் நுழைந்த அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள்பயணித்த பஸ்ஸை யாழ். பொலிஸ் குழுவினர் வழிமறித்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு காலை 9 மணி முதல் ஒருமணிவரையும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களது அடையாள அட்டைகள் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் பல்வேறு கோணங்களிலும் பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தினர். அதனைத் தொடர்ந்து மாணவர்கள் வந்த பஸ்ஸில் இரு பொலிஸார் ஏறி அவர்களை யாழ். மாவட்டத்துக்கு வெளியே அனுப்பிவைத்தனர்.

இதன் காரணமாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-14)

# நாடாளுமன்றம் நீரில் மூழ்கியது அரசுக்கு நல்ல சகுனம் அல்ல

## சோதிடர்கள் ஆருடம்

கொழும்பு .நவ- 16

அண்மையில் கொழும்பில் பெய்த கடும் மழை காரணமாக நாடாளுமன்ற கட்டடத்தின் கீழ் தளம் முழுமையாக நீரில் மூழ்கிப் போனது. சோதிட சாஸ்த்திரத்தின் படி அரசுக்கு பெரும் தீமை பயக்கும் சகுனமென சோதிட வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் இது தொடர்பாக விளக்கமளிக்கையில் 1992 ஆம் ஆண்டில் கொட்டித் தீர்த்த இதே போன்ற தொரு கடும் மழையினால் நாடாளுமன்றக் கட்டடத் தொடர் நீரில் மூழ்குண்டு போனதாகவும், அதையடுத்து 1994ஆம் ஆண்டில் 17 ஆண்டுகளாகத் தொடர்ந்து நிர்வாகம் செலுத்திய ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

இதை வைத்து நோக்கும் போது அன்மையில் கொட்டித் தீர்த்த கடும் மழையால் நாடாளுமன்றக் கட்டடம் நீரில் மூழ்கிப் போனது எந்த விதத்திலும் நல்ல சகுனம் அல்ல எனவும் அவர்கள் தெரிவித்ததுடன் குறிப்பாக கடந்த 11.11.2010 வியாழக்கிழமை மின்சார ஒளியின்றியே நாடாளுமன்றம் கூடியுள்ளமையையும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (த-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை அருளம்மா



தலையாளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அருளம்மா நேற்று (15-11-2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சிவகுரு-சின்னாச்சி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், மோகன் (ஹொலண்ட்), அனுஷியா (பிரான்ஸ்), மதியழகன் (மதி-பிரான்ஸ்), சாவித்திரி (உஷா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், பொன்மணி, கந்தசாமி மற்றும் இராசம்மா (சின்னக்கிளி) தவவதி (கமலம்) ஆகியோரின் சகோதரியும் வக்ஷலா (ஹொலண்ட்), ஞானசீலன் (பிரான்ஸ்), நந்தினி (பிரான்ஸ்), திருச்செல்வம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், டிசாந்தி, பவித்திரன், கோபிகா, விதுர்சன் (அனைவரும் ஹொலண்ட்), பிரான்சைச் சேர்ந்தவர்களான பிரவின், பிரதீஸ், பிரஜித், கவிசன், சஹானா, ஆருஜன், அஸ்வின், அஜந்த் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.11.2010) புதன்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலையாளி லேன், யாழ்ப்பாணம். (சி/572884) தகவல்: பிள்ளைகள்

## சின்னப்பு இளையதம்பி



ஏழாலை வடக்கு, கட்டுவன் முனியப்பர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இளையதம்பி நேற்று (15.11.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னரத்தினம் அவர்களின் கணவரும், காலஞ்சென்ற பொன்னையா மற்றும் சின்னத்தம்பி, அன்னமுத்து, சின்னம்மா சின்னத்தங்கம் ஆச்சிமுத்து ஆகியோரின் சகோதரரும், சீவரட்ணம் யோகேஸ்வரன் (இத்தாலி), விஜயலட்சுமி (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாமலர், சறோஜாதேவி சோதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அருட்செல்வன் யசோதா (நோர்வே), யசோதரன் (பிரான்ஸ்), ஜெனகன், ஜெயந்தன் (ஸ்பெயின்), சுபாங்கினி (கொழும்பு), தனுஜா (கொழும்பு), சிந்துஜா (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், ரம்யா, ரித்தியா (நோர்வே), கவிஸ்வரன் (கொழும்பு), ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: மகன், சீவரட்ணம் (கைலேஸ்)
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (106076) தொ.பே. 0214902235

## பாலசுந்தரம் விக்கினேஸ்வரன் (சின்னப்பிள்ளை)



மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் விக்கினேஸ்வரன் 15.11.2010 அன்று அகாலமரணமானார்.

அன்னார் பாலசுந்தரம் (அமரர்) தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், சுரேஸ்வரன் (அமரர்) பரமேஸ்வரன் (அமரர்), பாலேஸ்வரன், தவனேஸ்வரன், இலங்கேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. தகவல்: குடும்பத்தினர். 0772071569, 0778448028.

## வைரமுத்து கிருஷ்ணன்



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கிருஷ்ணன் (இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தர்) நேற்று (15.11.2010) காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் நித்தியானந்தன் (இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தர்), சச்சியானந்தன் (இ.போ.ச, யாழ்.சாலை), யோகானந்தன் (சுவிஸ்), சிவானந்தன், கமலாதேவி, சந்திராதேவி (சுவிஸ்), இந்திராதேவி (ஆசிரியை, கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்), சுவர்ணாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரலிங்கம் (இளைப்பாறிய நீர்விநியோகசபை உத்தியோகத்தர்), கதிர்காமு (சுவிஸ்), சிவகுருநாதன் (இ.போ.ச யாழ்சாலை), உதயகுமார், இந்திராணி, சர்வேஸ்வரி, சாலினி (சுவிஸ்), வளர்மதி (ஆசிரியை, முல்/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.11.2010) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊறல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மத்தி, குமரநகர். 0217902461 (106036) தகவல்: குடும்பத்தினர்.

# ஆங்கில மொழிப்பயிற்சி

சாவகச்சேரி, நவ. 16

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் மேலதிக மொழிப்பயிற்சியின் ஆங்கில மொழிப்பயிற்சி நாளை புதன்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச நிலைய இணைப்பாளர் வி.திருச்சபேசன் அறிவித்துள்ளார்.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்களும் குறித்த தினத்தன்று சமுகம் தந்து பயிற்சிகளில் இணைய முடியு மென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-16)

# இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிகள் பரிசீலனை செய்யப்படுமா என்று இன்னசிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியபோது பர்ஹான் ஹக் எதுவித கருத்தையும் வெளியிடவில்லை.

நிபுணர் குழு பணிகளை செவ்வனே முன்னெடுத்து வருவதால் ஊடகங்களுக்கு அடிக்கடி கருத்துகளை வெளியிடுவதைத் தவிர்த்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-சி)

# சிறையில் வாடும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று கனடா எதிர்பார்க்கின்றது.

இலங்கை அரசானது உள்ளூர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகளுக்கு இலங்கையின் வடபகுதிக்கு செல்ல அனுமதி வழங்க வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம்.

அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு புனர்வாழ்வு நிலையங்களுக்கும், முன்னாள் போராளிகளை அடைத்து வைத்திருக்கும் சிறைக்கூடங்களுக்கும் செல்வதற்கு முழுமையான அனுமதியை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது.

அத்துடன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது பான் கீ-மூனால் அமைக்கப்பட்ட ஆலோசனைக்குழுவின் அனுபவ ரீதியான ஆலோசனை களைக் கேட்டுப்பெறுவது அனுகூலமானது.

கனடா அரசானது தனது கொள்கைகளான சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள், சட்டத்திற்குக் கட்டுப்படுதல் ஆகியவற்றை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கும்.

இப்படி அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-11)

# திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமைநேர மாற்றத்தின் போதும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குப் பாதுகாப்புத் தரப்பினரால் அழுத்தங்கள் விடுக்கப்பட்டதாகவும், ஆயினும் ஊழியர்கள் அவற்றைப் பொருட்படுத்தாமல் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்ததாகவும் அனைத்து நிறுவன ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னணி நிறுவனங்களானபெய்ன்ட் அன்ட ஜெனரல் நிறுவனம், அக்வா பக்கே ஜிங்க நிறுவனம், லிட்டில் லயன் அசோசியேட்ஸ் உள்ளிட்ட முக்கிய நிறுவனங்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டன என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)


## தேவை

அரைக்கும் ஆலை, மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு, ரயர் வேக்ஸ் என்பனவற்றில் அனுபவம் ...
தொ.பே. 0776539227



JOB Skills எந்த வேலையில் சேர்வதற்குமான ஆளுமை விருத்தியுடன் கூடிய தொழில் பயிற்சி

"Certified Medical Assistant" (An US Curriculum)

மருத்துவத்துறையில் பணிபுரியும் உங்கள் கனவை நனவாக்கத் தகுதியானவர்களிடமிருந்து ஒரு அரிய சந்தர்ப்பம். தனியார் வைத்திய சாலைகளில் உடனடி வேலைவாய்ப்புடன்கூடிய பயிற்சிநெறியை லாவா வைத்தியசாலையில் சர்வதேச கல்வித்திட்டத்திற்கு அமைவாகத் தகுதியான வைத்திய விரிவுரையாளர்கள் மூலம் பெற்றிடுங்கள்.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மருத்துவ உதவியாளர் பயிற்சி நெறி (பிரிவு02) CMA US Curriculum



கல்வித்தகமை: G.C.E O/L நாலு பாடங்களில் சித்தி
காலம் : 6 மாதங்கள்(உள்ளகப்பயிற்சியுடன்)
தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம் அனுமதி.

யாழ் வைத்தியசாலை வைத்தியர்களால் விரிவுரைகளும் செயல்முறை பயிற்சிகளும் வழங்கப்படும்.

விபரங்களை இணையத்தில் பார்வையிடலாம்.www.kugroup.info
Call: 0777302882
உள்ளக பயிற்சி வழங்குவோர்:
Lava Hospitals
Quality Assured
City Guilds Qualified

Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0777302882 | # 75,Temple Road,Jaffna | www.kugroup.info



## மணமகன் தேவை

1999ஆம் ஆண்டு மத்திய கிழக்கில் வேலை பார்க்கும் வாலிபனை மணம் செய்து கிட்டத்தட்ட 6 மாத காலத்தில் குடும்ப வாழ்க்கையை இழந்த 33 வயதுடைய அழகான மணமகளுக்கு வரன் தேவைப்படுகிறார். முன்னைய வாலிபர் விபத்தில் அகால மரணமடைந்தார். இப் பெண்ணுக்குரிய பொருத்தமான மணமகன் உள்நாட்டிலோ அன்றி வெளிநாட்டிலோ எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:- 021 321 6221, 0778524437


## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

### திரு. பத்மநாதன் கணநாத்



இன்று (16.11.2010) பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற HNDA பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது சக ஊழியர்

திரு. பத்மநாதன் கணநாத்

சீர்பெற்ற கல்வி தனில் சிறப்புறவே கணநாத் | நீர் பெற்ற உயர்விற்காய் மனமுவந்து வாழ்த்துகின்றோம்

முகாமையாளரும், ஊழியர்களும்
லக்ஷ்மி ஏஜென்சி, லக்ஷ்மி ஒகனைசேஷன்.


## தேவை

1. மெக்கானிக் - டீசல் வாகனங்கள் திருத்துதல், பராமரித்தலில் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ளவர்கள் தேவை.

2. சாரதி - கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் தேவை. தமது சுய விவரங்களுடன், அனுமதிச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் மற்றும் இரண்டு நற்சான்று பத்திரத்துடன் 21.11.2010 க்கு முன் நேரில் வரவும்.

உதவி நிர்வாக முகாமையாளர், யூரோவில், 866, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 16.11.2010.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர் திரு. நடராஜா விமல குமார் அவர்கள் 06-10-2010 அன்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினைப் பெற்றமையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், நலன்புரிக் கழகம்
(106072) யா/ சென்மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம். (O.L.R)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் நடைபெற்ற தேசிய எல்லே விளையாட்டுப் போட்டிக்கு மாணவர்களை அழைத்துச் சென்றுவர போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தந்த கௌரவ பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

கே.என். டக்ளஸ்தேவானந்தா

அவர்களையும் இதற்கு உறுதுணையாக இருந்த வடமராட்சி ஈ. பி. டி. பி அமைப்பாளர்



ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மணற்காடு றோ. க. த.க. பாடசாலை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சற்றேனும் பயன் கிடைக்குமா?

✱ யாழ்ப்பாண மாவட்டத்தில் நாங்கள் மேற்கொண்ட விசாரணை அமர்வுகளின் போது, பொதுமக்கள் வெளியிட்ட பிரச்சினைகள் தொடர்பாக அரசு கவனம் செலுத்தக் கூடிய வகையிலான பரிந்துரையை நல்லிணக்க ஆணைக்குழு முன்வைக்கும்.

✱ 1981 இல் நடைபெற்ற யாழ்.நூலக எரிப்பு, 1983 இல் நிகழ்ந்த இனக்கலவரம் என்பன இலங்கை வரலாற்றில் அசிங்கமான, கறைபடிந்த சம்பவங்கள். இவ்வாறான சம்பவங்கள் இனியும் ஏற்படாதிருக்கும் வகையிலும், ஒரு நாட்டில் பல்லினங்கள் என்ற அடிப்படையிலும் எமது இறுதி அறிக்கையில் சிபார்சுகள் அமையும்.

யாழ்ப்பாணத்தில் நான்கு நாள்கள் தனது விசாரணைகளை மேற்கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டீ. சில்வா மேற்கண்டவாறாக உறுதிமொழி வழங்கி உள்ளார். நான்கு நாள் களாக பல்வேறு இடங்களில் நடைபெற்ற அமர்வுகள் ஒவ்வொன்றினதும் இறுதியில் அவர் தமது மனதில் பதிந்த, உறைத்த விடயங்கள் குறித்து மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடியதான முடிவுரைகளை வெளிப்படுத்தினார்.

தமிழ்ப் பகுதிகளில் கடந்த ஐந்து தசாப்தங்களாக மக்களுக்கு ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகள் தனித் தனியாக விவரிக்கப்படின் அவை பல்லாயிரக்கணக்கான தொகுதிகளாக விரியும்.

அவ்வப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் தமிழ்மக்கள் இந்த நாட்டின் பிரசைகள் அல்லர், அவர்களின் ஜனநாயக உரிமைகளை மட்டுமன்றி, வாழ்வுரிமைகள் உட்பட்ட எந்த நலன்களையும் பறித்தெடுத்துத் துவசம் செய்யலாம் என்ற மமதையான போக்கில் வழிநடந்தன.

காலத்துக்குக் காலம், அரசுக்கு அரசு, தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைநிலைமைக்குக் கொண்டு செல்லும் அராஜகத்திலேயே கவனம் செலுத்தின. தங்கள் அரசியலையும், அதிகாரத்தையும், பதவிகளையும், தக்கவைத்துக் கொள்வதற்காக போட்டி போட்டுக் கொண்டு தமிழர்கள் மீது ஒடுக்குமுறையையும், அராஜகத்தையும் ஏவிவிட்டன.

தாங்கள் நாட்டின் பெரும்பான்மையினர்; அதனால், தாங்கள் செய்யும் இனரீதியான அட்டூழியங்களையும், அடக்குமுறைகளையும், அநீதிகளையும் தாங்கிக் கொண்டு அல்லது ஏற்றுக்கொண்டு தமிழர்கள் வாழ வேண்டும் என்ற திமிர் சிங்கள அரசியல் தலைவர்களிடம், அவர்கள் ஐ.தே. கட்சியைச் சேர்ந்தோராயினும் சரி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தோராயினும் சரி, அவற்றிடையே சுயநலத்தின் பால் உண்டான பிரிவுகள், அந்தப் பிரிவுகளால் உருவெடுத்த அரசியல் தலைமைத்துவங்களாயினும் தமிழர்களின் விரோதிகளாகவே ஆட்சி செய்ய விரும்பினர்.

ஜனநாயகம், நீதி, நியாயம் என்பனவற்றைத் துடைத்தெறியும் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற மக்கள் விரோத ஆயுதங்களால் தமிழர்கள் மிதிக்கப்பட்டார்கள்; ஒடுக்கப்பட்டார்கள்; உயிர்ப் பலி எடுக்கப்பட்டார்கள்.

மிக அண்மைக் காலங்களில் மேற்கூறிய சட்டங்களின் கீழ் தமிழ் மக்கள் எண்ணுக் கணக்கின்றி கண்டபடி கைது செய்யபட்டனர், கடத்தப்பட்டனர், சிறையிடப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர், கொல்லப்பட்டனர். மனித நாகரிகத்துக்கும் ஜனநாயகத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இன அழிப்பும், உரிமைப் பறிப்பும், தொடரப்பட்டு வந்தன.

இவை குறித்து சன்சோனிக் கமிஷன், லயனல் பெர்ணான்டோ ஆணைக்குழு என்று காலத்துக்குக் காலம் பலப்பல விசாரணைக் குழுக்கள், ஆணைக்குழுக்கள் விசாரணை நடத்தின; அறிக்கைகள் சமர்ப்பித்தன. ஆனால் நல்லிணக்கத்துக்குப் பதிலாக அராஜகம், அட்டூழியம், இன அழிப்பு என்பன தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவும் முந்திய கண்துடைப்பு ஆணைக்குழுக்கள் போலன்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களின் உயிர், உடைமை, அடிப்படை உரிமைகள் கிடைக்க, காலம் தாழ்த்தாது, மறந்துபோன கதையாக மாற்றாமல், தனது சிபார்சுகளை வழங்க வேண்டும்.

ஏற்கனவே பல தடவைகள் இப்பத்தியில் குறிப்பிடப்பட்டது போன்று, இலங்கை அரசு மீதான போர்க் காலக் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் சர்வதேச விசாரணையைத் திசைதிருப்புவதற்கான அரசின் பிரதான உத்தியின் பெறுபேறே இந்த ஆணைக்குழு.

அவ்வாறு இருந்த போதிலும், தமிழ் மக்களுக்கு அரசாங்கம் - அதன் ஆயுதப் படைகள், அரச நிர்வாகப் பிரிவுகள், இழைத்த மனிதாபிமானமற்ற, மனிதநேய மற்ற, வாழ்க்கைச் சீரழிவு, அநியாயங்கள், அநீதிகளைக் களைவதற்கு ஆணைக்குழு உதவமுடியும்; உதவ வேண்டும்.

1956 ஆம் ஆண்டின் பின்னர் நியமிக்கப்பட்ட பலப் பல ஆணைக்குழுக்களின் சிபார்சுகளுக்கும் யோசனைகளுக்கும் நேர்ந்த கதி நல்லிணக்க ஆணைக்குழுவுக்கும் அதன் அறிக்கைக்கும், சிபார்சுகளுக்கும் நேர்ந்துவிடக் கூடாது.

இந்த நாட்டின் சாதாரண தமிழ்ப் பொதுமக்களின் நாளாந்த வாழ்வின் துயரங்கள், அவலங்கள் நீங்க வகை செய்வதற்கு இந்த ஆணைக்குழு மனிதநேய, மனிதாபிமான வகையில் உதவுமானால் தற்போதைக்கேனும் அது நியமிக்கப்பட்டதன் பலன் கிடைக்கும். தற்காலிகமாக வேனும் அதற்கேனும் வழி திறக்குமா?

# வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்காக கட்டுப்பாடுகளைத் தளர்த்துகிறது இலங்கை

### மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு,நவ.16

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள விரும்பும் வெளிநாட்டவர்களுக்கான நடைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் இலங்கை பெரிதும் தளர்த்தவுள்ளது என மத்திய வங்கி அறிவித்திருக்கிறது.

குறித்த இந்தத் தேவைகளுக்காக அதிகளவிலான எழுத்து வேலைகளைச் செய்யவேண்டியிருப்பதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நீண்ட பல நாள்களாகவே முறையிட்டு வந்திருக்கிறார்கள்.

நவம்பர் 22ஆம் திகதிக்கு முன்னதாக நடைமுறைக்கு வரவுள்ள இந்தத் தளர்வுகளின் அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் இலாபமாகப் பெறும் பணத்தை இலகுவாகப் பெறமுடியும் என மத்திய வங்கியின் மூத்த பொருளியலாளர் கே.டீ. ரணசிங்க ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு கடந்த வெள்ளியன்று கூறியுள்ளார்.

இந்த புதிய நடைமுறையானது இலங்கையைச் சேர்ந்தவர்கள் வேறு நாடுகளில் முதலிடுவதையும் இலகுவாக்குகிறது. புதிய முறைமையானது அதிக தாராளத்தன்மை கொண்டதாக இருப்பதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தாங்கள் விரும்பயவாறு இலங்கைக்கு வந்து செல்லலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பணப்புழக்கத்திலிருந்த கட்டுப்பாடும் தளர்த்தப்படும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரல் கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தார்.

2008ஆம் ஆண்டு இலங்கை நிதி நெருக்கடியினைச் சந்தித்த நிலையில் வெளிநாட்டு நாணய மாற்றின் மீதான கட்டுப்பாட்டினைத் தளர்த்துவதற்கு மத்திய வங்கி விரும்பவில்லை.

அனைத்துலக பொருளாதார நெருக்கடியைச் ஏற்பட்டபோது இலங்கையில் இருந்து திடீரென 1 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணம் பெறப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருந்தமை இங்கு குறிப்படத்தக்கது. (ம)

# மேற்குநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை; ஊக்குவிக்க இலங்கை விசேட திட்டம்

கொழும்பு,நவ.16

மேற்கு நாடுகளைச் சேர்ந்த உல்லாசப் பயணிகளைக், குறிப்பாக பிரித்தானிய உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் புதிய முனைப்புக்களில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

'புதுப்பிக்கப்பட்ட சிறிலங்கா' என்ற தலைப்பிலமைந்த உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பரப்புரையினைக் கடந்த வாரம் இலங்கை உல்லாசப் பயணத்துறை லண்டனிலுள்ள உலக போக்குவரவுச் சந்தையில்' ஆரம்பித்திருந்தது.

நியூயோர்க் ரைம்சினது தகவலின்படி 2010ஆம் ஆண்டின் சிறந்த உல்லாசப்பயணிகளுக்கான மையமாக இலங்கை அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2011ஆம் ஆண்டின் வளர்ந்துவரும் ஆடம்பர உல்லாச மையமாக இலங்கை மாறியிருக்கும் என இலங்கை உல்லாசப் பயணத்துறையினர் வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இலங்கை உல்லாசப் பயணத் துறைக்கு அதிகம் பங்களிப்புச் செய்பவர்களாக பிரித்தானிய மற்றும் இந்திய உல்லாசப் பயணிகளே இருக்கிறார்கள். இங்கு வருகைதரும் வெளிநாட்டவர்களில் வரிசையில் பிரித்தானியர்களின் எண்ணிக்கையே இரண்டாம் நிலையில் இருப்பதாகவும் ஆனால் பிரித்தானிய உல்லாசப்பயணிகள் இலங்கையில் அதிகநாள்களில் தங்கியிருந்து ஆடம்பரச் செலவுகளை மேற்கொள்வதாகவும் இலங்கை உல்லாசப் பயணத்துறையினர் கூறு கிறார்கள்.

கடந்த ஆண்டு இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் வருகை 44 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததாக இலங்கை உல்லாசப் பயணத் துறையின் பிரித்தானியப் பணிப்பாளர் சஞ்சிக பெரேரா சய்திச் சேவை ஒன்றுக்குக் குறிப்பிட்டிருக்கிறார்.

"இதுவரைக்கும் இலங்கை வருகைதரும் வெளிநாட்டவர்களில் 30 சதவீதத்தினர் பிரித்தானியர் களே. உல்லாசப் பயணிகளின் வரு கைப் போக்கு மற்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கும் பதிவுகளின் அடிப்படையில் நோக்குடத்து 2010 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த ஆண்டு சிறிலங்காவிற்கு வந்த பிரித்தானியர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தொட்டுவிடும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் சமமாகவே கருதப்படுவார்கள்

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு,நவ.16

உள்நாட்டில் இடம்பெயர்ந்த சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் அனைவரும் சமமாகவே கருதப்படுவார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட 20ஆவது ஆண்டு நிறைவு தொடர்பாக கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கு முஸ்லிம்களுக்கு புலிகளால் மறுக்கப்பட்ட உரிமைகள் மீளக் கிடைக்கவுள்ளன.

உள்நாட்டு மற்றும் அனைத்துலக உதவி நிறுவனங்கள் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் சமமாகவே மதிக்க வேண்டும். அவர்களை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பிரித்துப் பார்க்கக் கூடாது.

அனைவரும் சமமானவர்கள் என்ற எண்ணத்துடனேயே சேவையாற்ற வேண்டும்.

இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அனைவரையும் மீளக்குடியமர்த்தும் பாரிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அனைத்து இடம்பெயர்ந்த மக்களும் விரைவில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள்.

இடம்பெயர்ந்த அகதி ஒருவர் எனது அமைச்சரவையில் அமைச்சராக இருப்பதையிட்டும், ஒரு முன்னாள் போராளி முதலமைச்சராக இருப்பதையிட்டும் நான் பெருமிதம் கொள்கின்றேன். (ம)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 1 | | 17.11.2010 |
| | | புதன்கிழமை |
| திதி: | : | ஏகாதசி |
| | | மு.இ.07.09 வரை |
| நட்சத்திரம் | : | உத்தரட்டாதி |
| | | [illegible] வரை |
| [illegible] | : | [illegible] வரை |
| ராகுகாலம் | : | 12.08-01.38 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கல்சியம் காபைட் இறக்குமதியில் சீன நிறுவனம் மோசடி

கொழும்பு,நவ.16

ஒட்டுவேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் கல்சியம் காபைட்டுக்குப் பதிலாக வெறும் பாறைக் கற்களை கொள்கலனில் இலங்கைக்கு அனுப்பும் ஏமாற்று வேலையில் சீன நிறுவனம் ஒன்று ஈடுபட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

கொழும்பலுள்ள ஐந்து முன்னணி இயந்திராதி பொருள்கள் விற்பனையாளர்கள் சீன நிறுவனம் ஒன்றிடம் தனித்தனியாக கல்சியம் காபைட்டைக் கொள்வனவு செய்திருந்தனர். இதன் மதிப்பு சுமார் 10 மில்லியன் ரூபாவாகும்.

இதையடுத்து கொழும்புக்கு ஐந்து கொள்கலன்கள் சீன நிறுவனத்தினால் இவை கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டன.

ஆனால் அவற்றில் கடைசி இரண்டு கொள்கலன்களையும் திறந்து பார்த்தபோது அவற்றில் வெறும் பாறைக்கற்களே இருந்தன.

பிரதி சுங்கப் பணிப்பாளர் ஹெற்றியாராச்சி முன்னிலையிலேயே அவை திறந்து பரிசோதிக்கப்பட்டன.

அந்த இரண்டு கொள்கலன்களிலும் பாறைக்கற்களே இருந்ததாக அவற்றைப் பரிசோதித்த பிரதி சுங்கப் பணிப்பாளர் ஹெற்றியாராச்சி தெரிவித்தார்.

குறிப்பிட்ட நிறுவனம் கடந்த இரண்டு ஆண்டுகளாகவே கல்சியம் காபைட்டை இலங்கைக்கு அனுப்பி வந்துள்ளது.

ஆனால் இந்தமுறை இடம்பெற்றுள்ள இந்த மோசடி இறக்குமதியாளர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இறக்குமதியாளர்கள் இதுகுறித்து கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதுபற்றி தாம் விசாரணைகளை நடத்துவதாகவும் இறக்குமதியாளர்களுக்கு இழப்பீடு பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் சீனத் தூதுரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம)

## அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வருடாந்தப் பொதுக்கூட்டமும்-புதிய நிர்வாகிகள் தெரிவும்

காலம்:- 28.11.2010 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- பிற்பகல் 2 மணி

இடம்:- கல்லூரி மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

14.11.2010 (சி/572863) செயலாளர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று
16/11/2010 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 2009 ஆம் ஆண்டுக்கான 7வது பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும் எங்கள் அன்பு மகள்

**இராஜசிங்கம் சோபனா**
(H.N.D.A 2006 / 2009)

அவர்களை சிறப்புற வாழ வாழ்துகின்றோம்

வாழ்த்துபவர்கள் :-
அம்மா, அப்பா, தம்பி

டச் றோட், சித்தங்கேணி

## கொழும்புப் பாடசாலைகளில் தவணைப் பரீட்சை பிற்போடப்பட்டது

கொழும்பு மாவட்டத்திலுள்ள அரச பாடசாலைகளில் எதிர்வரும் 15ஆம், 16ஆம், 18 ஆம் திகதிகளில் நடத்தப்பட விருந்த மூன்றாம் தவணைப் பரீட்சைகளைப் பிற்போடுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவி யேற்பு வைபவம் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த வைபவத்தில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ள உள்ளமையாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி தினங்களில் நடைபெற இருந்த பரீட்சைகள் எதிர்வரும் 22ஆம், 23 ஆம், 24ஆம் திகதிகளில் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## வட்டு. ஆலயத்தில் இன்று கந்தஹோமம்

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோயிலில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 7 மணி முதல் கந்தஹோமம் இடம்பெறவுள்ளது.

விசேட பூசை, அபிஷேகத்துடன் இந்த ஹோமம் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ஐ)

## தமிழ்த்தினப் போட்டியில் சென்.ஜோன்ஸ்க்கு முதலாம் இடம்

நீண்ட கால இடைவெளியின் பின்னர் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி தேசிய மட்ட தமிழ் தினப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பில் நடைபெறும் தேசிய மட்டத்திலான பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற வில்லிசைப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு இராமநாதன் கல்லூரியில் நேற்று இப் போட்டி இடம் பெற்றது. (ஒ-86)

## அறிவித்தல்

வலி. கிழக்கு பிரதேசசபை,
உப அலுவலகம்,
உரும்பிராய்.
ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 01, யாழ். வீதி 3ஆம் ஒழுங்கை, ஆதன இல. 07

ஆதன இலக்கம் 07, யாழ். வீதி 3ஆம் ஒழுங்கை, 01 ஆம் வட்டாரத்தில் சொந்தக்காரர் உ.கோ. எஸ். கந்தையா பெண் மகேஸ்வரி எனும் பெயரிலுள்ள ஆதனத்திற்கு அமிர்தநாதன் கிறிஸ்ரிறொபின் பெண் பிரியதர்ஷினி என்போர் குறித்த ஆதனம் தமக்கு உரிமையானது என உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதன வரிப் பதிவேட்டில் தனது பெயரை மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் எவரேனும் இருப்பின் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து அமிர்தநாதன் கிறிஸ்ரிறொபின் பெண் பிரியதஷினி என்னும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவன்
செல்வன் **தயாளன் அபிநாத்** அவர்கள்

2010ஆம் ஆண்டுக்கான தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு ஒன்றுக்கான பேச்சுத் திறன் போட்டியில் பாடசாலை மட்டம், கோட்டமட்டம், வலய மட்டம், மாகாணமட்டம் ஆகியவற்றில் முதலிடம் பெற்று 13.11.2010 அன்று கொழும்பில் நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று எமது பாடசாலையைப் பெருமைப்படுத்தியுள்ளார். அவரை நாம் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேன்மேலும் கல்விப்பாதையில் வெற்றி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.ச., பழை.மா.ச.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,
யாழ்ப்பாணம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்றையதினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் எங்களுடைய சகோதரனின் மகளாகிய

**கருணாநிதி சுகிர்தா** அவர்கள் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) என்னும் பட்டத்தைப் பெறுகிறார். இவரைப் பாராட்டி வாழ்த்தி மேலும் மேலும் பல பட்டங்களைப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
V.அமிர்தலிங்கம் (Retired Principal),
V.கிருஸ்ணசாமி (Engineer), V.வன்னியராம் (G.S)

## சேவை நலன் பாராட்டு



**திருமதி தனேஸ்வரி திருக்குமரன் B.A, Dip. in Ed., SLTS I.**
உப அதிபர்

எமது பாடசாலையில் நீண்ட காலமாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் சேவையாற்றி 01.08.2010 இல் ஓய்வுபெற்ற திருமதி. தனேஸ்வரி திருக்குமரன் அவர்கள் சேவைக்காலத்தில் தமது கடமைகளையும் பாடசாலை முகாமைத்துவச் செயற்பாடுகளையும் சிறப்புற ஆற்றியுள்ளார். அவரது அர்ப்பணிப்புடன் கூடிய சேவை எமது பாடசாலையின் வளர்ச்சியில் மிகப்பெரிய பங்கை வகித்துள்ளது. அவரின் ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமானதாகவும் சீரும் சிறப்புமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சேவை விவரம் - ஆசிரியராக
- ★ மன்/ புதுக்குடியிருப்பு அ.மு.க. பாடசாலை 01.11.1976 - 31.08.1985
- ★ மன் / மாவிலங்கேணி றோ.க.த.க. பாடசாலை 01.09.1985 - 31.12.1985
- ★ மன் / சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி 01.01.1986 - 30.04.1986
- ★ யா / கோப்பாய் மகா வித்தியாலயம் 01.05.1986 - 31.12.1990

உப அதிபராக
- ★ யா / கோப்பாய் மகாவித்தியாலயம் 01.01.1991 - 01.08.2010

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், G.C.E. (O/L) 2007, 2008, 2009 மாணவர்கள்
யா/ கோப்பாய் மகா வித்தியாலயம். (சி- 572873)

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இல. 2318
திகதி 14.11.2010

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து K வெற்றி எண்கள் 5 4 4 6 7 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | K | 5 | 4 | 4 | 6 | 7 | 1 | ரூபா. 17,301,845/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 5 | 4 | 4 | 6 | 7 | 1 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 4 | 4 | 6 | 7 | 1 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 4 | 6 | 7 | 1 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 78 |
| 4ம் பரிசுகள் | | | | | 6 | 7 | 1 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 739 |
| 5ம் பரிசுகள் | | | | | | 7 | 1 | ரூபா. 100/= | பரிசுகள் | 7321 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 1 | ரூபா. 20/= | பரிசுகள் | 72939 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 5 | 4 | 4 | 6 | 7 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 5 | 4 | 4 | 6 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 71 |
| 9ம் பரிசுகள் | | 5 | 4 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 724 |
| 10ம் பரிசுகள் | | 5 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 7230 |
| 11ம் பரிசுகள் | K | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 29124 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 17,477,052.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,667,260.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 2470662, 4607000 Hotline: 2433631
www.nlb.lk

## மனமகிழ்வுடன் மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்



செல்வி
**தவரத்தினம் கபிலா**

இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A) என்னும் பட்டம் பெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

இவர் இன்னும் பல பட்டங்கள் பெற்று சகல சௌபாக்கியமும்பெற அறுகம்புல விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா - தவரத்தினம்
அம்மா - செல்வராணி
தம்பி - கோகுலவதனன்
தங்கை - கஸ்தூரி

றோயல் - மல்ரி - சென்ரர்
பெரிய அரசடி,
கண்டி வீதி,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன அரசின் நிதியுதவியுடன் வடக்கில் அபிவிருத்தித் திட்டம்

யாழ்ப்பாணம், நவ.16

சீன அரசின் நிதியுதவியுடன் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வட பகுதியில் பல்வேறு வீதிகள் புனர் நிர்மாணம் செய்யப்பட வுள்ளன.

காப்பெற் முறை மூலமும், குருணிக்கற்கள் பரவித் தார் கலவை இடும்முறை மூலமும் வீதிகள் புனர் நிர்மாணம் செய் யப்படவுள்ளன.

காப்பெற் முறை மூலம் 153 கிலோ மீற்றர் நீளமான கண்டி - யாழ் வீதி புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

அதேபோல் யாழ். பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, புத் தூர் - மீசாலை வீதி, யாழ். காங் கேசன்துறை வீதி ஆகியனவும் இந்த முறை மூலம் புனர்நிர்மா ணம் செய்யப்படவுள்ளன.

இந்த நான்கு வீதிகளும் உள் ளடங்கலாக 83.63 கிலோ மீற்றர் நீளம் புனரமைக்கப்பட வுள்ளது.

குருணிக்கற்கள் போட்டு தார்க்கலவை இடும்முறை மூலம் 42.4 கிலோமீற்றர் நீளமான முல்லைத்தீவு - கொக்கிளாய் - புல்மோட்டை வீதியும் 52.6 கிலோ மீற்றர் நீளமான ஒட்டு சுட்டான் - நெடுங்கேணி வீதி மற்றும் முல்லைத்தீவு - புளியங் குளம் வீதி ஆகியனவும் புனர மைப்பு செய்யப்படவுள்ளன.

சீன நாட்டின் சீன ரெயில்வே நம்பர் 5 எஞ்சினியரிங் குறுப் கம்பனி, சீன நஷனல் ஏறோ ரெக்னோலோஜி இன்ரநஷனல் எஞ்சினியறிங் கோப்பறேசன், சினோ கைட்றோ கோப்பறேசன் ஆகிய கம்பனிகளாலேயே மேற் படி வீதிகளின் புனரமைப்பு வேலை கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகள் அனைத்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபையி னால் நியமிக்கப்பட்டுள்ள மூன்று திட்டப்பணிப்பாளர்களின் கீழ் இடம்பெறவுள்ளன. (ம- 14)

# யாழ்.நகர வீதிகளுக்கு 'காப்பெற்'; விரைவில் நிர்மாணப்பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.16

நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சு நிதி கள் யாழ்.நகரில் உள்ள வீதிகள் சில 'காப்பெற்' முறை மூலம் புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இவ்வாறு 3 கிலோ மீற்றர் நீளமான மானிப்பாய் - காரை நகர் வீதி 2.56 கிலோமீற்றர் நீளமான சுண்டுக்குளி- கொழும் புத்துறை வீதி, 3.62 கிலோ மீற்றர் நீளமான கச்சேரி கடற் கரை வீதி, 2.41 கிலோமீற்றர் நீளமான நல்லூர் - ஓட்டுமடம் வீதி, ஒரு கிலோமீற்றர் நீளமான பொன்னாலை - பருத்தித்துறை வீதி, ஒரு கிலோ மீற்றர் நீள மான யாழ் - பண்ணை- ஊர்கா வற்றுறை வீதி, 3.43 கிலோ மீற் றர் நீளமான சங்கிலித்தோப்பு - செம்மணி வீதி, 1.21 கிலோ மீற்றர் நீளமான நாவாந்துறை - ஓட்டுமடம் வீதி என மொத்த மாக 18.23 கிலோமீற்றர் நீள மான வீதிகளே இவ்வாறு புனர் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறி யியலாளர் எந்திரி வி. சுதாகரின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந் தப் புனரமைப்பு வேலைத் திட்டங் கள் நடைபெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது (எ- 14)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ரூ.85 மில்லியன் செலவில் அபிவிருத்தி

## வழுக்கையாறு புனரமைப்புத் திட்ட நிதியில் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,நவ.16

வழுக்கையாறு புனரமைப்புத் திட்டத்திற்கு 2010 இல் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட் டது.

இதில் 85 மில்லியன் ரூபா வலி.தென்மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச செயலர் பிரி விற்கு ஒதுக்கப்பட்டு அபிவி ருத்தி இடம்பெற்றுள்ளது என்று நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் க.கருணாநிதி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்: இவ்வருடம் நவம்பர் மாத இறுதிக்குள் 17 வேலைத்திட் டங்கள் பூர்த்தி செய்யப்படும்.

பராமரிப்பு வேலைகள் தொடர்பில் விவசாய சம்மேள னங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் வழுக் கையாற்று புனரமைப்புப் பணி கள் மிக விரைவாக இடம்பெற்ற படியால் மேலும் 100 மில்லி யன் ரூபா 2011 இன் அபிவி ருத்தி மேலதிக ஒதுக்கீடாக கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டத்தினை விவசாய சம்மேளனங்களும் பொறுப்பேற்று செயற்படுத்த வேண்டும்.

பொறுப்பற்று நடந்தால் இத் திட்டம் கால்நடைகளால் அழியும் அபாயம் விரைவில் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம- 302)

# குடியிருப்புக் காணிகளில் மண் அகழ்வு; மண்ணரிப்பு ஏற்படும் அபாயநிலை

மணியம் தோட்டப்பகுதி யில் மணல் விற்பனை செய்வோர் குடியிருப்புக் காணிகள் அதனை அண்டிய பகுதிகளில் ஆழமாக நிலத்தைத் தோண்டி மணல் அகழ்ந்து வருகின்றனர்.

இதனால் அப்பகுதிக் காணி களில் மண் அரிப்பு அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மணியந்தோட்டம், 6ஆம் குறுக்கு எல்லையில் தனியாருக் குச் சொந்தமான காணியில் இருந்தே மணல் விற்பனை செய் யப்படுவதாகக் கூறப்படு கின்றது.

நிலமட்டத்தில் இருந்து ஆழ மாக மணல் அகழப்படுவதால் மழைநீர் தேங்கிநின்று சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவது மட்டுமன்றி அப்பகுதி காணிகளின் மண் அள் ளுண்டு செல்லும் நிலையும் காணப்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்பாளர்களைப் பாதிக் காத வகையில் இந்நடவடிக்கை யைக் கட்டுப்படுத்த உரிய அதி காரிகளின் நடவடிக்கை வேண்டு மென கேட்டுள்ளனர். (ம-204-135)

# தொழில் முயற்சியாளர்களுக்கான இயந்திர உபகரணக் கண்காட்சி

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று

யாழ்ப்பாணம்,நவ.16

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட் டில் தொழில் முயற்சியாளருக் கான இயந்திர உபகரணக் கண் காட்சியும், கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை யாழ், வீரசிங்கம் மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தி னராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ்தேவானந்தா கலந்து கொள் வார். இவருடன் பிரதியமைச்சர் வீரகுமார திசநாயக்க கைத்தொழில் அபிவிருத்திச் சபைத் தலை வர், பொதுமுகாமையாளர் ஆகியோ ரும் கலந்துகொள்வர்.

கண்காட்சியில் உள்ளூர் மற் றும், தென்னிலங்கை உற்பத்திப் பொருள்களும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உற்பத் திகளான இயந்திர உபகரணங் களும் காட்சிப்படுத்தப்படவுள் ளன.

அத்துடன் தொழில் முயற்சி யாளர்களுக்கான தொழில் மேம் படுத்தல் ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதால் சம்பந் தப்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பதில் பிரதிப்பணிப்பாளர் எஸ். சிவ கெங் காதரன் கேட்டுள்ளார். (ஒ- 10)

# மாணவர் மத்தியிலிருந்து அரசியற் தலைவர்கள் உருவாகி நாட்டுக்குச் சேவை புரிய வேண்டும்

## புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி நிகழ்வில் நாமல் ராஜபக்ஷ

யாழ்ப்பாணம், நவ. 16

நாட்டு மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய அரசியல் தலைவர் கள், மாணவர்கள் மத்தியிலிருந்து உருவாக வேண்டும். அவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை புரிய முன்வர வேண்டும்.

இவ்வாறு கூறினார் அம்பாந் தோட்டை நாடாளுமன்ற உறுப் பினர் நாமல் ராஜபக்ஷ.

வடமாகாண வீதி அபிவி ருத்தி அதிகார சபையால் ஏற் பாடு செய்யப்பட்ட வடபகுதிக் கான வீதி புனரமைப்புத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் புத்தூர் சோமஸ் கந்தக்கல்லூரியில் பிரதான மண்ட பத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே நாமல் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் மேலும் உரை நிகழ்த் தும் போது -

முப்பது வருடங்களுக்குப் பின்னர் வடபகுதியில் நெடுஞ் சாலைகள் பலவும் புனரமைக் கப்படவுள்ளன.

உலகத் தரத்திலான இந்தப் புனரமைப்புப் பணிக்கென ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார். அது மட்டுமன்றி கல்வி கற்கக் கூடிய, தொழில் செய்யக் கூடிய சுதந்திரமான சூழ் நிலையையும் ஜனாதிபதி மக்க ளுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளார்.

பெற்றோர்களுக்கும் இளஞ் சமூகத்தினருக்கும் பெரிய பொறுப்பு உள்ளது. நீங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு ஒத் துழைக்க வேண்டும். அப்போது தான் கிராமம், நகரம் என்பன முன்னேற்றம் காண முடியும்.

கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் வைத்தியரா கவோ, பொறியியலாளராகவோ, ஆசிரியராகவோ உருவாகின் றதைப் போன்று நல்ல அரசி யல் தலைவர்களாகவும் உரு வாக வேண்டும். அதன் மூலம் நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டும்.

சீர்குலைத்துள்ள வட பகுதி யின் அபிவிருத்திக்காக 'வடக் கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் ஜனாதிபதியுடன் பஸில் ராஜபக்ஷ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரும் இணைந்து ஊக்கத் துடன் சேவைசெய்து வருகின்றனர்.

இந்தப் பாடசாலையில் உள்ள வீதியைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொள் வேன் என இத்தருணத்தில் உறுதியளிக்கிறேன் - என்றார்.

**அமைச்சர் டக்ளஸ் பேச்சு**

இந்த நிகழ்வின் போது உரை நிகழத்திய பாரம்பரிய மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தவை வருமாறு -

மக்களது உணர்வுகளையும் தேவைகளையும் புரிந்து சேவை வழங்குபவர் நாமல் ராஜபக்ஷ. இவரது தலைமையின் கீழ் பல்வேறு திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களுக்கென அரசியற் தீர்வு குறித்து ஜனாதிபதியுடன் நான் கலந்துரையாடி வரு கின்றேன். அவர் நல்ல தீர்வை முன்வைப்பார் என நம்புகிறேன் - என்றார். (எ-14-72-11)

# காரைநகர் - பண்டத்தரிப்பு பஸ் சேவை உரிய நேரத்தில் இடம்பெற வேண்டும்

## மானிப்பாய் பிரதேச சபைச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

காரைநகர் - பண்டத்தரிப்பு பஸ் போக்குவரத்து உரிய நேரத் திற்கு இடம்பெற வேண்டும். இதன் ஊடாகப் பண்டத்தரிப்பு சந்தை அபிவிருத்தி முழுமை பெறும் என்று வலி. தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் திருமதி பு. சிவலிங்கம் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டம் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார தலைமையில் இடம் பெற்றது.

இதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். காக்கைத்தீவுச் சந்தை யில் முறைகேடாக இடம்பெறும் பாதுகாப்பு வரி தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப் படும்.

நெல்சிப் - திட்டம் மக்கள் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டம் ஆகும்.

நிதி ஒதுக்கீடு கிடைக்கும் பட்சத்தில் கிராமிய ரீதியான அபிவிருத்தி 2010 - 2013 வரை இடம்பெறும்.

மேலும் கட்டுடா இடிகுண்டு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 43 மில்லியன் ரூபா செலவில் கருத் திட்டம் முன்வைத்த போது அபி விருத்தி இடம்பெறவில்லை.

வேறு திட்டத்தின் ஊடாக நிதி பெற்று 2010 இற்குள் அபிவிருத்தி செய்யப்படும் என்றார். (ம 302)

## புதிய உதயம்:



ஊர்வலம் :- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் புதிய இருமாடிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடும்விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் ஊவா மாகாண முதலமைச்சர் சுசீந்திர ராஜபக்ஷ மற்றும் விருந்தினர்கள் [illegible] முதலாவது படத்திலும், முதலமைச்சர் அடிக்கல் நடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு அம்சங்களுடன் 3D மொபைல் போன் இந்தியக் கம்பனி ஸ்பைஸினால் அறிமுகம்



தொலைத் தொடர்புத் துறையில் நாளும் பொழுதும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. எல்லா நிறுவனங்களும் இந்தப் போட்டி உலகில் தங்களை முன்னிறுத்திக் கொள்ள புதுப்புது அறிமுகங்களைச் செய்த வண்ணம் உள்ளன.

அந்த வகையில் 3டி மொபைல் போனை அறிமுகம் செய்து அசத்தியுள்ளது இந்திய நிறுவனமான ஸ்பைஸ் மொபைல்ஸ்.

இது குறித்து ஸ்பைல்ஸ் மொபைல்ஸ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வியூ டி என்று பெயரிடப்பட்டுள்ள பாவனையாளர்கள் முப்பரிமாண (3டி) கண்ணாடி இல்லாமலேயே 3டி உருவத்தை உணரும் வகையில் இந்த மொபைல் போன் வடிவமைக் கப்பட்டுள்ளது.

இந்த மொபைல் போன் பயனாளர்கள் காண்பதற்கேற்ப 2டி மற்றும் 3டி என்று மாறும் தன்மையுடையது.

இந்த மொபைலின் மற்றொரு முக்கிய சிறப்பம்சம் யாதெனில் றிமோட் வொயட் ஆவது ஆகும். இதன் மூலம் போன் பயன்பாட் டில் இல்லாத போது அதனுள் உள்ள விடயங்களை (டேட்டா) மற்றவர்களுக்குத் தெரியாத வண்ணம் ரிமோட் மூலம் அழிக்கலாம். இத்தகைய சிறப் பம்சங்கள் கொண்ட இந்த 3டி மொபைல் போனின் விலை இந்திய நாணயப்படி ரூ. 4,299 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்படிச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



செலிங்கோ ஆயுட் பகுதியின் நெல்லியடியின் கிளையின் வாடிக்கையாளரான திருமதி செல்வபாமா ரவீந்திரன் என்பவரது அகால மரணத்திற்கு பின்னரான இழப்பீட்டுத் தொகையாகிய 2 லட்சத்து 89 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையினை பிராந்திய அபிவிருத்தி முகாமையாளர் ரி.நிறோஜன் வாடிக்கையாளரின் சகோதரியிடம் கையளிப்பதையும் அருகில் நெல்லியடி கிளையின் முகாமையாளர் வி.பாஸ்கரன், விற்பனை நிறைவேற்று அதிகாரிகளான பி.சுபாஜினி, ரி.ராஜகோபால் நிற்பதையும் படத்தில் காணலாம். (த)

# விளையாட்டுத் துறைக்கான காப்புறுதி ஜனசக்தி புதிதாக வழங்குகிறது

ஜனசக்தி விளையாட்டு வீரர் களுக்கும் வீராங்கனை களுக்கும் புதிதாகக் காப்புறுதித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது.

SLIM 2010 விருது வழங்கல் நிகழ்வில் மூன்று கௌரவங்களைப் பெற்று அதன் மூலம் ஆகக்கூடுதலான விருதுகளைத் தனதாக்கிக் கொண்ட பெருமைக்கு உரியதாக விளங்கு வது ஜனசக்தி காப்புறுதி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இது தேசிய விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு மட்டுமல்லாமல் தனிப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் உள்ளவர்கள், பாடசாலைகளில் விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்கள் முதலான அனைவருக்கும் உரியதாகும்.

கிரிக்கெட், உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், றக்பி, ஹொக்கி, பட்மிண்டன், ரெனிஸ், கொல்ப், ஸ்னூக்கர், ஜிம்னாஸ் டிக்ஸ், நீச்சல், சைக்கிள் சவாரி முதலான சகல விளையாட்டு களில் ஈடுபடுபவர்களும் இந்தக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகக் கூடியது இரண்டரைக் கோடி ரூபாவரையில் ஒருவர் காப்புறுதி செய்து கொள்ளலாம்.

காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் விளை யாட்டில் ஈடுபட்ட போதோ, பயிற்சி செய்து கொண்டிருந்தபோதோ அல்லது விளையாடச் செல்லும் போதோ காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற வேண்டியிருந்தால் அதற்கு மேலதிகமாக ஒரு லட்சம் ரூபா வழங் கப்படும்.

இந்தக் காப்புறுதியால் விளையாட்டு வீரர் அல்லது வீராங்கனையின் பெற்றோரும் கூடப் பயன்அடைவர்.

# தற்போது நடைபெறும் இலங்கை அலங்காரத்திருவிழா காபன் பாவனையற்ற முதலாவது பிராந்திய நிகழ்வு

அலங்காரக் கல்வியகம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில், மாஸ் ஹோல்டிங்ஸ் இன் பிரதான அனுசரணையில் கடந்த 11ஆம் திகதி ஆரம்பமான இலங்கை அலங்காரத் திருவிழா இன்று முடிவடைகிறது மேலதிக விபரங்களை www.srilanka design festival.com எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

அலங்கார விழாவில் காபன் பாவனை கட்டுப்படுத்தல் மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு காபன் கொன்சல்டிங் கம் பனி முன்வந்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்காக பிரித்தானியாவின் காபன் நியுட்ரல் கம்பனியின் அனுசரணையும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து காபன் கொன்சல்டிங் கம்பனி யின் தலைமை அதிகாரி சுப்ரமணியம் ஈஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், ''நாம் எமது சூழலுக்கு அர்த்தமுள்ள முறையில் மதிப்பளிப்பதை உலகிற்கு உணர்த்துவதற்கு இந்த அலங்காரத் திருவிழா மூலம் சிறந்த வாய்ப்பு ஏற்படுத் தப்பட்டுள்ளது'' என்றார்.




இலங்கை அலங்கார விழாவின் தாபகர்லின்டா ஸ்பெல் டேவின்டே இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், ''இந்த அலங்காரத் திருவிழாவை ஏற்பாடு செய்துள்ளதன் மூலம் தொழிற்றுறைகள் தமது இலாப நோக்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதைத் தவிர்த்து சூழல் மாசற்ற உலகுக்குப் பங்களிப்பு வழங்குவதுடன், புதிய சிந்தனைகளையும் ஆக்கங்களையும் முன்னெடுக்க வேண்டும் என்பதை அறிவுறுத்தத் திட்டமிட்டுள்ளோம்'' என்றார்.

காபன் நியுட்ரல் கம்பனியின் ஆசிய பசுபிக் பிராந்தியத் தின் தலைமை அதிகாரி ரனீ விர்தீ, சர்வதேச வளங்களைப் பிரயோகித்து இந்தச் சுத்தமான சூழல் எனும் தொனிப்பொருளை உலகிற்கு எடுத்துச் செல்ல இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்று கூறினார்.

# நீரிழிவு தினத்தையொட்டி 'ஹெல்தி லைவ் கிளினிக்' ஒரு மாத கால விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்

நீரிழிவு தினம் இம்மாதம் 14ஆம் திகதி உலகளாவிய ரீதியில் நினைவு கூரப்படுகிறது.

ஹெல்த் லைவ் கிளினிக் நீரிழிவு நோயாளிகளை இந்த மாதம் முழுவதும் தனித்தனியே பார்வையிடுவதற்கும், அவர்களுக்குப் பயன்தரும் பல்வேறு விசேட திட்டங்களைச் செயற்படுத்தவும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

ஹெல்த் லைவ் கிளினிக் நிலையத்தைச் சேர்ந்த நீரிழிவுக் கல்வி போதனாசிரியர்களும் விசேட தாதியர்களும் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவது தொடர்பாக முக்கிய பங்கினை வகிக்கின்றனர். ''இந்த நோய் பற்றி ஒரு நோயாளி அதிகம் அறிந்திருந்தால் இதன் தாக்கத்திலிருந்து விடுதலை பெறுவது மிகச் சுலபம்'' எனத் தாதியர் போதனாசிரியை தெளிவுபடுத்தினார்.

ஒவ்வொரு தனிநபரும் ஒவ்வொரு விதம். அவர்களின் தேவைகளும் வேலைச் சுற்றாடலும் வெவ்வேறு விதம். இதனால் ஒரே விதமான உணவுக் கட்டுப்பாட்டு முறையும், மருந்து முறையும் சகல நோயாளிகளுக்கும் பொருந்தமாட்டா எனவும் தனிப்பட்ட ஆலோசனைகள் பற்றி விளக்கிக் கூறுகையில் டாக்டர் காயத்ரி தெரிவித்தார்.

தனிப்பட்ட ஆலோசனைகள் குறைந்த கட்டணத்தில் அதாவது பதிவுக் கட்டணத்துடன் மட்டும் நடத்தப்படுகின்றன. தொலைபேசி மற்றும் இணையத்தின் ஊடாகவும் பதிவு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நோயாளியுடனும் வைத்திய நிபுணர்கள் 10-15 நிமிடங்கள் வரை செலவிடுவதோடு போதனாசிரியர் மற்றும் தாதியர், நோயாளிகளுடன் மேலதிக 15 நிமிடங்கள் வரை செலவிடுவர். அதன் போது வைத்திய முறை, வாழ்க்கை முறை மற்றும் உணவு உட்கொள்ளல் சம்பந்தமான தகவல்களை வழங்குவர்.

கொழும்பு மையப் பகுதியில் அமைந்துள்ள ஹெல்தி லைவ் கிளினிக் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரையும், சனிக்கிழமைகளில் காலை 8.00 மணி தொடக்கம் பி.பகல் 1.00 மணி வரையும் திறந்திருக்கும். வைத்திய நிபுணர்களின் வரவைப் பொறுத்து நவம்பர் மாதத்தில் தனிப்பட்ட ஆலோசனைகளுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும். தொடர்புகளுக்கும் விபரங்களுக்கும் தொலைபேசி/ இலக்கம் - 0112-470070.



யூனியன் அஷ்யூரன்ஸ் வாடிக்கையாளர் ஒருவருக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவைப் பிராந்திய முகாமையாளர் த.சுகுணன் வழங்குகிறார். அருகில் விற்பனை முகாமையாளர் ஸ்ரீவரதன் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.பரஞ்சோதி, என்.சுகன்யா ஆகியோர் காணப்படுகின்றார். (த)

# ஆசிய வங்கியாளர் சங்கத்தின் தலைவராக தியாகராஜா தெரிவு



ஆசிய வங்கியாளர்கள் சங்கத்தின் (ABA) தலைவராக ஹட்டன் நஷனல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இராஜேந்திரா தியாகராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தாய்வானில் கடந்த முதலாம் இரண்டாம் திகதிகளில் நடைபெற்ற சங்கத்தின் 27ஆவது வருடாந்தக் கூட்டத்திலேயே தியாகராஜா சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இரண்டு வருடங்களுக்கு அவர் பதவி வகிப்பார். 20 நாடுகளைச் சேர்ந்த 25 பேர் பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆசிய வங்கியாளர்கள் சங்கம் மிகப் பலம் வாய்ந்தது ஆகும். ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 23 நாடுகளின் பிரபல வங்கியாளர்கள் 100 பேர் இந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்தச் சங்கம் 1981இல் ஆரம்பிக்கப்பட்டது.

# மாத்தளையில் பான் ஏசியா வங்கிக் கிளை திறப்பு

மாத்தளையில் திருகோணமலை வீதி 165ஆவது இலக்கத்தில் பான் ஏசியா வங்கியின் 39 ஆவது கிளை திறக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் கண்டி, கட்டுகஸ்தோட்டை ஆகிய பகுதிகளில் பான் ஏசியா வங்கி ஏற்கெனவே வங்கிச் சேவைகளை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மாத்தளை வங்கிக் கிளை மாத்தளை மேயர் ஹிப்மி கரீமினால் திறந்து வைக்கப்பட்டது.

திருமதி இனோகா அபேகோன் வங்கிக் கிளையின் தலைவியாகக் கடமையாற்றுகிறார்.

வங்கிக் கிளை கிழமை நாள்களில் காலை 9 மணி முதல் பி.ப. 4 மணிவரையும் சனிக்கிழமைகளில் காலை 10 மணி முதல் நண்பகல் 1 மணிவரையும் அலுவல்களுக்காகத் திறந்திருக்கும்.

மாத்தளை மேயர் ஹிப்மி கரீப் நாடாவை வெட்டி வங்கிக் கிளையைத் திறந்து வைப்பதையும் பான் ஏசியா வங்கியின் ஆலோசகர் சுல்பிக்கர் சவஹிர் மற்றும் வங்கித் தலைவர் ஏ.ஜி. வீரசிங்கி ஆகியோர் அருகில் நிற்பதையும் மேலே உள்ள படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போனோரின் உறவினர்களிடம் பணம் கறக்க முற்பட்ட நபர் சிக்கினார்

## கிளிநொச்சி கனகபுரத்தில் சம்பவம்

கிளிநொச்சி,நவ.16

இறுதிப் போரின் போது காணாமற் போனவர்களை விடுவிப்பதாகக் கூறி, அவர்களின் உறவினர்களிடம் இருந்து பணம் கறக்க முற்பட்ட நபர் ஒருவர் கிளிநொச்சியில் படையினரால் பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவது-

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய அலுவலகத்தில் உள்ள சீ.டி.எம்.ஏ தொலைபேசிக்கு சில நாள்களுக்கு முன்னர் 'எஸ்.எம்.எஸ்' ஒன்று வந்துள்ளது. அதில் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் காணாமற் போனவர்களை மீட்டுத்தர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் குறித்த தொலைபேசி இலக்கம் காணாமற் போனோரின் உறவினர்களிடம் வேகமாகப் பரிமாறப்பட்டது. அத்துடன் அத் தொலைபேசி இலக்கத்துடன் காணாமற் போனோரின் உறவினர்கள் தொடர்பு கொண்டுள்ளனர். காணாமற் போனவர்கள் உயிருடன் பத்திரமாக இருக்கிறார்கள் என்றும் எனினும் அவர்களை விடுவிக்க வேண்டுமாயின் குறித்த தொகைப் பணத்தை தர வேண்டும் என்றும் தொலைபேசி அழைப்பின் போது எதிர் முனையில் உரையாடியவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் ''பணத்தை எங்கே வைத்துத் தருவது?'' என உறவினர்கள் கேட்ட போது கனகபுரம் மகாவித்தியாலயத்தில் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதாவது நேற்றுமுன்தினம் பணத்தை ஒப்படையுங்கள் என்று பதிலளிக்கப்பட்டது. அதனை நம்பிய 300 இற்கு அதிகமான காணாமற் போனோரின் உறவினர்கள் தொலைபேசி நபர்கள் கேட்ட தொகையுடன் நேற்று முன்தினம் காலை திரளத் தொடங்கினர்.

இதன் பின்னர் குறித்த தொலைபேசி இலக்கத்துடன் பாடசாலை அதிபர் தொடர்பு கொண்ட போது மறுமுனையில் ''மக்களை ஒழுங்குபடுத்துங்கள் நாங்கள் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறோம்'' என்று பதில் வந்தது. அதனையடுத்து மக்கள் ஒழுங்கு வரிசையில் நின்றனர். மதியவேளையில் அவர்களிடம் பணத்தைப் பெறுவதற்காக நபர் ஒருவர் வந்தார். இதுபற்றி தகவலறிந்து ஏற்கனவே அங்கு சிவில் உடையில் நின்றிருந்த இராணுவத்தினர் அவரை மடக்கிப் பிடித்தனர். குறித்த நபரிடம் படையினர் விசாரணை செய்து இச்சம்பவத்தில் தொடர்புடைய மேலும் இருவரைக் கைது செய்தனர் எனத் தகவல் வெளியாகியபோதிலும் அதனை இச்செய்தி அச்சுக்கு போகும்வரை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. (ஒ-எ-405)

## ஒளி விழா

கிளிநொச்சி,நவ.16

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மு.ப.9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.இரத்தினகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் கிறிஸ்தவ மதத்தின் பல தலைவர்கள் கலந்து கொண்டு விசேட வழிபாடுகளை நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் விருந்தினர்களது சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன. (க-405)

## பொது மண்டபம் இன்றி சிரமம்

பூநகரி,நவ.16

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி, செல்விபுரம் கிராமத்தில் பொது மண்டபம் இன்மையால் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.

மேலும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் கலந்துரையாடல்கள், பொது அமைப்புக்களின் கூட்டங்கள் போன்றவற்றை நடத்துவதிலும் சிரமங்கள் தோன்றியுள்ளன.

ஏற்கனவே சேதமடைந்த மண்டபத்தையாராவது புனரமைத்து வழங்குமாறு இக்கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-406)

## சேறும் சகதியுமாக பஸ் நிலையம்

கிளிநொச்சி,நவ.16

தற்போது பெய்துவரும் மழைகாரணமாக கிளிநொச்சி பஸ் நிலையப்பகுதி மக்களின் பாவனைக்கு உதவாத வகையில் சேறும், சகதியுமாகக் காணப்படுகின்றது.

டிப்போ வீதியில் டிப்போவுக்கு முன்னால் உள்ள இடத்தில் இம்மாத முற்பகுதியில் இருந்து தனியார் பேருந்துகள் தரித்து நிற்கின்றன. ஆனால் தற்போது பெய்து வரும் மழைகாரணமாக இந்தப்பகுதி மோசமாகப் பாதிக்கப்பட்டு சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. இதனால் பேருந்துப் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.கிளிநொச்சிக்கான பேருந்து நிலையமாக அம்பாள் நகர் சந்தைக்கு அருகில் உள்ள இடம் அறிவிக்கப்பட்ட போதிலும் பேருந்துகள் முழுமையாகஅந்தப் பகுதிக்குச் சென்று வருவதில்லை. தனியார் பேருந்துகளின் தரிப்பிடமாகத் தற்போது உள்ள இடத்திலிருந்து இந்தப்பகுதி இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (க-405)

## பீனிக்ஸ் பறவைகள்.....



நீளும் கரங்கள்: பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் போரினால் பாதிக்கப்பட்ட 7 மாணவிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.




# புலமைப் பரிசில் பரீட்சையில் வென்ற கிளிநொச்சி ம.வி. மாணவருக்கு கௌரவம்

கிளிநொச்சி,நவ.16

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வுக்கு முன்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களும், அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களும், விருந்தினர்களும் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு அங்கு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பாடசாலையின் அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், போரின்போது மரணமடைந்த பாடசாலையின் இரு ஆசிரியர்களதும், இரு பணியாளர்களதும் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கமும் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தனர் சிறப்புரைகளையும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் 2009 ஆம் ஆண்டில் சித்திபெற்ற 58 மாணவர்களும் 2010 ஆம் ஆண்டில் சித்திபெற்ற 16 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 38 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்குப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதுடன் நினைவுக் கேடயங்களும் பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (க-405)

# மோசமாகக் காணப்படும் பூநகரி கறுக்காய்த்தீவு வீதி

பூநகரி,நவ.16

கறுக்காய்த் தீவுக்குச் செல்லும் வீதி சேதமடைந்து காணப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி, பூநகரி தம்பிராய்ச் சந்தியில் இருந்து கறுக்காய்த்தீவுக்குச் செல்லும் ஐந்து கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. தற்போது பருவமழையும் ஆரம்பித்துள்ளதால் இவ்வீதியூடாகப் பயணம் செய்வதில் பொது மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதால் நீர் நிரம்பி நிற்பதோடு சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. மேலும் இந்தக் கிராமத்திற்கு பஸ் சேவையும் இல்லாததால் இக்கிராம மக்கள் இந்த மோசமான வீதியில் நடந்து திரிய வேண்டிய அவல நிலையில் உள்ளனர். அத்துடன் செட்டியகுறிச்சி, கொல்லகுறிச்சி, கறுக்காய்த்தீவு கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகள் தமது தேவைகளை இந்த வீதியூடாக நிறைவேற்றிக் கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

ஆகவே இனியும் காலதாமதம் செய்யாது இந்த வீதியைப் புனரமைத்து வழங்குமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (க-406)

# புதுக்குளம் மகாவித்தியாலயத்துக்கு மூன்று மாடிக் கட்டடங்கள் இரண்டு

நாவற்குழி,நவ.16

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் அறிவுசார் சமூகத்திற்கான கல்வித் திட்டத்தின் கீழ் புதிய கட்டடங்கள் அமைப்பதற்கான விலைமனு கோரப்பட்டுள்ளது.

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இம்மாதம் 30 ஆம் திகதி வரை இதனைச் சமர்ப்பிக்க முடியுமென அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் மூன்று மாடிக் கட்டடங்கள் இரண்டு நிர்மாணிக்கப்படவுள்ளன. ஒரு கட்டடத்தில் அழகியல் அலகு, வகுப்பறைகள் என்பவை அமைக்கப்படவுள்ளன. மற்றைய கட்டடத்தில் விவசாய ஆய்வு கூடம், மனையியல் கூடம், உயர்தர பௌதிக ஆய்வு கூடம் என்பவை அமைக்கப்படவுள்ளன.

இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டதும் இப்பாடசாலையின் கட்டடத் தேவையின் பெரும்பகுதி நிறைவு பெறுமெனக் கூறப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடமாகாணக் கல்வி அமைச்சு பல பாடசாலைகளின் கட்டடங்களை ஏற்கனவே புனரமைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-121)

# வளப்பற்றாக்குறைகளுடன் பூநகரி மகாவித்தியாலயம்

நாவற்குழி,நவ.16

பூநகரி மகாவித்தியாலயத்தில் நிலவும் வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு பாடசாலையின் நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பாடசாலையில் தரம் 1 முதல் உயர்தரம் வரையில் 950 மாணவர்கள் தற்போது கல்வி பயில்கின்றனர். இடைநிலைக்கல்வி பயிலும் மாணவர்களின் கட்டடத்தில் மேல் தளம் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. ஆசிரியா விடுதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன. அதிபரின் நிர்வாக அலுவலகம் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றது.

ஆரம்ப வகுப்பு மாணவர்களின் வகுப்பறையின் ஒரு பகுதியில் அதிபரின் அலுவலகம் இயங்கி வருகின்றது.

மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் குடிதண்ணீர் வசதி போதுமானதாக இல்லை. இராணுவத்தினர் பவுசர் மூலமாகக் குடிதண்ணீர் வழங்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ் மக்கள் புராதன காலந்தொட்டு வாழ்ந்து வரும் பூநகரிப் பிரதேசத்தின் முதன்மையான ஒரு பாடசாலையாக இது திகழ்ந்து வருகிறது. பல நூற்றுக் கணக்கான கல்விமான்களை, உத்தியோகத்தர்களை, வல்லுநர்களை உருவாக்கிக் கொடுத்த இப்பாடசாலையின் வளப்பற்றாக் குறைகள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என இந்தப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

16.11.2010 இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடும் மானிப்பாய் வடக்கு சிவகுமார் – குமுதினி தம்பதியரின் செல்வப் புதல்வன் தேனுகாந் (தேனுக்குட்டி) பல்கலையும் பெற்றுச் சீரும் சிறப்புமாக வாழ அப்பா சிவகுமார், அம்மா குமுதினி, மட்டுவில் தாத்தா, அம்மம்மா, அன்ரிமார், மாமா ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துக்களுடன் விஜி, அன்ரா.

## சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
பாக்கியம்
கிருபைநாதன்
கல்வித் தகைமை
H.N.Dip.in.com.
தொழிற்தகைமை
Dip.in.Ed.(Merit)

முதல் நியமனம் – 18.05.1977 யா/ஞானசாரியார் கல்லூரி
18.05.1977 தொடக்கம் 13.09.1979 வரை யா/ஞானசாரியார் கல்லூரி
14.09.1979 தொடக்கம் 31.12.1981 வரை யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
01.01.1982 தொடக்கம் 30.04.1989 வரை மு/மல்லாவி ம.வி., யோகபுரம்
01.05.1989 தொடக்கம் 16.11.2010 வரை கிளி/திருவையாறு ம.வி.

முப்பத்து மூன்று வருட கல்விப் பயணத்தில் இருபத்தொரு வருடங்கள் எமது பாடசாலையில் ஆசிரியராய், பிரதி அதிபராய், பணியாற்றி இன்றுடன் ஓய்வுபெறும் பிரதி அதிபரின் வாழ்வில் சகல சிறப்புக்களையும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்தும்:

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர், மாணவர்கள், பெற்றோர்
கிளி/திருவையாறு ம.வி.

(105881)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2010 சித்தியடைந்தோர்


இ.ஷிந்துஜன்
புள்ளி – 181
மாவ.நிலை – 06
(மாகாணமட்டம் வாய்ப்பாடு மனனம் 3ஆம் இடம்)


ச.தனுஷிகா
புள்ளி – 154
(மாகாணமட்டம் துரித கணித செய்கை 2ஆம் இடம்)


க.யதுகுலன்
புள்ளி – 150

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்


யு.அஜந்தன்
புள்ளி – 149


சி.விதுஷன்
புள்ளி – 146


ஜெ.பிரதீபன்
புள்ளி – 143


ச.பிரணவன்
புள்ளி – 140


ஆ.சானுஜா
புள்ளி – 139


சி.லக்சனா
புள்ளி – 134


கு.சகிதா
புள்ளி – 115


இ.ஜனகன்
புள்ளி – 109


ந.விதுசன்
புள்ளி – 109


மு.நீலாங்கனி
புள்ளி – 102


ச.கீர்த்தனா
புள்ளி – 101


சி.பதுமிலா
புள்ளி – 100

இப்பாடசாலை சிறியதொரு பாடசாலையாக இருந்த போதும் தென்மராட்சி கல்வி வலயத்தில் தொடர்ந்து தரம்5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்களைச்சித்தி பெறச் செய்து வருகின்றது. இவ்வருடம் அதி கூடிய மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தது மட்டுமல்லாது, 181 புள்ளிகளைப் பெற்று இன்பகரன் ஷிந்துஜன் சாதனை படைத்துள்ளார்.

இம் மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியை தரம்1-3வரை திருமதி ஞா. கலாநிதி மற்றும் தரம்4இல் கல்விபுகட்டிய செல்வி வே. தர்மினி ஆகியோருடன் தரம்5 புலமைப் பரிசில் வகுப்பினை நடாத்தி வழிப்படுத்திய சாதனையாசிரியர் திருவாளர் க.தவயோகராஜா அவர்களையும் எமது பாடசாலையை நெறிப்படுத்தி நடத்தும் அதிபர் திருவாளர் இ.ரவீந்திரன் அவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இப்பணியைச் சிறப்பாக ஆற்ற இறை ஆசியை வேண்டிநிற்கின்றோம்.

யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலய[illegible]
பழைய மாணவர் சங்கம், பெற்றோர்.

(105999)

## ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட சிறைக்கைதி

கண்டி,நவ.16

போகம்பரை சிறைச்சாலைக்குள் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்த கைதி கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்த 25ஹெரோயின் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

வத்தளை பிரதேச வாசியான இந்த நபர் திருட்டுச் சம்பவங்கள் காரணமாக சிறைவாசம் அனுபவித்து வந்தவர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டிபொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி அநுருத்த பண்டாரநாயக்கவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

(ஒ-5)

## திறந்த பல்கலையின் பட்டக் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,நவ.16

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவப் பட்டக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தெரிவுப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் இக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்ய முடியும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் (புதிய, பழைய) சித்தி, இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் 'ஈஎஸ்பிஎம்' அல்லது கழக மூதவையால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு சான்றிதழ் கற்கை நெறியினால் பூர்த்தி செய்திருத்தல், கழகத்தின் முகாமைத்துவ டிப்ளோமா பட்டக் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல், பட்டதாரி அல்லாத பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், 'ஏச்என்டிஏ' முதலாம் வருட மாணவர்கள், இலங்கை நூலக ஒன்றிய இறுதிப் பரீட்சை எழுதிய மாணவர்கள், வங்கியியலிலும் நிதியியலிலும் உயர்கல்விச் சான்றிதழ் பெற்ற மாணவர்கள் இவற்றில் ஏதாவது ஒரு தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கமுடியும் என அதன் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)

## பூச்சாடிப் பிரியர்களுக்கு....

பாவனைக்கு இலகுவான ரெடி பூச்சாடிகளை பெற நீங்கள் நாட வேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

## மணமகன் தேவை

பிரான்ஸில் பிறந்து அங்கு நல்ல வேலையில் இருக்கும் 27 வயதுடைய பெண்ணுக்கு பிரான்ஸில் வதிவு உரிமை (PR) உள்ள மணமகன் தேவை.

தொடர்பு: 0033139826450
0033626092194( கைபேசி) 0771600507

## 74ஆவது பிறந்த நாள் வாழ்த்து



அல்வாய் வடக்கு, ஆலங்கட்டையைச் சேர்ந்த
திருமதி பொன்னுத்துரை சிவக்கொழுந்து (ஈஸ்வரி)

அவர்கள் தனது 74ஆவது பிறந்தநாளை புத்தூர், ஆவரங்கால் மேற்கு சிவன்கோயில் வீதியிலுள்ள தனது இல்லத்தில் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். சிவக்கொழுந்து அவர்களை வாழ்த்தும் உள்ளங்கள்.

**பிள்ளைகள்**
சசீந்திரா (கொழும்பு),
விஜிதா (நியூசிலாந்து), மீரா (கண்டி)

**மருமக்கள்**
யூட்சன் மெடோன்
பிறிற்ரோ (கொழும்பு), பாபு (நியூசிலாந்து), ராஜ்குமார் (கண்டி)

**பேரப்பிள்ளைகள்**
ஜெயவர்மன் ரம்மியா குடும்பம் (லண்டன்), ஜொனி (நியூசிலாந்து), ஆன்பிரியா (கொழும்பு),
ரனுஷா (கண்டி), மீருஷா (கண்டி)

**பூட்டப்பிள்ளை**
சஞ்சய் (லண்டன்)

**சகோதரர்கள்**
நாகலிங்கம் குடும்பம்,
நமசிவாயம் பிள்ளையம்மா குடும்பம்,
முருகேசு கனகம்மா குடும்பம்,
முருகேசு (திருத்தணி) குடும்பம்,
சின்னத்துரை பொன்னம்மா குடும்பம்,
அனுபுத்திரன் மனோன்மணி குடும்பம்.
மற்றும் உற்றார் உறவினர்கள் யாவரும் வட அல்வை குமுதெணிப் பிள்ளையார், குச்சம் ஞானவைரவர் அருள்பெற்று நீடுழிகாலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்:
அனுபுத்திரன் மனோன்மணி குடும்பம்
சிவன்வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
தொ.பே.இல. 077 9905361 (சி/572863)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (16.11.2010) பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் (BMICH)நடைபெறுகின்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டம் பெறும்

திரு.குணராஜா மயூரன்

அவர்கள் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று வாழ்வில் சிறப்புப் பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அண்ணா திரு.திருமதி தீபன் குடும்பம் (தீபன்).
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,கல்வியங்காடு.

## யா/ மணற்காடு றோ.க.த.க. பாடசாலைச் சமூகத்தின் பாராட்டும் வாழ்த்தும்



செல்வி
யேசுதாசன் மேரிடியூலினி

2010 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 167 புள்ளிகளைப் பெற்றும் எமது பாடசாலையில் இருந்து முதல் தடவையாக சித்தியெய்தி எமது பாடசாலைக்கு புகழ் சேர்த்த மாணவி செல்வி யே.மேரிடியூலினியையும்

70 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற ஏனைய மாணவர்களாகிய

| | | | |
|---|---|---|---|
| ✱ ம.மயூரன் | - 135 | ✱ ந.அனுசா | - 89 |
| ✱ அ.மரியறொசானா | - 130 | ✱ தோ.தயாளசீலி | - 85 |
| ✱ செ.மேரி அகிசனா | - 126 | ✱ ஆ.நிமல்டன் | - 85 |
| ✱ அ.மேரி ஏஞ்சலின் | - 124 | ✱ அ.தேசியன் | - 84 |
| ✱ அ.பிறிசாந்தினி | - 105 | ✱ ஜெ.ஜெபதாஸ் | - 84 |
| ✱ றோ.மரியதர்ஷா | - 105 | ✱ உ.டினுஜா | - 83 |
| ✱ வ.கார்லோஜன் | - 103 | ✱ கி.மேரிவிவின்சலா | - 83 |
| ✱ பி.டிலைக்ஷன் | - 100 | ✱ அ.டெனிசன் | - 74 |
| ✱ பே.நிதுஷன் | - 99 | ✱ ஸ்.மேரிறெக்சலா | - 73 |
| ✱ ஜெ.றிசாளன் | - 97 | ✱ ம.றூபேட்நிறூஜன் | - 72 |
| ✱ அ.அலெக்சனா | - 93 | ✱ சே.றுபிசனா | - 70 |

ஆகியோரையும் பாராட்டுவதுடன் இவர்களை வழிப்படுத்திய அதிபர், மற்றும் முன்னாள் அதிபர் சி.குருகுலலிங்கம், ஆசியர்களான மே.மரியறூபன், அ.அகஸ்ரின், ந.சிவநந்தினி, ந.சிவாநந்தன் மற்றும் இவ் வெற்றிக்கு உறுதுணையாக நின்ற அனைவரையும் மனப்பூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(105995) பாடசாலைச் சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவில் உடை இராணுவமே என் மகனைக் கொண்டு சென்றது

## மீட்டுத் தரக் கோரி குருநகரில் தாயார் கண்ணீர்

யாழ்ப்பாணம், நவ. 16

கடந்த 2007 ஆம் ஆண்டு சிவில் உடையில் வீட்டுக்கு வந்த இராணுவமே எனது 19 வயது மகனைப் பலவந்தமாகப் பிடித்துச் சென்றது. மகனை விடுவிக்க உதவுமாறு பல தரப்புகளிடம் முறையிட்டேன். எனினும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. எனது மகனை மீட்டுத்தர நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு கண்ணீர் மல்க வேண்டினார் குருநகர் துணையிழந்த மாதர் சங்கத் தலைவி நிர்மலநாதன் மேருரஞ்சினி.

குருநகர் பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு முன்னிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு சாட்சியமளிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி அதிகாலை எனது வீட்டுக்குச் சிவில் உடுப்புடன் மூன்று மோட்டார் சைக்கிள்களில் இராணுவத்தினர் வந்தனர்.

512 ஆவது படைப்பிரிவு இராணுவத்தினரே அவர்கள். மகனை இராணுவம் பிடிக்கும் போது அவனுக்கு வயது 19.

இந்தச் சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிலும் யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தேன். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடக்கம் ஜனாதிபதி வரை இந்த விடயம் தொடர்பாகக் கடித மூலம் தெரியப்படுத்தினேன். யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் என அனைவரிடமும் எனது நிலையைத் தெரியப்படுத்தினேன்.

எனினும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. எனது மகனது பெயர் நிர்மலநாதன் மயூரன். சென்.மேரிஸ் பீடப்பணியாளராக இருந்தார்.

யாழ். ஸ்ரான்லி வீதி உயர் பாதுகாப்பு வலயத்தில் எனது வீடு அமைந்துள்ளது. 1990 ஆம் ஆண்டு மார்ச் 12 ஆம் திகதி எனது கணவர் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நான் விதவையானேன்- என்றார்.



ஊர்காவற்றுறையில் ஆணைக்குழு விசாரணை நடக்கிறது.

குருநகரைச் சேர்ந்த ரூஸ் விஸ்பிரட் என்பவர் சாட்சியமளிக்கையில்:-

1996 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி வேலைக்குச் சென்ற எனது மகன் நிக்ஸன் ஜெகன் இதுவரை வீடு திரும்பவில்லை. அதே மாதம் 29 ஆம் திகதி வீட்டுக்கு வந்த மூன்று இராணுவத்தினரே மகனைக் கைது செய்தனர்- என்றார்.

கைது செய்த இராணுவத்தினது பெயர் களுபண்டாரா எனவும் சொன்னார்கள். அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்காவிடமும், ரணில் விக்கிரமசிங்கவிடமும் எனது நிலைமையைத் தெரியப்படுத்தினேன். ஆயினும் எனது மகன் விடுவிக்கப்படவில்லை- என்றார்.

ஐ.யூ.அஸ்கின் என்பவர் சாட்சியமளிக்கையில்:

1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்டதிலிருந்து அகதி வாழ்வு வாழ்ந்து வருகிறோம். இது எல்.ரீ.ரீ.ஈ யினால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பாகும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால்தான் நாம் வெளியற்றப்பட்டோம். எனினும் அவர் எம்மை மீளக் குடியமர அழைக்கவில்லை. அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமே துன்பவியல் நிகழ்வு எனக் கூறி மீளக்குடியமர அழைத்திருந்தார். முஸ்லிம் மக்கள் வெளியேற்றப் பட்டதானது பெரும் தவறு எனத் தமிழ் மக்கள் உணர வேண் டும்.

அத்துடன் ஒரு சமூகத்தின் இருப்பை இல்லாது செய்வதற்கு எடுத்த விளைவு எப்படி இருக்கும் என்பதற்கு நாம் சாட்சியாக உள்ளோம்- என்றார்.

குருநகர் பொதுநலநோக்கு மண்டபத்தில் சாட்சியமளிக்கவென நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அங்கு திரண்டிருந்தனர். (ம-14)

# கணவரை விடுவிப்பதாக வந்த தகவலால் என் பணத்தையும் இழந்து நிற்கிறேன்

## தெல்லிப்பழையில் சாட்சியம்

வலி.வடக்கு, நவ.16

கணவரை விடுவித்துத் தருவதாகக் கிடைத்த தொலைபேசி அழைப்பை அடுத்து குறித்த நபர்கள் கேட்ட 2 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து அதனையும் இழந்தேன். ஆனால் என் கணவர் விடுக்கப்படவில்லை.

இவ்வாறு கண்ணீர் மல்கச் சாட்சியம் அளித்தார் காணாமல் போன பண்டத்தரிப்புச் சந்தையில் வரிசேமிப்பாளராக கடமையாற்றிய ஒருவரின் மனைவி.

தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவு மக்களுக்காக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அளவெட்டி மகாஜனக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''எனது கணவரை விடுவிப்பதாகக் கூறி கிராம அலுவலர் மூலம் கையடக்கத் தொலைபேசி அழைப்பு கிடைத்தது. அதன் பெயரில் கணவரை மீட்க வேண்டும் என்ற ஆவலில் இரண்டு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பணத்தை நான் கொடுத்து ஏமாந்தேன்.''- என்றார்.

ஆணைக்குழுவின் தலைவர் அந்தப் பெண்ணிடம் முழு விவரங்களையும் உடன் பெற்றுக் கொண்டதுடன் குறிப்பிட்ட சம்பவம் போன்று பணம் கொடுத்து ஏமாந்த மேலும் ஆறு பேரை அழைத்தார். எனினும் விசாரணை மண்டபத்தில் நான்கு பேரே சமூகமளித்திருந்தனர். அவர் களிடமும் விவரங்கள் கேட்டறியப்பட்டன.

அதனைத் தொடர்ந்து குறிப் பிட்ட விவரத்தைக் கூறிய கிராம அலுவலரை அழைக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது. அது முடியாமல் போனதால் தெல்லிப்பழை பிரதேச செயலாளருடன் கலந்துரையாடி மேலதிக விவரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கடத்தப்பட்டவர்களை மீட்டுத்தருவதாகக் கூறி மேஜர் சிவன் என்ற பெயரில் கப்பம் கோரப்பட்டு வந்ததாக இதில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை- கடத்தப்பட்டவர்களை மீட்டுத் தருவதாகக் கூறி நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள் உட்படபலரிடமும் பலலட்சங்கள் மேஜர் சிவன் என்ற பெயரில் பறிமுதல் செய்யப்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-86)

**சாட்சியம்...**



வாக்குமூலம்: சாவகச்சேரியில் சனியன்று நடைபெற்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வின்போது சாட்சியமளிக்கும் பெண்மணி. (131)

# ஷெல்லுக்கு கணவர் ப்லியாகிவிட்டார் எனக்கு அரசுதான் உதவ வேண்டும்

## ஊர்காவற்றுறையில் பெண்மணி வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.16

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது ஷெல் வீச்சில் எனது கணவர் கொல்லப்பட்டார். எனது குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு அரசு உதவி செய்ய வேண்டும். இவ்வாறு கருணைமலர் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கையில் குறிப்பிட்டார்.



நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணைகளை அவதானிக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்றபோது அவர் இவ்வாறு சாட்சியமளித்தார்.

எனக்கு 3 பிள்ளைகள். எனது கணவர் எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர் அல்லர். 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி ஷெல் வீச்சில் அவர் கொல்லப்பட்டுவிட்டார். தற்போது எந்த வித பொருளாதார உதவியும் இல்லை. எனவே அரசாங்கத்திடம் இருந்து உதவியைப் பெற்றுத் தாருங்கள் என்றார்.

உங்களது கோரிக்கையை எமது சிபாரிசில்' உள்ளடக்கி ஜனாதிபதியிடம் கையளிப்போம் என்று ஆணைக்குழுவினர் தெரிவித்தனர்.

இங்கு இறுதி யுத்தத்தின் போது காணாமற்போன தமது உறவுகளை மீட்டுத் தருமாறு பலர் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்தனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற மாலை அமர்வு வேலணை மண்கும்பான் பிள்ளையார் கோயில் திருமண மண்டபத்தில் இடம் பெற்றது. இதன்போது பல நூற்றுக்கணக்கானோர் சாட்சியமளிக்கக் கூடியிருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் 2006ஆம் ஆண்டு, 2007ஆம் ஆண்டு, 2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தமது உறவுகள் காணாமற்போனதாக சாட்சியமளித்தனர். (ஒ-15)

# ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற எண்ணம் அனைத்து இன மக்களிடமும் வேண்டும்

## குடத்தனையில் சாட்சியமளித்த சமூக சேவையாளர் தெரிவிப்பு

வடராட்சி, நவ.16

ஒரேநாடு, ஒரே மக்கள் என்பது விளம்பரப்பலகையில் மட்டுமல்லாமல் யதார்த்தமாக எல்லா இனமக்கள் மனதிலும் ஏற்பட வேண்டும். இந்த எண்ணம் எல்லா இன மக்களின் அடி மனதில் ஏற்பட்டால் இந் நாட்டில் அனைத்து இனமக்களும் சந்தோஷமாக வாழமுடியும்.

இவ்வாறு வடமராட்சிக் கிழக்குப் பிரதேச சமூக சேவையாளரும், இளைப்பாறிய உப அஞ்சல் அதிபருமான கொ. அ.ஸ்ரனிஸ்லோஸ் கடந்த சனிக்கிழமை நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

குடத்தனை தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் இடம்பெற்ற கற்றுக்கொண்ட பாடங்களும், நல்லிணக்கக் குழு முன்னிலையில் சாட்சியமளித்த அவர் தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

இங்கு சாட்சியமளிக்க வரும் போது ஒரு நாடு, ஒரே இனம், ஒரு மக்கள் என்ற வாசகம் கொண்ட விளம்பரப்பலகையொன்றை வீதியில் பார்த்தேன்.

இவ் வாசகம் வெறும் எழுத்தாக, விளம்பரமாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு இனமக்களின் அடி மனதிலும் இந்த எண்ணம் ஏற்படுத்தப்படவேண்டும். அது இருக்குமானால் இந் நாட்டில் அனைவரும் மகிழ்வாக வாழலாம் - என்றார்.

இதற்குப் பதிலளித்த ஆணைக்குழுவின் தலைவர் ஆர். சில்வா, குறிப்பாக இவ்விடத்தில் நாம் போதிய கவனம் எடுப்போம். ஒரு நாடு, ஒரு மக்கள் என்ற நிலையை உருவாக்க இந்நாட்டில் உள்ள பல்லினமக்கள் மத்தியில் அதற்கான உணர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்கு இலங்கையர் என்ற உணர்வை மதிக்கத்தக்க வகையில் ஆணைக்குழு விதைந்துரைக்கும் எனக் கூறினார். (ம-236)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேஷம்:**
குழந்தைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். எண்ணிய காரியங்கள் இனிதே நடந்தேறும். சில பிரச்சினைகளைத் தைரியமாக எதிர்கொண்டு சமாளிப்பீர்கள். பெரிய பிரச்சினையாகி விடுமோ எனப் பயந்த விடயம் ஒன்று சுமூகமாக முடிந்து விடலாம். குடும்பத்தினருக்குத் தெரியாமல் சில காரியங்களைச் செய்வீர்கள்.



**இடபம்:**
எதிர்பாராத சந்திப்புகள் நிகழும். வராத கடன் மிகுதி ஒன்றைக் கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். நண்பர்கள், உறவினர்களுக்காகச் செலவுகளைச் செய்யலாம். இறை வழிபாடு அமைதி தரும்.



**மிதுனம்:**
வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காகக் காத்திருக்கலாம். நீண்ட நாள்களாக அமைதியாக இருந்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் பண உதவிகள் கேட்டு நச்சரிக்கலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உங்களிடம் வாக்குக் கொடுத்த ஒருவர் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.



**கடகம்:**
மனதில் அமைதி, சந்தோஷம் குடிகொள்ளும். மனைவி, குழந்தைகள் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நடக்குமோ, நடக்காதோ எனப் பயந்த காரியம் ஒன்று எளிதில் நடந்து விடலாம். காலை நேரத்தில் கணிசமான பணவரவுகளைப் பெறலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். கூட்டு முயற்சி பலன் தரும்.



**சிங்கம்:**
தெய்வங்களை வழிபட்டு திருப்தி அடையும் நாள். அயலார் சிலர் உங்களிடம் தொழில் ரீதியான உதவிகள் கேட்கலாம். புதிய முதலீடுகள் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். பிள்ளைகளின் பொறுப்பான செயற்பாடு கண்டு பெருமைப்படுவீர்கள். மதிப்பு,கௌரவத்தைக் காப்பாற்றுவதில் அக்கறை காட்டுவீர்கள். உறவால் நன்மை உண்டு.



**கன்னி:**
தந்திரமாக செயற்பட்டு சில விடயங்களில் சாதனை படைப்பீர்கள். உறவினர்களிடம் வாயைக் கொடுத்து சிலர் வம்பில் மாட்டிக் கொள்ளலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். ஆறுதலான நாள்.



**துலாம்:**
நல்ல செய்திகள் தேடி வரும் நாள். எதிர்பார்த்த காரியம் முடிவடையாமல் எதிர்பாராத காரியம் ஒன்று முடிவடையும். புதிய சொந்தங்களின் அறிமுகம் கிடைக்கும். தெய்வ வழிபாடுகளுக்காகச் செலவுகள் செய்யலாம். பெண்கள் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பிறர் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம்.



**விருச்சிகம்:**
சிறு பணவரவுகளைப் பெறலாம். மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும் நாள். அடுத்து நடக்க உள்ள சில காரியங்களுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள். நாளை சந்திக்க நினைத்த நண்பர் ஒருவரை இன்றே சந்திக்கலாம். மற்றவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு ஒன்று உங்களுக்குக் கிடைக்கலாம். தந்தை வழியில் சிரமம் உண்டு.



**தனுசு:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள். சிலருடன் சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு பின்னர் சரியாகும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். திட்டமிட்ட வேலைகளை மாற்றி அமைக்கலாம். புதியவர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். சில விடயங்களில் மனக்குழப்பம் உண்டாகும்.



**மகரம்:**
சோர்வின்றி சுறுசுறுப்பாகப் பணியாற்றும் நாள். சொந்த பந்தங்கள் தொடர்பான விடயங்களுக்காக சிலரிடம் ஆலோசனை கேட்கலாம். உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப்போகலாம். சில நாள்களுக்கு முன்னர் பாதியில் விட்ட வேலை ஒன்றை மீண்டும் செய்யலாம். வாகனங்களில் செல்லும் போது வேகம் தவிர்க்கவும்.



**கும்பம்:**
பக்தி நாட்டம் அதிகரிக்கும். வீண் பிடிவாதங்களால் சிலருடன் பிரச்சினை ஏற்படலாம். செலவுகளைக் குறைத்துச் சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். தந்தை வழியில் அனுகூலமான உதவிகள் கிடைக்கலாம். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதில் மாற்றங்கள் செய்யலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் உதவி கிடைக்கலாம்.



**மீனம்:** நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். முக்கியமான விடயங்களில் குடும்ப உறுப்பினர்களிடம் ஆலோசனை கேட்டுச் செயற்படுவீர்கள். ஆடம்பர விடயங்களில், கேளிக்கைகளில் நாட்டம் செல்லும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். செல்வாக்கு அதிகரிக்கும்.

# சகலகலாவல்லி மாலை போட்டி; வெற்றிபெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.16

வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட சகலகலாவல்லி மாலை மனனப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**

ஜெயராசா ரித்திகா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), த.தக்ஷாயினி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மதிவதனகுமார் கலைநிலா (நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை), பரமேஸ்வரன் சிந்துஜா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்).

**ஆறுதல் பரிசுகள்**

யோகராசா சதுர்ஜன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), தனவீரசிங்கம் கவிதரன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), சு.வைஷ்ணவி (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்),ந.நிலுஷ்டிகா ( கோப்பாய்றோமன் க.த.க. பாட சாலை),நிரோஜா விஜயகுமார் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி),கவிப்பிரியா கந்தசாமி (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி).

**மேற்பிரிவு**

கா.மதுரா (நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை), ஜெயர்ாசா தரணீதரன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), பா.பிரார்த்தனா (புத்தூர் ஆரம்பப் பாடசாலை).

**ஆறுதல் பரிசு**

ப.நீபஜா (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலம்), சண்முகவடிவேல் கீர்த்திகா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), அ.சயன ஸ்ரீஷாயன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மு.ராகவன் (கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), ஜெயப்பிரியா கோபாலகிருஷ்ணன் (இருபாலை சி.சி.த.க.பாடசாலை), சோதிலிங்கம் நிவேதன் (நீர்வேலி அத்தியாயர் இந்துக் கல்லூரி). (204)

## அரசரின் விசித்திரச் செயல்



ஓர் ஊரில் ராஜா ஒருவர் இருந்தார். அவர் மாறுவேடம் அணிந்து தன்னுடைய குதிரையில் அமர்ந்து நாடு நகரமெல்லாம் சுற்றிப் பார்த்தபடியே வந்தார்.

நகரத்திற்கு வெளிப்பக்கமாக ஒரு புளியமரத்தடியில் ஒருவன் பரிதாபமாக உட்கார்ந்திருந்தான். அரசர் ''ஏனப்பா இந்த நேரத்தில் இங்கு இருக்கிறாய்?'' எனக் கேட்டார்.

''ஐயா நான் ஊருக்குள் போக வேண்டும். உங்கள் குதிரையில் ஏற்றிச் சென்றால் உதவியாக இருக்கும்'' என்றான்.

''சரி ஏறிக்கொள்'' என்றார் ராஜா.

''என்னால் முடியாது. நீங்கள்தான் என்னைத் தூக்கிவிட வேண்டும். ஏனெனில் நான் கை, கால் விளங்காதவன். அதனால்தான் இங்கேயே கிடக்கிறேன்''என்றான்.

''ஐயோ பாவம்!'' என்று ராஜா கீழே இறங்கி அவனைத் தூக்கி உட்காரவைத்தார். அவ்வளவு தான் அவன் குதிரையை அடித்து விரட்டி ஓட்டிக் கொண்டு போய்விட்டான். அவன் ஒரு திருடன்.

ராஜா ஏமாற்றத்துடன் அரண்மனைக்குச் சென்றுவிட்டார். யாரிடமும் சொல்லவில்லை.

சில நாள்களுக்குப் பிறகு வழக்கு நடந்து கொண்டிருந்தது. சேவகர்கள் திடீரென அரசர் முன் ஒருவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

''மன்னா இவன் பல இடங்களில் திருடியிருக்கிறான். கொள்ளையடித்திருக்கிறான். நேற்றுத் திருட முயற்சித்தபோது நமது காவலாளிகளால் பிடிக்கப்பட்டான்''

''ராஜா திருடனைப் பார்த்ததும் அன்று தன்னை ஏமாற்றியவன்தான் என்று புரிந்துகொண்டார். ஆனால் அவனால் இவரைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் அன்று ராஜா மாறு வேடத்தில் அல்லவா இருந்தார்.

''ராஜா தீர்ப்பு நாளை வழங்கப்படும்'' என்று கூறி சபையைக் கலைத்துவிட்டுத் திருடனைச் சிறையிலடைத்தார். பின்னர் நடு இரவில் திருடனைப் பார்க்க ராஜா வந்தார்.''என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா?''

''என்ன இப்படிக் கேட்கிறீர்கள். நீங்கள்தான் ராஜா.''

''இதற்கு முன் என்னை பார்த்திருக்கிறாயா?''

''இல்லையே''

ராஜா அலங்காரத்தைக் கலைத்தார். நினைவு வந்தது அவனுக்கு.

'' என்னை மன்னித்து விடுங்கள் ராஜா'' என்று காலில் விழுந்தான்.

''இதோபார் நாளை நீ திருடியதற்காகத் தண்டனை தருவேன். ஆனால் நீ என்னை ஏமாற்றியதை யாரிடமும் கூறாதே'' என்றார். இந்தக் கதையை நண்பர் ஒருவர் என்னிடம் கூறிவிட்டு-

''அந்த ராஜா ஏன் அப்படி அவனிடம் சொன்னார்?'' என்று ஒரு கேள்வியைக் கேட்டார்.

''ராஜாவே திருடனிடம் ஏமாந்துவிட்டார் என்றால் அது மிகவும் கேவலம் இல்லையா?''

நண்பர் புன்சிரிப்புடன் ''எல்லோரும் இப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அது காரணமில்லை'' என்றார். அவர் கூறிய காரணம், ''அதாவது விடயம் என்னவென்றால் அந்த நிகழ்ச்சி வெளியில் எல்லோருக்கும் தெரிந்துபோய் விட்டால்... கஷ்டப்பட்டவர்களுக்கு உதவத் தயங்க ஆரம்பித்து விடுவார்கள். அதன் பின் நாட்டில் தர்மம் கெட்டுவிடும். அப்படி ஒரு நிலைமை எமது நாட்டுக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் ராஜா அவ்விதம் செய்தார்'' என்றார்.

**கோ.சுவாமிநாதன்.**

## எந்தக் கல்... நல்ல கல்

பணம் நம்மைக் காப்பாற்றும் என்று நினைக்கின்றோம். ஆனால் தற்போது நாம்தான் பணத்தைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. சில பெண்கள் கழுத்து நிறைய நகைகளைப் போட்டிருப்பார்கள். கேட்டால்.. “பிற்காலத்தில் இதுதான் நமக்குப் பாதுகாப்பு'' என்பார்கள் கொடுமை என்ன வென்றால் அந்த நகைகளுக்காக நாம் காவல் இருக்க வேண்டியுள்ளது. இதற்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

முன்னொரு காலத்தில் மன்னர் ஒருவர் யுத்தம் முடிந்து எதிரி மன்னரின் சொத்துச் சுகங் களைக் கொள்ளையடித்து நாடு திரும்பி இருந்தார்.

பெறுமதிமிக்க இரத்தினக் கற்களை நாட்டுக்குக் கொண்டு வந்த பெருமிதத்தில் அவர் வெற்றி விழாவுக்கு தயாராக்கிக் கொண்டிருந்தார். ஆனால் நாட்டு மக்கள் அதில் ஆர்வம் காட்டவில்லை. மகன், கணவர், தந்தை போன்றோரை யுத்தத்தில் பறிகொடுத்த துயரம் அவர்களுக்கு இருந்தது.

இதனால் புத்தபிக்கு ஒருவரிடம் சென்று உபதேசம் கேட்டு ஆறுதல் அடைந்தார்கள். அரசர் பிக்குவைக் கொண்டே வெற்றி விழாவை நடத்தினால் மக்கள் வருவார்கள் என்ற எண்ணத்தில் அரண்மனைக்கு அவரை வரவழைத்தார்.



அவருக்கு உணவு கொடுத்து உபசரித்தார். பின்பு தான் கொண்டு வந்த விலைமதிப்பற்ற கற்குவியல்களைக் காட்டினார் அரசர்.

பிக்கு அமைதியாக “ஓ... அப்படியென்றால் இவை நிறைய வருமானம் தரக்கூடியவை. நாட்டை ஏழ்மையிலிருந்து காப்பாற்ற இது உதவுமே'' என்றார்.

அரசர் சிரித்தபடியே ''இந்தக் கல்லைக் காப்பாற்ற நான்தான் செலவு செய்யவேண்டும். கொள்ளை அடிப்பவர்களிடம் இருந்து காப்பாற்றக் காவல்காக்க வேண்டியுள்ளது'' என்றார்.

''பிறகேன்... அடுத்த நாட்டில் இருந்து இதை எடுத்து வந்தாய் உனது நாட்டிலேயே இதைவிட அருமையான கற்கள் இருக்கின்றன. வா காட்டுகிறேன்'' என்றார். பிக்கு அரசரை அழைத்துக் கொண்டு போனார்.

ஊருக்கு வெளியே ஓர் ஏழைக் கிழவி மா அரைக்கும் கல்லில் கூலிக்கு மா அரைத்துக் கொண்டிருந்தாள்.

அரசரைப் பார்த்து ''அந்தக் கற்களுக்கு நீ செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இந்தக் கல் கிழவியைக் காப்பாற்றி வருமானம் தருகிறது'' என்றார் பிக்கு.

''எந்தக் கல் உயர்ந்த கல்?'' என்று கேட்டார் புத்த பிக்கு. எது சிறந்தது என உணர்ந்து வாழ்வது அவரவரைப் பொறுத்தது.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறிவரும் உலக அரங்கில் அமெரிக்காவின் நிலை

**உலக நாடுகளின் பொலிஸ்காரன் என்று கூறிக்கொள்ளும் நிலையை அமெரிக்கா தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளுமா?**







'உலக நாடுகளின் பொலிஸ்காரன்' எனத் தன்னைத் தானே கூறிக் கொண்டு உலகின் வல்லமை கொண்ட முதலாவது நாடு என்ற பெருமையை அமெரிக்கா கொண்டிருந்தமையை எவரும் எளிதில் மறந்துவிடமுடியாது.

ஆனால், இப்போதும் அமெரிக்கா தனது நிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதா என்ற கேள்வி இத்தருணத்தில் எழுகின்றது. சரிந்த பொருளாதாரம், தீர்க்க தரிசனமற்ற அரசியல் முடிவுகள், போட்டி நாடுகளின் அசுர வளர்ச்சி என்பன அமெரிக்காவின் பழைய பெருமைகளுக்கு ஆப்பு வைக்கும் காரணிகளாக அமைந்துவிட்டன. இதனால் உலகின் ஏனைய நாடுகளிடம் தனது பழைய மிடுக்குடன் அமெரிக்கா வாலாட்ட முடியாத நிலை தொடர்கின்றது. அதுவும் அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவின் வருகையின் பின்னர் அமெரிக்காவின் பெருமையில் சிறிது சரிவு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

குடியேற்ற நாடாக இருந்தாலும் வளம் மிக்க பூமி. சீரான குடிசனப் பரம்பல், சிறப்பான விவசாயம். உயர்ந்த தொழிற்துறை, வரையறையற்ற உலக வர்த்தகம் என்பன அமெரிக்க நாட்டின் அபரிமிதமான வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

உலகின் சில நாடுகள் விவசாயத்தையே நம்பியுள்ளன. சில தொழிற் துறையில் கவனத்தைச் செலுத்துகின்றன. ஆனால் அமெரிக்காவின் நிலையோ வேறு. விவசாயத் துறையில் சாதனை படைப்பதோடு தொழில்துறையிலும் முன்னணி நாடாகத் திகழ்கின்றது. உலகில் கோதுமையை அதிகளவில் பயிரிடும் நாடுகளில் அமெரிக்கா முதன்மையானது. அதேவேளையில் 'போயிங்' போன்ற இராட்சத விமானங்களும் இந்த நாட்டில்தான் தயாரிக்கப்படுகின்றன. இதைவிட உலகிலேயே அதிகளவு பெற்றோலிய எரிபொருளைத் தனது பூமியின் அடியில் கொண்டுள்ள நாடாகவும் அமெரிக்காதான் விளங்குகின்றது. ஆனால், அமெரிக்கா தனது எரிபொருள் வளத்தில் இன்னமும் கைவைக்காது மத்திய கிழக்கு நாடுகளின் எண்ணெய் வளங்களைச் சுரண்டிக் கொண்டிருப்பது வேறு விடயம்.

குவைத் நாட்டை ஈராக் ஆக்கிரமித்த போது அமெரிக்கா வரிந்துகட்டிக் கொண்டு அதனை மீட்பதற்காகச் சென்றமை குவைத்தின் மீதுள்ள பாசத்தினால் அல்ல. அங்கே பூமிக்கடியில் புதைந்து கிடக்கும் எண்ணெய் வளங்களைச் சுரண்டுவதே அதன் முக்கிய நோக்கமாக இருந்தது. அதற்கான சந்தர்ப்பத்தை அமெரிக்கா எதிர்நோக்கிக் கொண்டிருந்த போது ஈராக் வழியமைத்துக் கொடுத்தது. சதாம் ஹுசைன் இரசாயன ஆயுதங்களைத் தயாரித்துப் பதுக்கி வைத்திருக்கிறார் என ஒரு பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்தி ஈராக் நாட்டையே இரத்தம் தோய்ந்த சுடுகாடாக மாற்றியதும் சதாம் ஹுசைனைத் தூக்கில் தொங்கவிட்டதும் அமெரிக்காவின் நரித்தனமான கைங்கரியமே. இதைப் போலவே ஆப்கானிஸ்தானிலும் காலை வைத்து அதனை வெளியே இழுக்கமுடியாது அவதிப்படுகின்றது அமெரிக்கா.

**ஆசிய நாடொன்று அமெரிக்காவுக்குச் சவால் விடும் நிலைமை எதிர்காலத்தில் உருவாகக் கூடிய சாத்தியங்களை மறுக்க முடியாது**

சோவியத் ரஷ்யா உடையாமல் கட்டுக்கோப்புடன் இருந்த காலப்பகுதியில் அமெரிக்காவுக்குச் சவால் விடுமளவுக்குப் பலம் வாய்ந்ததாக அது விளங்கியது. அமெரிக்காவும் ரஷ்யா விடயத்தில் சிறிது அடக்கியே வாசித்துக் கொண்டிருந்தது. ஆனால் கோர்பச்சேவ் ரஷ்ய ஒன்றியத்தை உடைத்துச் சின்னாபின்னப்படுத்திய பின்னர் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

இதைவிடத் தனது ஆயுத உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் நோக்கில் ஆசிய, ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் மூள்வதற்கும், நாடுகளுக்கிடையேயான போர்கள் மூள்வதற்கும் அமெரிக்க தூண்டுகோலாக இருந்தமைக்குத் தக்க ஆதாரங்கள் பல உள்ளன. ஒருபுறத்தில் சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டு மறுபுறத்தில் பிரச்சினைகளைத் தூண்டிவிடும் குள்ளத்தனமான காய் நகர்த்தல்கள் அமெரிக்காவுக்குக் கைவந்த கலை.

அரபு நாடுகளுடன் யூத இன மக்களைக் கொண்ட இஸ்ரேல் நாட்டை மோதச் செய்து அமெரிக்கா குளிர்காய்வது தனது சுயநோக்கங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதற்காகவே. ஏனென்றால் அமெரிக்க யூதர்கள் ஆதிக்கம் செலுத்தும் ஓர் இனமாகத் தோற்றம் பெற்றுள்ளனர். அமெரிக்காவின் முக்கிய அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள், பெரும் பணக்காரர்கள் ஆகியோர் யூத இனத்தைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்களைத் திருப்திப்படுத்தவேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ளது. அதேவேளை எண்ணெய் வளம்மிக்க அரபு நாடுகளைப் பகைத்துக் கொள்வதற்கும் அமெரிக்கா விரும்பாது. இதன் காரணமாகவே மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனியர்களுக்குமிடையேயான பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இப்படி நிறைய உதாரணங்களைக் கூறலாம்.

அமெரிக்கா வலிந்து தொடுத்த போரை வியட்நாம் மக்கள் உறுதியுடன் எதிர்த்து நின்று முறியடித்த பின்னராவது அந்த நாட்டுக்குப் புத்தி தெளிந்திருக்க வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் கூட அமெரிக்கா ஓரவஞ்சகமான முறையில்தான் நடந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத் தமிழர்களே. சீன நாட்டின் மீது இலங்கையரசு கொண்டுள்ள அளவுக்கதிகமான நம்பிக்கை காரணமாக வன்னிப் போரின் இறுதி நாள்களில் யுத்த நிறுத்தமொன்றை அமெரிக்க அதிபர் ஒபாமா கோரியபோது கூட அதனை மஹிந்த அரசு நிராகரித்தது.

இதன்மூலம் ஓர் உண்மை புலனாகின்றது. அமெரிக்காவுக்குச் சவால் விடுமளவுக்கு ஆசியப் பிராந்தியத்திலே ஒரு சக்தி உருவெடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதுதான் அது. அந்தச் சக்தி வேறு யாருமல்ல சீனாதான். தனக்கு மிக நெருங்கிய நாடான இந்தியாவை இலங்கை அவ்வளவு கண்டுகொள்ளாமல் இருப்பதற்கும் சீனாதான் காரணம்.

இன்று உலகளவில் அமெரிக்காவுக்குச் சவால் விடக் கூடிய ஒரு நாடு உண்டென்றால் அதுவும் சீனாதான்.

பொருளாதார பலத்தில் உலகில் இது வரை இரண்டாவது இடத்தில் நின்ற ஜப்பானை வீழ்த்தி சீனா அந்த இடத்தில் அமர்ந்துள்ளது. இராணுவப் பலத்திலும் அசுர வளர்ச்சி பெற்றதாக சீனா மாறியுள்ளது. இதனால் அமெரிக்காவின் கண்ணில் விரலைவிட்டு ஆட்டுமளவுக்கு உயர்ந்து நிற்கின்றது சீனா. சகல துறைகளிலும் ஒப்பீடு செய்யும்போது இந்தியா சீனாவுக்கு அடுத்த நிலையில்தான் உள்ளது. பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்டதாகக் கூறப்படும் காஷ்மீர் பிரதேசத்திலே சீனா தனது நடமாட்டத்தை அதிகரித்த போதிலும் இந்தியா கைகட்டி வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கின்றது. இந்திய - சீன எல்லைப் பிரச்சினையிலும் இதேநிலைதான். 1962 இல் சீனாவிடம் வாங்கிய அடியை இந்தியா இன்னமும் மறந்துவிடவில்லையென்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இந்தியாவின் பலவீனத்தைப் புரிந்து கொண்ட இலங்கை அரசு சீனாவுடன் குலாவுவதில் தவறெதுவும் இல்லை. ஆனால் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு இந்தியா, இலங்கைக்கு விழுந்து விழுந்து உதவியதை இலங்கையரசு மறந்து போனதுதான் வேடிக்கையானது. அத்துடன் சீனா தனக்கு ஆதரவாக நிற்கின்றது என்ற தைரியத்தில்தான் அமெரிக்க அதிபரின் வேண்டுகோளை இலங்கை நிராகரித்தது.

**ராஜராஜன்**

ஈரான் விடயத்தில் கூட அமெரிக்கா எதுவும் செய்வதற்கு இயலாத நிலையில் கையைப் பிசைந்து கொண்டிருக்கின்றது. அணு மூலகங்களை ஈரான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்துவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் ஈரான் அதை மறுத்து தனது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கே அணு சக்தியைப் பயன்படுத்துவதாகத் தொடர்ந்து கூறி வருகின்றது. ஆனால், இதை ஏற்காத அமெரிக்கா கடுமையாகச் சீறியது. இதனை ஈரான் பொருட்படுத்தவேயில்லை. மாறாக அமெரிக்காவுக்குச் சவால் விடுமளவுக்கு ஈரானிய ஜனாதிபதி அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றார். இது ஆப்கானிஸ்தான், ஈராக் போன்று தன்னிடம் அமெரிக்கா வாலாட்ட முடியாது என ஈரான் நினைப்பதையே வெளிக்காட்டுகின்றது. ஏனென்றால் ஈராக்கில் அமெரிக்கா நுழைந்து வெளியே வரமுடியாது தவிப்பதை ஈரான் நன்கு புரிந்து வைத்துள்ளது.

இதைப் போன்றே மாறிவரும் உலக அரங்கில் அமெரிக்காவின் பிடி மெல்ல மெல்ல நழுவி வருவதை அவதானிக்க முடிகின்றது. முன்னொரு காலத்தில் அமெரிக்காதான் இந்த உலகின் காவலன் என்ற நிலை காணப்பட்டது. ஆனால்

(18ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் 'பொராஸ்ரொய்க்காவும்' 'கிளாஸ்நட்டும்'

பொராஸ்ரொய்க்கா(Perestroika) என்றால் ரஷ்ய மொழியில் மீளக்கட்டமைத்தல் என்றும் கிளாஸ்நட்(Glasnot) என்றால் ரஷ்ய மொழியில் வெளிப் படைத்தன்மை என்றும் பொருள்படும். இவை இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் சோவியத் யூனியனின் அதிபராக விளங்கிய மிகெயில் கோபர்சேவால் அந்நாட்டில் அரசியல் நிர்வாகத்தில் புகுத்தப்பட்டது. அரசியல் மீள் கட்டமைப்பில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு வேட்பாளர் தேர்தலில் நிற்பதற்குப் பதிலாகப் பலவேட்பாளர்கள் தேர்தலில் நிற்கும் முறையினை அறிமுகம் செய்தார். இது பல கட்சி வேட்பாளராக மாறி கம்யூனிஸ்ட் கட்சி அல்லாதவர்களின் கையில் அதிகாரத்தினைக் கொடுத்தது. மற்றும் பிராந்திய நாடுகளும் தமது பிரிவினையை வேண்டி நின்றன. மூடிய பொருளாதாரம் திறந்த பொருளாதாரமாக மாற்றப்பட்டது. கிளாஸ்நட் என்ற பதத்தினால் வெளிப்படைத்தன்மை அரசியலில் கொண்டுவரப்பட்டது, இதன் போது கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வாதிகாரம் குறைக்கப்பட்டது, அதிகாரத் துஷ்பிரயோகம் கட்டுப்படுத்தப்பட்டது, கருத்துச் சுதந்திரம் அதிகரிக்கப்பட்டது, அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

கோபர்சேவின் மறுசீரமைப்பு, சோவியத் யூனியனின் பலவீனங்களை வெளிப்படுத்தியது. வறுமை, வேலை வாய்ப்பின்மை, ஆப்கானிஸ்தான் யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி என்பன எதிர்பார்த்த பலனைத் தராது பல எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தின. சுகாதாரம், கல்வி என்பன பின்னடைவைச் சந்தித்தன. கலாசார சீரழிவுகள் தோன்றின. சோவியத் யூனியனின் கடுமையான அரசியல் சித்தாந்தமும் பொருளாதார மேம்பாட்டினைக் கவனிக்காமையும் தகவல் தொடர்பு கட்டுப்பாடுகளுமே அதன் விளைவுக்குக் காரணமாகின.

**டாக்டர்**
**சி.யமுனாநந்தா**

சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்களே தற்போது இலங்கையிலும் ஏற்பட்டு வருகின்றது. இன - முரண்பாடுகள் குறித்த வெளிப்படைத்தன்மை, அரசியல் அணுகுமுறை இவற்றினை இலங்கைக் கிளாஸ்நட் (Srilanka Glasnot) என்றும் இலங்கைப் பொரொஸ்ரொய்க்கா (Srilanka Perestroika) என்றும் அழைக்கலாம். இதில் எமது அனுபவங்களின் கருத்துப் பகிர்வு ஆரோக்கியமான நீடித்த சமாதானத்தினையும் அபிவிருத்தியினையும் ஏற்படுத்தும்.

எனவே, நல்லிணக்க ஆணைக்குழு முன் எமது மதத்தலைவர்கள், சமூகப் பெரியார்கள், பாதிக்கப்பட்டவர்கள், சட்ட அறிஞர்கள் தமது அனுபவங்களையும் கருத்துகளையும் கூறியிருப்பதாலும் கூறுவதாலும் நிச்சயமாக இலங்கை அரசியலில் - குறிப்பாக இலங்கையின் சகல இனமக்களிடையேயும் - சாந்தமான மாற்றத்தினை ஏற்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HNDA

SLIATE



# பாராட்டி வாழ்…



இ.அபிராமி | ஜே.அலன்ரினா | ச.அமுதரஞ்சினி | ஆ.ஜீவகன் | சு.திலீப்குமார் | த.அனுசானந்தி | க.அஞ்சியா | அ.கஜகோபன் | பா.வாகீசன் | சி.பாலராணி | பா.பார்த்தீபன்



பா.ஞானச்செல்வம் | பா.திபாகரன் | ந.பர்மிளா | கா.சுகந்தினி | ச.சந்திரிகா | கி.டெல்சியா | சி.டுசாந்தி | இ.சிறீதரன் | த.கஜித்ரா | லோ.காயத்திரி | ஞா.ஞானகலா



ஞா.ஹேமாங்கதன் | கோ.கோகுலன் | கு.சஜீபன் | ப.கேமலதா | கி.வினோத் | ஜெ.இந்துஜா | ஆ.யனனி | கு.ஜெனனி | ம.யனீதா | கு.ஜீவிகா | ஜெ.மதனராஜன்



யே.ஜெயக்குமார் | து.ஜெயகௌரி | ஜெ.மாறன் | க.சதீபன் | க.பாலசபேஸ் | க.கவாஸ்கர் | க.பிரதீபன் | க.தனஞ்சயன் | க.முகுந்தன் | த.கபிலா | க.ஜெகரூபன்



க.கவிதா | யோ.ஹேமா | இ.கேதீஸ்வரி | சி.கிருபாலினி | கி.கிருபனா | சா.கோவர்த்தனி | த.கிருஷ்ணபிரியா | கு.மயூரன் | கு.கிரிசாந்தன் | கு.நவநீதன் | ச.லாலினி



கி.லீலாம்பிகை | லோ.மயூரன் | கோ.மெடோனா | சி.மரியவேஜின் | பே.மரிற்றாறொசானி | செ.ஆன்சையா | தே.பிரியதர்சினி | மு.முருகமூர்த்தி | மு.கஜேந்திரராஜா | ந.மோகனதாஸன் | ந.சதீஸ்குமார்



ந.தவச்செல்வம் | ந.உஷாபானு | வ.நாகலோஜினி | ந.யசிகரன் | து.நந்தரூபி | ந.ரமணபிரகாஷ் | இ.நாதவாஷினி | வை.நவரூபி | சு.நவீனா | இ.நிரோஜி | கு.நிஷானா



இ.சாந்தா | பா.மனோராஜ் | ப.ரமணகுமார் | ப.பர்மிலா | ப.கணநாத் | பா.பிரதீபா | நா.பிரியந்தி | சீ.பிரதீபா | பா.பிரேமினி | சி.பிரியதாஷினி | பு.புவிதரன்



இ.மயூரன் | இ.இராகுலன் | இ.ஜெயகுமார் | இ.சிறிராசா | இ.வசீகரன் | ச.ரஜினி | நா.ரஜிதாங்கினி | இ.விஜயரூபன் | ஜெ.றம்யா | இ.இளங்கீரன் | சி.ரேனுமதி



ச.ஜெயப்பிரகாஸ் | பொ.சகிர்தினி | ச.சாருகாசினி | த.சசிதேவி | ச.சவுந்தினி | செ.கிருஷ்ணமேனன் | சி.செல்வமலர் | செ.பிரதீப் | அ.சாலினி | பெ.சாளினி | இ.சோபனா



ஸ்ரீ.ஷோபிகா | சி.ஜெயேந்திரா | ஞா.சிந்துயா | ம.சிந்துயா | [illegible] | சே.மதன[illegible] | [illegible].சுபாஜினி | ம.சுபாகினி | பு.சுபாஷினி | த.சுபாசினி | சு.யனார்த்தனன்


HNDIT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த்துகின்றோம்



ALUMNI ASSOCIATION
JATI
JAFFNA ADVANCED TECHNOLOGICAL INSTITUTE



சு.காண்டீபன் · செ.சுகந்தினி · நா.சுஜனி · இ.சுஜனி · க.சுதாதேவி · அ.சுதர்சனா · தே.சுதர்சினி · த.லோகேஸ்வரன் · வி.தனுஷ்யா · சி.தாரணி · து.தாரணி

த.குருபரன் · ச.தர்சனா · த.ராஜ்பவன் · செ.சஜீவன் · பா.தேனுகா · தே.விஜயசந்திரா · தி.சிற்சபேசன் · க.திருமகள் · தி.முருகதாஸ் · தி.திவாகி · தி.சஞ்ஜீவன்

து.கோபிநாத் · து.சிறீதரன் · ச.துசிதா · வ.தனேஸ் · லோ.வைதேகி · ச.வாரணி · வீ.ஜெகன் · வீ.சஜட்டன்குமார் · வ.தினேஸ் · வி.சத்தியபிரசன்னா · வி.அமிர்தரூபன்

ம.வினோதா · தி.வினோதா · யோ.ராஜீவ் · யோ.மகேந்திரன் · யோ.சதீஸ்குமார் · யோ.தனேஷ்

HNDM

நி.மக்லின் · ப.தர்ஷிகா · ச.அரங்களா · பா.பாலகஜேந்தினி

பி.நிஷாந்தினி · பா.ஜனிற்றா · ச.கினுஜா · வ.குணதீபா · ந.லிஜினி · ப.இமல்டா · த.நித்தியகலா · ஞா.பிரதீபா · தே.சங்கீதா · க.சந்தியா · லோ.சாதனா

தி.ஷயந்தினி · செ.உமாசுதன் · இ.செவ்வந்தி · சி.ராஜீவன் · சி.சுதர்சன் · க.சுகிர்தா · ப.சுஹாசினி · யே.சுதர்சினி · ப.தமிழினி · க.தனுசியா · தே.தாரணி

தே.துஸ்யந்தி · ம.துஷியா · சி.வனஜா · அ.விஸ்வரூபி

HNDBS

ப.டயாலினி · நா.காந்திமதி · ம.நித்தியா · ந.ரணித்தா · சி.சிவசெளம்யா · த.பிரேமினி

தெ.சாருகா · வை.சதீஸ்குமார்

NDBS

சோ.தயாபரன்

HNDE

ஜெ.சிந்துஜா · எ.எட்வினா · ச.கார்த்திகா · ஹ.சேவியர் · இ.யூடிற்ரா · கோ.கல்பனா

க.மாதவன் · ப.பாலமுகுந்தன் · பா.பிரசாந்தினி · சி.கிரிதரன் · சூ.டக்ளஸ் · இ.சுகுணா · அ.தயாளினி · வ.பாலசிங்கம் · செ.வனஜா · வீ.திவ்வியநாதன் · ச.விஜிதா

HNDIT

ஆ.அபிதா · ந.ஜனனி · இ.ஜீவிதா · ம.கோகுலன் · கு.மதுராயினி · செ.செல்வஜிந்தன் · க.செல்வதர்சினி · செ.சிந்துஜா · இ.தர்ஷிகா · அ.திருமகள்



சி.துசாந்தினி

**ALUMNI ASSOCIATION**
Jaffna Advanced Technological Institute,
No.665/2, Beach Road, Jaffna.
Web: www.jatialumni.org
T.P: 0213206542

இன்று 16.11.2010 செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன 7ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறும் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க அங்கத்துவ மாணவர்களையும் பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.M.சசிகாந்



எமது கல்வி நிறுவன உதவி இயக்குநரும் கணித ஆசிரியருமான திரு.எம்.சசிகாந் அவர்கள் கிராம அலுவலராகப் பதவியேற்று இரு வருடங்களைப் பூர்த்தி செய்தமையை இட்டு மேலும் பல பதவிகளைப் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

B.P.I. கல்விச் சமூகம்.

(105972)

## பரிசில் தின நிகழ்வுகள்

கோப்பாய்,நவ.16

நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை பரிசில் தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் ஆர்.பசுபதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சித்திரவடிவேலும் கலந்துகொள்வர். (ஒ-72)

* * *

வடமராட்சி,நவ.16

வடமராட்சி கிழக்கு மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளி விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமைகாலை 8.30 மணிக்கு திருப்பலிப் பூசையுடன் அதிபர் பொ.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக மணற்காடு பங்குத் தந்தை அருட்திரு வெஸ்லி அன்ரனி அடிகளார் கலந்துகொள்வார். (ம-236)

## நீச்சல் தடாகத்தில் மூழ்கி இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், நவ.16

யாழ்.நகரில் கச்சேரியடியிலுள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தாடகத்தில் மூழ்கி இளைஞர் ஒருவர் மரணமானார்.

நேற்று முன்தினம் நண்பர்கள் சிலருடன் நீந்தச் சென்ற வேளையிலேயே இவர் நீரில் மூழ்கி மரணிக்க நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. புடைவை நிலையம் ஒன்றில் பணிபுரிந்தவரான ஜஸ்ரின்றேகன் (வயது-29) என்ற இந்த இளைஞர் நவாலி வடக்கு, புலவர் வீதியைச் சேர்ந்தவர் ஆவார் (ஒ-302)

## வாகன விபத்தில் குடும்பஸ்தர் காயம்

கொழும்புத்துறை,நவ.16

யாழ். நாலாம் குறுக்கு வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாய முற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாட்டீன் வீதியைச் சேர்ந்த யோசேவ் இரத்தினம் (வயது 70) என்பவரே தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரைப் பின்பக்கமாக வந்த கார் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. (204-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





திரு.S.மதனரூபன் திரு.S.K.பாலசபேஷ்

இன்று 16.11.2010 கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினைப் பெறும் எமது கல்வி நிறுவன ஆசிரியர்களான திரு.S.K.பாலசபேஷ், திரு.S.மதனரூபன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் உயர வாழ்த்துகின்றோம்.

B.P.I கல்விச் சமூகம்

## ஸ்ரீ மணிகண்ட ஆலயம்

### சிறுவிளான் இளவாலை



### மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

அன்புடையீர்,

மேற்படி ஆலயம் சிறுவிளான் இளவாலையில் நிர்மாணிக்கப்பட்டு வந்தது. இந்த ஆலயத்தின் குடமுழுக்கு விழா கார்த்திகை 2ஆம் நாள் (18.11.2010) வியாழக்கிழமை காலை 8.24 மணிமுதல் 10.36 மணிவரையுள்ள சுபவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அத்தருணம் யாழ்.வாழ் அனைத்து ஐயப்ப பக்தர்களும் வருகைதந்து இவ்விழாவில் கலந்து சிறப்பித்து ஐயப்பன் அருள்பெற வேண்டுகின்றோம்.

17.11.2010 புதன்கிழமை மாலை 6 மணிமுதல் 18.11.2010 வியாழக்கிழமை காலை 8 மணிவரை பக்தர்கள் நெய்க்காப்புச் சாத்தலாம்.

சாமியே சரணம் ஐயப்பா.

ஆலய நிர்மாணக் குழுவினரும் அறங்காவலரும்.

(…978)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH, COLOMBO) நடைபெறும் "உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா" HNDA பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும்

### அமுதரஞ்சினி சண்முகநாதன்

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதற்கு எல்லாம் வல்ல அருள்மிகு நீர்வேலி கந்தனின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

அம்மா-சத்தியதேவி, வாமதேவன் குடும்பத்தினர், நந்தகுமார் குடும்பத்தினர்,ரேணுகா குடும்பத்தினர், சுபாசினி குடும்பத்தினர், சுதர்ஜினி குடும்பத்தினர், தயானந்தி குடும்பத்தினர்.

(105961)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (16.11.2010)இல் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) பட்டத்தினைப் பெற்றுக் கொள்ளும் பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி சிவரஞ்சனி சிறீஸ்கந்தராசா அவர்களை மேலும் பல பட்டங்களும் பல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

திரு.சி.வள்ளுவதாசன் (சின்னமாமா) குடும்பத்தினர்.
பண்ணாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH, COLOMBO) நடைபெறும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் 7ஆவது பட்டமளிப்பு விழாவில் "உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா" (HNDA) பட்டம் பெறும்

### திருமதி நாதவர்ஷனி சிறீகரசர்மா

அவர்களை வாழ்த்துவதோடு, இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புற எல்லாம் வல்ல மானிப்பாய் வேற்கை முருகன், புங்குடுதீவு கண்ணகை அம்மன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:

சு.சிறீகரசர்மா (கணவர்), சி.ஜயஸ்வினி (மகள்),
ந.சுப்பிரமணியக் குருக்கள்- நிரஞ்சனாதேவி (மாமா, மாமி),
சு.சிறீகௌரி (மைத்துனி- மானிப்பாய்),

ந.இரவீந்திரக் குருக்கள்- ரோகினி (அப்பா, அம்மா),
இ.ஜனார்த்தன், இ.சபரீசன், இ.சிறீசுதர்சன்,
இ.மதுசூதன் (தம்பிமார்- திருநெல்வேலி),

சு.கிருபாகரசர்மா, கார்த்திகாயினி, ஹரித்ரன், யதீஸ்ரன் (மைத்துனர், மைத்துனி, பெறாமக்கள்)-SWISS.

சு.சுபாகரசர்மா, காமகோடிகா (மைத்துனர், மைத்துனி)-FRANCE.

சு.சனாதன[illegible] (மைத்துனர்)-FRANCE.
சி.ஞான[illegible] (மாமா-மானிப்பாய்).

(105938)


## பண்ணை வேலைக்கு ஆள்கள் தேவை

**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**

**பண்ணை வேலையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**படத்துடன் விண்ணப்பிக்கவும்.**

**தகுதி: A/L அல்லது O/L**

**01. செயலாளர்**
**02. வாகனச்சாரதி**
**03. காவலாளி**

**தொடர்பு: 0778350478**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

**NECM- NORTH- EAST**
Computer Masters,
Attn: Mr.Sabins Jeyasegara,
360/8, Catholic Press Complex,
Main Street, Jaffna.

(105989)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மாணவர்களின் கல்வியில் இந்தியப் பங்களிப்பு காத்திரமானது

## மத்திய மாகாணசபை உறுப்பினர் உதயகுமார் தெரிவிப்பு

கொழும்பு,நவ.16

இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக இந்திய அரசு செய்கின்ற உதவிகள் வரவேற்கத்தக்கவை என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், மத்திய மாகாணசபை உறுப்பினருமான உதயகுமார் தெரிவித்தார்.

இந்திய அரசினால் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்துக்கு பஸ் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பெருந்தோட்டப்பகுதி பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கடந்த பல வருடங்களாக இந்தியா பல்வேறு உதவிகளை நல்கி வருகின்றது.

தற்போதைய இந்தியத் தூதுவர் தனது பதவியைப் பொறுப்பேற்றதன் பின்பு மலையகத்துக்கு விஜயம் செய்தபோது நானுஓயா தோட்டமொன்றுக்கு நேரடியாக விஜயம் செய்தார்.

இதன்போது மலையகத் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகள் குறித்து அவரின் க்வனத்திற்கு நாம் கொண்டு வந்தோம். பெருந்தோட்ட மக்கள் மீது அவர் மிகுந்த கரிசனை கொண்டுள்ளார்.

இந்த நிலையில் மலையக மாணவர்களுக்கென தனியானதொரு பல்கலைக்கழகமொன்றை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு உதவி புரிய வேண்டும். இதன் மூலமே உயர் கல்வியில் பின்தங்கியுள்ள எமது மலையகத் தமிழ் மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்த முடியும்.

அதேவேளை, தொழிலாளர்களின் நலன் கருதி தோட்டப் பகுதிகளில் இந்திய அரசு போதுமான வீடமைப்புத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மலையகப் பகுதி களில் இலங்கைக்கான இந்திய தூதரகம் மேற்கொள்ளும் பணிகளுக்கு நாம் முழுமையான பங்களிப்பை வழங்குவோம் - இவ்வாறு உதயகுமார் தெரிவித்தார். (ளி)

# மலையக வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வு

கொழும்பு,நவ.16

மலையக விளையாட்டு வீர, வீராங் கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர் வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஹப்புத்தளை இந்து கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

செரமிக் விளையாட்டுக் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

விழாவில், கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேசிய, சர்வதேச மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களும் -

திறந்த மட்டப் போட்டிகளாக நடத்தப்பட்ட வலைபந்தாட்ட மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.




ஹப்புத்தளை, நுவரெலியா, பண்டாரவளை, மாத்தளை, இரத்தினபுரி பகுதிகளைச் சேர்ந்த மலையக விளையாட்டு வீர, வீராங்கனைகளே இவ்வாறு கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி வைபவத்தில் பிரதம அதிதியாக ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான், சிறப்பதிதிகளாக ஊவா மாகாண சபை உறுப்பினர் அ. அரவிந்தகுமார், ஹப்புத்தளை நகரசபைத் தலைவர் ஆர்.கே. எம்.அஸ்வர்கான், ஹப்புத்தளை பிரதேச சபை உறுப்பினர் எஸ். கலைசகாதேவன், ஹப்புத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்தகுமார உட்பட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ளி)

# கடத்தப்பட்ட வர்த்தகர் விடுவிப்பு

கண்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்ட வர்த்தகர் மூன்று நாள்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். இவர் சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனக் கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

இனந்தெரியாதவர்கள் அவரது முகத்தில் இரசாயனத் திராவகமொன்றை விசிறிவிட்டே வாகனத்தில் கடத்திச் சென்றிருந்தனர்.

தான் சுயநினைவை இழந்திருந்ததால் கடத்தியவர்களை இனங்காணவில்லை என்றும், தன்னை எங்கு தடுத்து வைத்திருந்தார்கள் என்பது ஞாபகமில்லை என்றும் வர்த்தகர் தெரிவித்திருக்கிறார்.

கடத்தப்பட்ட இவர் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை கண்டி லூவி பீரிஸ் வீதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

இவர் மீது கடத்தல்காரர்கள் மேற்கொண்ட தாக்குதல்கள், சித்திரவதைகள் காரணமாகவே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியொருவரின் புதல்வரெனத் தெரியவந்துள்ளது. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ளி)

# போதையில் வாகனம் செலுத்திய 21 பேர் கண்டி நகரில் கைது

கண்டி,நவ.16

மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் கண்டி பொலிஸாரால் 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் சைக்கிள் செயலணி மேற்கொண்ட திடீர் சோதனைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் மிதமிஞ்சிய மதுபோதையுடன் வாகனம் செலுத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் தோட்ட அதிகாரிகள், வங்கி உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சேவையாளர்களும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(ளி)

# பசுமாட்டால் எழுந்த சண்டையில் தாக்கப்பட்ட தம்பதி கவலைக்கிடம்

## சந்தேகநபர் கைது

பதுளை,நவ.16

பசுமாடொன்றின் உரிமை தொடர்பாக இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில், உலக்கையினால் தாக்கப்பட்ட கணவனும், மனைவியும் ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில், பதுளை எகொடவெல என்ற இடத்தைச் சேர்ந்த எஸ். எம். கருணாரட்ன (வயது-59) என்பவரும், அவரது மனைவியான ஆர்.எம். தம்மிகாவதி (வயது-48) என்பவருமே படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதென வைத்தியசாலை வட் டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் பதுளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (ளி)

# மூவின மாணவர்களுக்கும் இடையில் பரஸ்பர உறவுக்கான வேலைத் திட்டம்

அம்பாறை,நவ.16

சுற்றுப்புறச் சூழல் சுகாதார பாதுகாப்பு, சமூக நல்லிணக்கம் ஆகியவற்றை இனங்களிடையே ஏற்படுத்துவதற்கும் மூவின மாணவர்களுக்கிடையிலான பரஸ்பர உறவினைப் பலப்படுத்துவதற்குமான வேலைத் திட்டம் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் நிதியுதவியுடனும் கல்வி அமைச்சின் அனுசரணையோடும் 'கெப்ஸ்ஓ' நிறுவனத்தினால், இந்த வேலைத்திட்டம் அம்பாறை மாவட்டத்தின் 6 கல்வி வலய பிரிவுக்குட்பட்ட 60 பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

இதன் அடிப்படையில் தெய்யத்த கண்டி பிரதேசத்தைச் சேர்ந்த 10 பாடசாலைகளிலிருந்து 120 மாணவர்கள் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை, கணேசா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் பீ.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. தௌபீக் கலந்து கொண்டார். அதிதிகளாகக் கல்வி அதிகாரிகளும் 'கெப்ஸ்ஓ' நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ளி)

## ஜனாதிபதியின் பதவியேற்பை முன்னிட்டு

# 50 ஆயிரம் மரக் கன்றுகள் நேற்று மட்டு. மாவட்டத்தில் நடப்பட்டன

மட்டக்களப்பு,நவ.16

ஜனாதிபதியின் பிறந்ததினம் மற்றும் இரண்டாவது பதவியேற்பு வைபவங்களையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று 11 நிமிடங்களில் 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

போலிஸ்மா அதிபர் மந்த பாலியாரின் பணிப்பின் பேரில் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த மரநடுகை வைபவம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஐ.எம். கருணாரட்ன தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் திலக் விஜயவர்த்தன உட்பட பெருமளவிலான உயர் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பொலிஸ் திணைக்கள ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களிலும் மரநடுகை வைபவங்கள் இடம்பெற்றன.

# நாவற்குடாவில் வீடொன்றிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு,நவ.16

மட்டக்களப்பு மாநகர சபைக் குட்பட்ட காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடா பகுதி வீடொன்றிலிருந்து ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

மரணமானவர் குறித்த பகுதியைச் சேர்ந்த தட்டச்சு இயந்திர திருத்துநர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். குறித்த சடலம் இவரின் வீட்டிலிலிருந்தே மீட்கப்பட்டுள்ளது.

சடல மீட்பு தொடர்பான செய்தியையடுத்து காத்தான்குடி பொலிஸாரும் நீதிவானும் ஸ்தலத்துக்கு பயணம் செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204-21)

# ஐந்தாவது புதிய கல்வி வலயம் மாகாண ஆளுனரால் திறப்பு

மட்டக்களப்பு,நவ.16

கிழக்கின் உதயம் வேலைத் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டதின் 5ஆவது கல்வி வல




யம் கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்ட வவுணதீவு பிரதேசத்திலுள்ள குறிஞ்சாமுனையில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜய விக்ரம, மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்கனவே 4 வலயக்கல்வி அலுவலகங்கள் செயற்பட்டு வருகின்றன. உப கல்வி வலயமாக இன்று ஆரம்பமாகியுள்ள இக் கல்வி வலயம் எதிர்வரும் ஜனவரி முதல் கல்வி வலயமாக பிரகடனப்படுத்தப்படும் என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எம்.நிஸாம் தெரிவித்தார். திறப்பு விழாவில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்கா உட் பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கல்வி வலயம் உருவாக்கப்பட்டதனூடாக படுவான் கரைப் பிரதேசத்திலுள்ள பெருமளவிலான ஆசிரியர்களும் கல்வி [illegible] (204-21)

# திருமலை - கொழும்பு ரயிலில் மூட்டைப் பூச்சிகளின் தொல்லை

## நித்திரையின்றி அவலப்படும் பயணிகள்

திருகோணமலை, நவ.15

திருகோணமலை - கொழும்புக்கான ரயிலின் முதலாம் வகுப்பு படுக்கை இருக்கைப் பெட்டியில் மூட்டைப்பூச்சிகளின் தொல்லை அதிகரித்துள்ளது என பயணிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை - கொழும்புக்கான ரயிலில் முதலாம் வகுப்பு படுக்கை இருக்கைப் பெட்டிக்கு அதிகரித்த கட்டணமாக ரூபா 750 அறவிடப்படுகிறது. அதனையும் 10 தினங்களுக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளுக்கேற்ப அரச ஊழியர்களும் ஏனையோரும் புகையிரதப் பயணத்தை மேற்கொள்கின்றனர். எனினும் இவர்கள் நித்திரையை இழந்து மூட்டைப்பூச்சிகளின் தொல்லையால் அவதிக்குள்ளாகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மூட்டைப் பூச்சிகளின் தொல்லை ரயிலுடன் நின்றுவிடுவதில்லை. பயணப் பொதிகளுடன் வீட்டிற்கும் இவை வந்து சேர்ந்து விடுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூட்டைப் பூச்சிகளின் தொல்லையிலிருந்து பயணிகளை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி ஏய்ப்புச் செய்தவர்களுக்குப் பொது மன்னிப்பு வரவு செலவுத் திட்டத்துடன் அறிவிப்பு வரும்

கொழும்பு,நவ.16

குறுகிய காலத்தில் வருமானத்தை ஈட்டும் நோக்கத்தில் வரி ஏய்ப்புச் செய்தவர்களுக்கு அரசு வரி மன்னிப்பு வழங்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த வரி மன்னிப்பு வழங்கும் அறிவிப்பை 2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிடுவாரென நிதியமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வரிகளைச் செலுத்தாத தனிப்பட்டவர்கள் அல்லது வியாபார நிறுவனங்கள் இந்த வரி மன்னிப்புமூலம் தண்டனைகள் எதுவுமின்றி தமது வரி நிலுவைகளைச் செலுத்த முடியும். இதனால் அவர்கள் நேர்மையான பிரஜைகளாக வாழ்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

மேலும் இந்த வரி மன்னிப்பை வழங்குவதற்கும் பல காரணங்கள் இருப்பதாக அந்த அதிகாரி மேலும் கூறினார்.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி விடுதலைப்புலிகள் வருமானவரித் திணைக்களக் கட்டடத்தின் மீது விமானத் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பல கோவைகள் அழிந்தோ அல்லது காணமற் போயோ உள்ளன. இதனால் பலர் தமது வருமான வரியைச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

அடுத்ததாக வரி ஏய்ப்புச் செய்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதாகும். தற்போது வர்த்தகர்கள், தொழில் புரிவோர் மத்தியில் இந்த வரி ஏய்ப்புப் பழக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைக் குறைக்க வேண்டும்.

இலங்கையிலே மூன்று சதவீதமானோர் மட்டுமே வருமானவரி செலுத்துகின்றனர். பெரிய வர்த்தக நிறுவனங்களில் 50 வீதமானோர் தமது வருமானவரி விவரங்களைச் சமர்ப்பிப்பதில்லை. இது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாத காலப் பகுதியில் 111.2பில்லியன் வருமான வரியாகப் பெறப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இதே காலப்பகுதியில் 105.6 பில்லியனே பெறப்பட்டது. அத்துடன் இந்த ஆண்டு 364 பில்லியன் பெறுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 11 பில்லியன் அதிகமாகும்.

அத்துடன் அழிந்த அல்லது காணமற்போன கோவைகளுக்குப் பதிலாக புதிய கோவைகள் திறக்கப்படவுள்ளன. இந்தக்கோவைகளுக்குரியவர்கள் கடந்த காலங்களில் வரி செலுத்தாது விட்டாலும் அது கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. இது மேலிடத்தின் உத்தரவாகுமென்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 01 . 12 . 1936



விண்ணில் 14 . 11 . 2002

### அமரர் சின்னக்குட்டி சண்முகராசா

(காங்கேசன் துறை, சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்)

திதி: தசமி (16.11.2010)

நாளும் கோளும் சுழன்றிடவே
ஆண்டுகள் எட்டு ஆனதப்பா நீங்கள் எமைப் பிரிந்து
கழிகின்ற பொழுதெல்லாம் விழிகளிலே நீர் சுமந்து
கலங்கியே தவிக்கின்றோம் நாங்கள் இங்கு தனிமரமாய்.

இளவாலை வடக்கு, வேரவல். (105986) தகவல்: ச.சிவபாலகிருஸ்ணன் (மகன்- ராஜன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 27 . 03 . 1951



மறைவு 17 . 10 . 2010

### அமரர் ஐயாத்துரை தேவராஜா

எமது அன்பு O.K.தேவா
எம்மோடு நீ வாழ்ந்த பசுமை நினைவுகள்
என்றும் எமதுள்ளத்தில் நிலை கொள்ளும்.
உமது ஆத்மா சாந்திபெற இறைவனை
வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்: நண்பர்கள்.

அரியாலை. (105922)

## மரண அறிவித்தல்

### தருமராசா தவகருனேஸ்வரன் (கண்ணன்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா தவகருனேஸ்வரன் 05.11.2010 அன்று டோகாவில் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தருமராசா- மங்கயர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும் தவேஸ்வரன் (கால்நடை வைத்திய நிலையம்- சண்டிலிப்பாய் திணைக்கள உதவியாளர்), றங்கேஸ்வரி (றங்கா-முன்பள்ளி ஆசிரியை, மல்லாகம் கலைமகள்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பானுஷாவின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற இராசையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்புப் பேரனும் செல்வராசா, தங்கராசா, ஆனந்தராசா, ஜெயராசா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் செல்வராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் இரத்தினம் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் யோகராசா, கந்தசாமி காலஞ் சென்ற றங்கநாதன் மற்றும் கெங்காதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

புகையிரத வீதி, மல்லாகம். (105990)

## ஆயுள்வேத வைத்தியசாலையை பணிப்பாளர் பார்வையிட்டார்

பண்டத்தரிப்பு,நவ.16

பிரான்பற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரு மாடிகளைக் கொண்ட ஆயுள்வேத வைத்தியசாலையை வடமாகாண சுதேச வைத்தியப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் கடந்த வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.

பிரான்பற்று மக்களால் புதிதாக ஒப்படைக்கப்பட்ட நிலத்தைப் பார்வையிட்ட பணிப்பாளர் அங்கு மூலிகைப் பயிர்களைப் பயிரிடுவதற்கான ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆயுள்வேத வைத்தியசாலையில் 24மணி நேரமும் சேவை இடம்பெறவுள்ளது.

இந்த வைத்தியசாலையில் சுதேச வைத்தியத் திணைக்களத்தினால் 'நிக்கொட்' உதவியுடன் ஒருகோடி 85 லட்சம் ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-204-135)

## கோட்ட மட்டப் போட்டியில் மாணவி முதலிடம்

நவாலி,நவ.16

மாற்று ஆற்றலுடையோருக்கான கோட்டமட்டப் போட்டி, பிரிவு மூன்றில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணி வித்தியாசாலை மாணவி ப.சுவன்யா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

குழு இசைப் போட்டியிலும் இந்தப் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (204-100)

**மாறிவரும்...**

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று எல்லாமே மாறிவிட்டது. இன்னும் இரண்டு தசாப்த காலங்களில் சீனா பொருளாதார, ஆயுதபலத்தில் அமெரிக்காவை வீழ்த்தி முன்னுக்கு வந்துவிடும் எனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இது உண்மையிலேயே நிறைவேறுமாயின் அமெரிக்காவின் நிலை தாழ்ந்து விடும் என்பதில் ஐயமே இல்லை.

இப்போது அமெரிக்காவின் பின்னால் அணிதிரளுபவர்களும் கூட எதிர்காலத்தில் சீனாவை நாடிச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அந்த [illegible] இலங்கையாக [illegible] தனமானதுதான்!

## வழிபாட்டு மண்டபம் அமைக்க அடிக்கல்

கொழும்புத்துறை,நவ.16

மணியம் தோட்டம் கத்தர் ஆலயத்தில் வழிபாடுகளை நடத்துவ்தற்கு வசதியாக வழிபாட்டு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

கத்தர் ஆலயம் முற்றாக அழிவுற்றதையடுத்து புனரமைப்புச் செய்யப்படும் வரை வழிபாட்டு தேவைகளுக்காக இந்த மண்டபம் அமைக்கப்படவுள்ளதாக பங்குத்தந்தை அருட்திரு ஜோய் பேடினன் அடிகள் தெரிவித்துள்ளார்.

ஆலயத்திற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கபடவுள்ளதால் மக்களின் உதவிகளும் தேவைப்படுவதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (204-135)

## வாராந்த ஆன்மிக நிகழ்வு

வடமராட்சி,நவ.16

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''தேவிபாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்தவுள்ளார். (204-236)

## வேலை தேடுகிறீர்களா..? இது உங்களுக்கு...



**நிதி திட்டமிடல் அமைச்சு**

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் சுங்கப் பரிசோதகர் தரம் II ஆம் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

வயது: 18-24 வயது

உயரம்: ஆண்கள் 5அடி 5 அங்குலம்
பெண்கள் 4அடி 3அங்குலம்

கல்வி: 1) க.பொ.த.சாதாரணதரம்:-தமிழ்மொழி கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச்சித்தி, ஆங்கில மொழியில் சாதாரண சித்தி.

2) க.பொ.த.உயர்தரம்: ஒரே தடவையில் மூன்று பிரதான பாடங்களில் சித்தி.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 15.12.2010

**சுகாதார அமைச்சு**

துணை மருத்துவத் துறையில் மருந்தாளர்கள் தொழிற் பயிற்சிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல்

வயது: 18-30 வயது

கல்வி: 1) க.பொ.த.சாதாரண தரம்:- தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாது ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.

2) க.பொ.த.உயர்தரம் (2007-2008) இரசாயனவியல் திறமைச் சித்தியுடன் இணைந்த கணிதம், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டில் ஒரே அமர்வில் சாதாரண சித்தி.

3) Zபுள்ளி மதிப்பீடு விண்ணப்பப் பத்திரத்தில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 15.12.2010

மேலதிக விவரங்களுக்கு நவம்பர் மாதம் 12ஆம் திகதிய 1680 ஆம் இலக்க வர்த்தகமானியில் பார்வையிடலாம்.


**ஜனஜய லொத்தர்**

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 177 சீட்டிழுப்புத் திகதி 14.11.2010

வெற்றி இலக்கங்கள்: 14 52 59 64

சுப்பர் இலக்கம்: 11

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 8,407,730/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 1 இலக்கத்துக்கும் | 92196 | ரூ. 20/= | ரூ. 18,43,920/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 1 இலக்கத்துக்கும் | 8361 | ரூ. 40/= | ரூ. 3,34,440/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 2 இலக்கங்களுக்கும் | 7135 | ரூ. 100/= | ரூ. 7,13,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 2 இலக்கங்களுக்கும் | 646 | ரூ. 200/= | ரூ. 1,29,200/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 3 இலக்கங்களுக்கும் | 161 | ரூ. 1,500/= | ரூ. 2,41,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 3 இலக்கங்களுக்கும் | 15 | ரூ. 3,000/= | ரூ. 45,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த ஏந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 1,000,000/= | ரூ. 10,00,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் ஏந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 8,407,730/= | * |
| மொத்த எண்ணிக்கை | 108515 | | ரூ. 4,307,560/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 8,687,660/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கோல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333 546 - 47 தொலைநகல்: 2 333 545
Website: www.dlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வாராயோ! பஸ்ஸே வாராயோ!




பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்கின்ற 751ஆம் இலக்க பஸ் சேவையில் பெரும்பாலும் ஒழுங்கற்ற தன்மையே நிலவுவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறையில் இருந்து காலை 6 மணிக்குக் கடற்கரை வீதி வழியாக பயணத்தை மேற்கொள்ளும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் பயணத்திலேயே இந்த ஒழுங்கற்ற நிலை நிலவுவதாகப் பொதுமக்கள் தரப்பிலிருந்து புகார்கள் வந்தபடியுள்ளன.

இந்த பஸ் சேவை காலை நேரத்தில்




பயணத்தை மேற்கொள்கின்றபடியால் இந்த பஸ்ஸில் வைத்தியசாலை ஊழியர்கள், நோயாளிகள், மாண்வர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். எனினும் இந்த பஸ்ஸின் ஒழுங்கற்ற நிலை காரணமாகப் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கருத்துத்தெரிவித்த யாழ். பல்கலைக்கழக ஊழியரான எம்.ராஜ்குமார் -

இந்த 751ஆம் இலக்க பஸ்ஸில் கடந்த சில நாள்களாக ஒழுங்கற்ற நிலை நிலவுகின்றது. இதனால் நான் காலை 6.30இற்கு வரும் 766ஆம் இலக்க பஸ்ஸில் இன்பருட்டியில் இருந்து அச்சுவேலி வந்து அச்சுவேலியில் இருந்து யாழ்ப்பாணம் பஸ் எடுத்து பல்கலைக்கழகத்தை அடைய நேரம் 8.30ஐத் தாண்டிவிடுகிறது. இதனால் வேலைக்குப் பிந்தி வருகின்ற அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

நான் 751ஆம் இலக்க பஸ்ஸில் பயணத்தை மேற்கொள்ளப் பருவ காலச் சீட்டையும் எடுத்துள்ளேன். ஆனால், இப்போது ஒருநாளைக்கு இதைவிட மேலதிகமாக 100 ரூபா செலவாகின்றது.

இந்தச் செலவு ஒருபுறமிருக்க நான் 751ஆம் இலக்க பஸ்ஸில் காலை 6.15 இற்கு ஏறினால் 7.15இற்கு எனது கடமைக்கு வந்து விடுவேன். ஆனால், தற்போது இரண்டு பஸ் ஏறுவதால் நேரம் தாமதித்தே வரவேண்டியுள்ளது. இதுவே தொடர் கதையானால் எனது வேலையும் பறிபோகும் ஆபத்துண்டு என்றார் அவர்.

இது தொடர்பாகப் பருத்தித்துறை டிப்போவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

பஸ் ஒழுங்காகவே ஓடுகிறது. அண்மையில் விரதம் ( பாறணை) நாளில் ஊழியர்கள் வரவின்மையால் ஒழுங்கற்ற தன்மை ஏற்பட்டது. தற்போது எல்லாச் சேவைகளும் ஒழுங்காகவே நடைபெறுகின்றன. காலை 6 மணி பஸ்ஸுக்கு பருவகால சீட்டுப் பயணிகள் 10 பேரும் 7 மணி பஸ்ஸில் பருவகாலச் சீட்டு பயணிகள் 25 பேரும் பயணிக்கின்றனர் என்றார் டிப்போ அதிகாரி ஒருவர்.

இது தொடர்பாக இருதரப்பும் மாறி மாறிக் குற்றம் சாட்டுவதன் மூலமோ தமது தரப்பு நியாயப்பாடுகளை - விளக்கப்பாடுகளை முன் வைப்பதினாலோ எதையும் சாதித்து விடமுடியாது. மக்களுக்கு ஒழுங்கான சேவை சென்றடைய உரியவர்கள் ஆவன செய்ய உழைக்க வேண்டும். அது நடக்குமா?

# கல்வியுலகில் ஒளியூட்டும் வல்லை சிதம்பராக் கல்லூரி

தமிழுக்கு வலுச்சேர்த்த அறிஞர்களையும், மகான்களையும், மேதைகளையும் தந்த, தந்து கொண்டிருக்கும் மண் வல்வை.

அந்த மண்ணில் அலை வீசும் கடலோரமாக அமைந்து கல்விப் பணியாற்றி வருகின்றது வல்வை சிதம்பராக் கல்லூரி. இப்பாடசாலை 1896ஆம் ஆண்டு கு.சிதம்பரப்பிள்ளை என்பவரால் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆலடியில் இயங்கியது. எனினும் சிதம்பரப்பிள்ளையின் அயராத முயற்சியும் அந்த ஊரவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையும் இது தற்போதுள்ள இடத்தில் பாடசாலையாக உருவாகத் தூண்டுகோலாக அமைந்தன. அதாவது 1912ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆலடியில் இருந்து ஊரிக்காட்டுக்கு மாற்றப்பட்டது.

1967ஆம் ஆண்டு இப்பாடசாலைக்குப் பெரிய இருமாடிக் கட்டடம் ஒன்று சிதம்பராக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம், திருகோணமலை பழைய மாணவர் சங்கம், வல்வை பொதுமக்கள் சங்கம் என்பவற்றின் உதவியினால் கட்டப்பட்டது.

இப்பாடசாலையில் தையல் பாகர், அருள்சுந்தரம், யோகச்சந்திரன், ச.சத்தியமூர்த்தி, கோ.செல்வநாயகம், ந.அரியரத்தினம் மகேந்திரன், பு.கிருஸ்ணகுமார் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றி அரும் பணி செய்துள்ளனர்.

தற்போது நற்குணலிங்கம் அதிபராகக் கடமையாற்றி - பாடசாலையை நிர்வகித்து வருகின்றார். இவரின் அயராத முயற்சியினால் பாடசாலையின் பாடவிதான மற்றும் இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் ஏறுமுகம் கண்டு வருகின்றன.




2010இல் இடம்பெற்ற வலயமட்ட கணிதப் புதிர்ப் போட்டியில் 3ஆம் இடத்தை இப்பாடசாலை மாணவன் ராசேந்திரம் துவாரகன் பெற்றுள்ளார். அதே ஆண்டு திருக்குறள் மனனப்போட்டியில் இப்பாடசாலை மாணவன் க.கருணரூபன் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் தின விளையாட்டு விழாவின் மரதன் ஓட்டப்போட்டியில் இப் பாடசாலை மாணவன் ச.பிரசாத் ஆறாம் இடத்தைப் பெற்றுள்ளார். வலய மட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியிலும் இப்பாடசாலை மாணவிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

தற்போது பெண்கள் சாரணியம் இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகின்றது.

இதேவேளை இப்பாடசாலையின் வளர்ச்சி பற்றி பாடசாலை அதிபரிடம் கேட்டபோது -

எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர்கள் தாராளமாக உள்ளனர். இதனைத் தந்துதவிய வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்குத் தான் நன்றி கூற வேண்டும் என்றார்.

தற்போது அடிப்படை வளக் கட்டுமான அபிவிருத்தி ஏறுமுகம் கண்டு வருகின்றது. மனையியல் அறை, பல் தொழில்நுட்ப அறை ஆகியன திருத்தியமைக்கப்பட்டுள்ளன. பாடசாலை வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கம் தனது முழு வலுவையும் செலுத்தி வருகின்றது. தற்போது கல்லூரி வரலாற்றில் முதன்முறையாக 'பான்ட்' வாத்தியக் கருவிகள் பழைய மாணவர் சங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டு மாணவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அவர்கள் சிறந்த 'பான்ட்' வாத்திய குழுவினராகவும் செயற்பட்டு வருகின்றனர் - என்றார்.

பிரதேச அபிவிருத்தியிலும் பாடசாலை மாணவர்களின் பாடவிதான, இணைப்பாட விதான அடைவுகளைப் பெறவும் தொடர்ந்தும் உழைத்துவரும் சிதம்பராக்கல்லூரி உண்மையிலேயே வல்வை மண்ணின் கொடைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

செல்வி.எஸ்.முருகுப்பிள்ளை B.A Dip.in.Edu
மட்/புனித சிசிலியா பெ.தே.பாடசாலை
திரு.கே.குணரட்ணம் B.A Dip.in.Edu
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்

G.C.E.(O/L)
வலம்-5
வெளியீடு-2
மட்டக்களப்பு

## வரலாறு - I

**நேரம்: 1 மணித்தியாலம்**

01. "வரலாறு என்பது கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையேயான உரையாடல்" என்ற கருத்தை முன்வைத்தவர்,
1) ஈ.எச்.கார். 2) ஹெரடோரஸ். 3) ஸ்ருவட்பிகொட். 4) பேர்க்காட்.

02. சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கு உதாரணமாக அமைவது,
1) மிகிந்தலைக் கற்பலகைக் கல்வெட்டு.
2) கடலாதெனிய குன்றுக் கல்வெட்டு.
3) பொலநறுவைச் சுவர்க் கல்வெட்டு.
4) பதுளைத் தூண் கல்வெட்டு.

03. தனநந்த மன்னனின் அமைச்சராக இருந்தவரும், சந்திரகுப்த மன்னன் மௌரியப் பேரரசைத் தோற்றுவிக்க அரசியல் ஆலோசனையும் உதவியும் வழங்கியவருமான பிராமணர்,
1) பண்டுலன். 2) சந்திரன். 3) கௌடில்யன். 4) மெகஸ்தனிஸ்.

04. இந்துமதத்தவனாக இருந்தபோதும் ஏனைய மதங்கள் தொடர்பாகவும் சலுகைகள் வழங்கும் போக்கைக் கடைப்பிடித்த குப்த மன்னன்,
1) முதலாம் சந்திரகுப்தன். 2) 2ஆம் சந்திரகுப்தன். 3) சமுத்திரகுப்தன். 4) குமாரகுப்தன்.

05. பின்வரும் எம்மன்னன் காலத்தில் கொவி (விவசாய) குலத்தவர் அரச பதவிகளைப் பெறுவதற்காக மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சிசெய்தனர்?
1) சத்தாதிஸ்ஸ. 2) நிஸ்ஸங்கமல்லன். 3) எல்லாளன். 4) 5ஆம் மகிந்தன்.

06. கி.பி. 1215ஆம் ஆண்டு 24,000 படைவீரருடன் இலங்கை வந்த கலிங்க மாகன் பொலநறுவையை ஆக்கிரமித்தபோது இங்கிருந்த மன்னன் யார்?
1) வீரபாகு. 2) 2ஆம் விஜயபாகு. 3) வீரபாண்டியன். 4) பராக்கிரமபாண்டியன்.

07. கலாவாவிக்கு அண்மையில் மன்னன் தாதுசேனனால் நிர்மாணிக்கப்பட்ட அவுக்கணைப் புத்தர் சிலை பிரதிபலிக்கும் கலாசாரம்,
1) குப்த கலாசாரம். 2) பல்லவர் கலாசாரம். 3) அமராவதி கலாசாரம். 4) ஆந்திர கலாசாரம்.

08. எதிர்காலத்தில் இராசரட்டையைக் கைப்பற்றக்கூடிய படையணிகளையும் பொருளாதார பலத்தையும் தூரநோக்குடன் உருவாக்கிய மன்னன்,
1) பந்துகாபயன். 2) முதலாம் விஜயபாகு. 3) முதலாம் பராக்கிரமபாகு. 4) கவந்திஸ்ஸ.

09. இசுறுமுனிய விகாரைக்கும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களுக்கும் நீர் விநியோகிக்கப்பட்ட முறையைக் கூறும் 4ஆம் மகிந்த காலக் கல்வெட்டு,
1) வேவல்கெட்டிய கல்வெட்டு. 2) ஜேத்தவனராம கல்வெட்டு. 3) வெஸ்ஸகிரிய கல்வெட்டு. 4) மிகிந்தலைக் கற்பலகைக் கல்வெட்டு.

10. மகாகணதற, மாததுகம ஆகிய குளங்களைக் கட்டிய மன்னர்கள் முறையே,
1) மகாசேனன், தாதுசேனன். 2) மகாசேனன், வசபன். 3) வசபன், மகாசேனன். 4) தாதுசேனன், மகாசேனன்.

11. பண்டைக்காலத்தில் உபதிசகம என்னும் இடத்தில் "அந்தராப்பன" என்ற பெயரில் ஒரு சந்தை இருந்ததாகக் கூறும் நூல்,
1) மகாவம்சம். 2) தீபவம்சம். 3) தாதுவம்சம். 4) சூளவம்சம்.

12. மறைந்திருந்து படைதிரட்டி தான் இழந்த அரசை மீண்டும் பெற உதவிய குப்பிகல மகாதிஸ்ஸ தேரருக்கு அபயகிரி மற்றும் காணிகளைத் தானமாக வழங்கியதன் மூலம் மகாவிகாரைப் பிக்குகளிடையே பிளவு ஏற்படக் காரணமான மன்னன்,
1) வொரிக்க திஸ்ஸன். 2) கொடாபயன். 3) மகாசேனன். 4) வலகம்பா.

13. 6ஆம் விஜயபாகு என்னும் பெயரில் ரைகமவைத் தலைநகராகக் கொண்டு கம்பளை மன்னனாக முடிசூடிக்கொண்டவன்,
1) நிஸ்ஸங்க அழகேஸ்வரன். 2) விக்கிரமபாகு. 3) வீர அழகேஸ்வரன். 4) வீரபாகு.

14. ஒல்லாந்தரின் நடவடிக்கைகளுக்கு எதிராக 2ஆம் ராஜசிங்கன் மக்களைத் தூண்டி கிளர்ச்சியில் ஈடுபடுத்தியதனால் கோபம்கொண்டு கற்பிட்டித் துறைமுகத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்த ஆளுநர்,
1) பன்எக். 2) பன்ஹீன்ஸ். 3) விலம்பல்க். 4) பன்எங்கல்பெக்.

15. டில்லியில் "குவ்வத்துல் இஸ்லாம்" பள்ளிவாசலைக் கட்டியமன்னன்,
1) குதுபுதீன் ஐபெக். 2) இல்துமிஸ். 3) கோரிமுகமது. 4) கியாஷீதீன் பல்பன்.

16. "முக்கியமான பிரச்சினைகளை இரத்தத்தின் மூலமும் இரும்பின் மூலமுமே தீர்க்கமுடியும்" எனப் பகிரங்கமாகக் கூறிய தேசியவாதி,
1) அடொல்ப் ஹிட்லர். 2) ஒட்டோமொன் பிஸ்மார்க். 3) பெனிற்றோ முசோலினி. 4) விளாடிமிர் லெனின்.

17. A - அரசுக்கழகம்.
B - மாகாண ரீதியான பிரதிநிதித்துவம்.
C - வரையறுக்கப்பட்ட வாக்குரிமை.
D - உத்தியோகச்சார்பற்றோர் தொகை அதிகரிப்பு.
E - ஆளுநர்நாயகம் நியமிக்கப்படல்.
பிரித்தானியர்கால அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் சில தரப்பட்டுள்ளன. இவற்றுள் 1912, 1931 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் எவை?
1) C, E 2) C, A 3) C, B 4) C, D

18. தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே பௌத்த-கலாசார உறவு இருந்தமைக்குச் சான்றாக அமையாதது,
1) சீனப்பிக்கு பாஹியான் அபயகிரி விகாரையில் திரிபீடகத்தை மொழிபெயர்ப்புச் செய்தமை.
2) தாய்லாந்தில் 'லங்கா வம்சம்' என்ற பெயரில் பௌத்தபீடம் காணப்பட்டமை.
3) ஜாவா பௌத்த சிலைகளில் இலங்கைச் சாயல் காணப்பட்டமை.
4) பர்மா, இலங்கையில் இருந்து திரிபீடக நூலைப் பெற்றமை.

19. மத்தியகால ஐரோப்பாவில் இடம்பெற்ற சிலுவைப்போருக்கான காரணமாக அமையாதது,
1) ஜெருசலேம் அரேபியரால் கைப்பற்றப்பட்டமை.
2) ஜெருசலேம் புனித யாத்திரைக்கு கிறிஸ்தவர்களுக்குத் தடை விதிக்கப்பட்டமை.
3) இஸ்லாமியரது ஆட்சியதிகாரம் ஐரோப்பாவில் அதிகரித்துக் காணப்பட்டமை.
4) கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டமை.

20. மத்தியகால ஆசியாவில் பௌத்தமதம் செல்வாக்குப்பெற்று விளங்கிய நாடுகள் சிலவும், அங்கு அமைக்கப்பட்ட பௌத்த நிலையங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| நாடுகள் | பௌத்த நிலையங்கள் |
|---|---|
| சுமாத்திரா | A ஸ்வேதக்கோன் விகாரை. |
| ஜாவா | B சுகோதய விகாரை. |
| மியன்மார் | C பொரோபொதுர் விகாரை. |
| சீயம் | D அங்கோல்வாட். |
| | E பனண்டொவ். |

1) E, C, A, B 2) C, D, B, A 3) E, C, B, A 4) D, C, A, A

21. உலக வரலாற்றில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களோடு தொடர்புடையவர்களின் பெயர்களும், அவர்களால் எழுதப்பட்ட நூல்களும் தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| பெயர் | நூல் |
|---|---|
| கவுண்கவுர் | A சட்டத்தின் சாரம். |
| ஹிட்லர் | B மீள்பிறப்பு. |
| மொன்டெஸ்கியு | C தீப்பொறி. |
| லெனின் | D எனது போராட்டம். |
| | E செய்யவேண்டியது என்ன? |

1) B, D, A, C 2) D, A, B, C 3) B, D, E, A 4) B, D, A, E

22. பிரித்தானியர் கால ஆளுநர்களது பெயர்களும், அவர்கள் தொடர்புபட்ட சம்பவங்களும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| ஆளுநர் | சம்பவம் |
|---|---|
| றொபட் சாமஸ் | A 1840 பாழ்நிலச் சட்டம். |
| ஸ்ருவட் மக்கென்சி | B 1848 கிளர்ச்சிக்குக் காரணமான வரி. |
| கிரகம் தொம்சன் | C 1915 சிங்கள, முஸ்லிம் கலவரம். |
| வைகவுண்ட் டொறிங்டன் | D 1924 மனிப்டிவன்சயின் யாப்பில் மாற்றம் கோரியவர். |
| | E 1931 டொனமூர் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தியவர். |

1) A, C, B, E 2) C, A, B, E 3) C, B, A, E 4) C, A, E, B

23. இலங்கையில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சிகளும், அவற்றின் முதலாவது தலைவர்களது பெயர்களும் கீழே காட்டப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| அரசியல் கட்சி | தலைவர் |
|---|---|
| லங்கா சமசமாஜக் கட்சி | A ஜி.ஜி.பொன்னம்பலம். |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | B என்.எம்.பெரேரா. |
| கொமியுனிசக் கட்சி | C எஸ்.ஜே.வி.செல்வநாயகம். |
| தமிழரசுக்கட்சி | D கொல்வின் ஆர்.டி.சில்வா. |
| | E எஸ்.ஏ.விக்கிரமசிங்க. |

1) D, A, E, C 2) D, C, E, A 3) B, A, E, C 4) B, C, E, A

24. இலங்கையின் தேசிய கலாசார மறுமலர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்த சிலரின் பெயர்களும், அவர்களால் வெளியிடப்பட்ட பத்திரிகைகளும் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றைத் தொடர்புபடுத்திச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

| பெயர் | பத்திரிகை |
|---|---|
| பியதாச சிறிசேன | A புனார்த்த பிரதீபய. |
| ஹிக்கடுவ சுமங்கள தேரர் | B ஞானதீபம். |
| அறிஞர் சித்திலெப்பை | C சரசவி சந்தெரச. |
| ஹென்றி ஸ்டில்கொட் | D சிங்கள ஜாதிய. |
| | E லங்கா லோகய. |

1) D,E,B,C 2) E,A,B,C 3) D,A,B,E 4) B,A,C,E

25. பிரான்சியப் புரட்சியோடு தொடர்புடைய புரட்சியாளர்கள்,
1) மொண்டெஸ்கியூ, ரூஷோ. 2) மொண்டெஸ்கியூ, மீராபோ. 3) றொபெஸ்பியர், டான்ரன். 4) ரூஷோ, மீராபோ.

26. 1591 இல் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வரை படையெடுத்துச்சென்று இந்துக்கோயில்களை அழித்து, நல்லூர் நகரையும் கொள்ளையிட்ட படையெடுப்புக்குத் தலைமைதாங்கிய போர்த்துக்கேயத் தளபதி,
1) கொண்ஸ்தாந்தைன் டீ பிறகன்சா. 2) பிலிங் ஒலிவேரா. 3) அலீபோண்சோலசர்தா பிறகன்சா. 4) மொண்டென்சா.

27. கைத்தொழிற்புரட்சி முதன்முதல் பிரித்தானியாவில் ஏற்பட்டமைக்கான காரணம் அல்லாதது,
1) சனத்தொகைப் பெருக்கமும் பொருட்களுக்கான கேள்வி அதிகரிப்பும்.
2) குடியேற்ற நாடுகளில் இருந்து மூலப்பொருட்களைப் பெறமுடிந்தமை.
3) உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை.
4) நில அடைப்பு இயக்கத்தால் காணிகளை இழந்த விவசாயிகளின் உழைப்பைப் பெற முடியாது போனமை.

28. பிரித்தானியருக்கு எதிரான முதலாவது சுதந்திரப் போராட்டத்தின்போது தலதா மாளிகையில் இருந்த புனித சின்னங்கள் கிளர்ச்சியாளர்களுக்குக் கிடைக்கக் காரணமாயிருந்த தேரர்,
1) ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கள தேரர். 2) தேவனகல வனரத்ன தேரர். 3) மீத்தெட்டுவ குணாநந்த தேரர். 4) வாரியப்பொல ஸ்ரீசுமங்கள தேரர்.

29. சோல்பரி யாப்பின் கீழ் பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக இலங்கைக்கு நியமிக்கப்பட்ட முதலாவது ஆளுநர் நாயகம்,
1) ஹென்றி மேசன்முவர். 2) சோல்பரிப் பிரபு. 3) ஒலிவர் குணதிலக. 4) வில்லியம் கோபல்லாவ.

30. முதலாளித்துவ நாடுகளின் தலைமைத்துவத்தை ஏற்ற ஐக்கிய அமெரிக்கா அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார விருத்திக்காக மேற்கொண்ட திட்டங்களுள் அடங்காதது,
1) மாஷல் திட்டம். 2) நான்முக வேலைத்திட்டம். 3) அமெரிக்க நாடுகளின் ஒன்றியம். 4) இரகசிய உளவுச்சேவை.

31. 2ஆம் உலக யுத்தத்தின் பின் அதிகளவான உயிர், உடைமைச் சேதங்களையும் சூழல் மாசடைதலையும் ஏற்படுத்திய போர் ஒன்றை ஐக்கிய நாடுகள் தாபனத்தால் தடுக்கமுடியாது போனது. அப்போருக்கான பிரச்சினை,
1) கியூபாப் பிரச்சினை. 2) வளைகுடாப் பிரச்சினை. 3) கொரியப் பிரச்சினை. 4) கம்பூச்சியப் பிரச்சினை.

32. சோவியத் ரஷ்யா சமூக உடைமைக் கொள்கையில் இருந்து விடுபட்டு சுதந்திர பொருளாதாரக் கொள்கை ஒன்றைப் பின்பற்றும் நாடாக மாற வழிவகுத்த சீர்திருத்தங்கள்,
1) முன்நோக்கிய பெரும்பாய்ச்சல். 2) ஐந்தாண்டுத் திட்டம்.
3) பெரஸ்ரொய்க்கா, கிளாஸ்தொட்ஸ்.
4) கைத்தொழில், வங்கிகளை அரசுடைமையாக்கல்.

33. 1978 இல் நடைமுறைக்கு வந்த 2ஆம் குடியரசு யாப்பில் மக்கள் இறைமை செயற்படும் விதத்திற்குச் சான்றாக அமைவது,
1) வாக்குரிமையைப் பயன்படுத்தல்.
2) அடிப்படை மனித உரிமைகளை அனுபவித்தல்.
3) சட்டம், நீதி, நிர்வாகம் என்பன மக்கள் உரிமையாக்கல்.
4) மேற்கூறிய மூன்றும்.

34. ஜனாதிபதியின் நீதித்துறை அதிகாரங்களுள் அடங்காத ஒரு விடயம்,
1) பிரதம நீதியரசர் உட்பட நீதியரசர்களின் நியமனம்.
2) நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.
3) குற்றவாளிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கல்.
4) நீதியரசர்களைப் பதவியில் இருந்து நீக்கல்.

35. இலங்கையின் கைத்தொழில் விருத்திக்காக களனி டயர்த்தொழிற்சாலை, வியாங்கொட நெசவாலை என்பவற்றை அமைக்க உதவிய நாடுகள் முறையே,
1) சீனா, ரஷ்யா. 2) ரஷ்யா, சீனா. 3) ரஷ்யா, கிழக்கு ஜேர்மனி. 4) சீனா, கிழக்கு ஜேர்மனி.

36. "புரட்சி என்பது மக்களை இரவு விருந்தொன்றுக்கு அழைக்கும் செயல் அல்ல" எனக் கூறியவர்,
1) சௌ-என்-லாய். 2) சங்-யாத்-சென். 3) மா-ஓ-சேதுங். 4) சியங்காய்ஷெக்.

37. "நட்பு நாடுகளின் நோக்கம் ஜேர்மனிய மக்களுக்கு எதிராக யுத்தம் செய்வதல்ல, எதேச்சாதிகார ஜேர்மன் ஆட்சியாளர்களுக்கெதிராகப் போரிடுவதே" எனக் கூறியதோடு, "சகலருக்கும் நியாயம்" என்னும் 14 அம்சங்கள் கொண்ட கடிதத்தை மத்திய ஐரோப்பிய வல்லரசுகளுக்கு அனுப்பி வைத்த அமெரிக்க ஜனாதிபதி,
1) பிராங்ளின் றூஸ்வெல்ட். 2) நியோடர் றூஸ்வெல்ட். 3) வூட்றோ வில்சன். 4) ஹெரிஸ்ட்றூமன்.

38. 2ஆம் உலக யுத்தத்தின்போது ஐக்கிய அமெரிக்கா, ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி என்பவற்றின் மீது குண்டுவீசியதை அடுத்து மன்னன் ஹிரோஹித்தோ சரணடைந்த போது அமெரிக்க ஜனாதிபதி,
1) டக்ளஸ் மெக் ஆத்தர். 2) கொமண்டர் பியரி. 3) ஹெரிஸ் டவுண்சென். 4) ஹெரிஸ்றுட்மன்.

(21ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அண்மையில் பரிசளிப்பு விழா நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உரையாற்றுவதையும் அதிபர் க.சந்திர சேகரன் மற்றும் ஏனைய விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (28)



தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ச.க.குசலகுமாரன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் அவரின் பாரியார், பாடசாலைச் சமூகத்தவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (204)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் நவோதய வார இறுதி நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள நவோதயத் திட்டப் பணிப்பாளர் கே.செல்வன், மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன் அமர்ந்திருப்பதையும் காணலாம். (204)



ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியர்தின விழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பாடசாலை அதிபர் ந.தெய்வேந்திரராஜா, பிரதி அதிபர் மா.இராஜஸ்காந்தன், பாடசாலை பழைய மாணவர் சங்கத் தலைவர் ந.குணசீலன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பதில் செயலாளர் பொ.குமாரசாமி, ஆசிரியர்கள் ஆகியோரை மாணவர்கள் 'பாண்ட்' வாத்தியத்துடன் அழைத்து வருவதைக் காணலாம். (204)

39. ஜப்பானிய இராணுவத்தின் அடிமட்ட ஊழியனாக இருந்து ஆட்சியாளனாக உயர்ந்த அறிவுத் திறனும் நிர்வாகத்திறனும் கொண்ட அதிகாரியாக விளங்கியவன்,
1) நொபு தகா.
2) ஹிதேயோஷி.
3) டொகுகாவா கியாஷீ.
4) சத்சும சமுராய்.

40. அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக 2ஆம் குடியரசு யாப்பில் வழங்கப்படாத பாதுகாப்பு நடவடிக்கை,
1) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி மூலம் வழக்குத்தொடரல்.
2) உயர் நீதிமன்றத்தில் நேரடியாக வழக்குத் தாக்கல்செய்தல்.
3) பாராளுமன்றத்தின் நிர்வாக ஆணையாளரிடம் முறைப்பாடுசெய்தல்.
4) மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுசெய்தல்.

## வரலாறு - II

**நேரம்: 3 மணித்தியாலங்கள்**

பகுதி I

* எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

01. 1) 1. இல 1 இன் கீழ் காடடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், 2 இன் கீழ் காட்டப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.
1) கரிந்த நதி, பராக்கிரம சமுத்திரம், மாதுறுஓயா நீர்த்தேக்கம், பொம்பரிப்பு, செங்கடகல, லங்காபட்டுணதிரியாய, கசாப்பபப்பத, மகியங்கனை, பலாங்கொட.
2) கைபர் கணவாய், பாரூகச்சை, மக்கா, கம்போடியா செங்கடல், துருக்கி, ஜெருசலேம், கம்போடியா.

2. கீழே A, B, C, D எனக்காட்டப்பட்டுள்ள வரலாற்று பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்டவர்களை அடைப்புக்குறிகளினுள்ளே தரப்பட்ட பட்டியயிலிருந்து தெரிந்து எடுத்து முறையே எழுதுக.
A. இலங்கை வரலாற்றில் முதலாவது கத்தோலிக்க மன்னனாகவும் போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகவும் செயற்பட்டவன் ..............................
B. 1839 இல் இரத்மலானையில் பரம தர்ம சைத்திய பிரிவெனாவை ஆரம்பித்தவர் ..............................
C. பிம்பிசார மன்னனால் எழுச்சி பெற்ற மகத இராச்சியத்தின் தலைநகர் ..............................
D. பிரான்ஸின் கீழைத்தேய வர்த்தக மத்திய நிலையம் அமைக்கப்பட்டிருந்த நகர் ..............................

(ஸ்ரீ சுமங்கல தேரர், தர்மபாலன், வலானேசித்தார்த்த தேரர், முதலாம் விமலதர்ம சூரியன், பத்தேவியா, ரஜகஹ, பாண்டிச்சேரி உஜேனி)

2) கீழே A, B, C, D எனக் காட்டப்பட்டுள்ள கலைப்படைப்புக்களை இனங்காண்க.

A  B  C  D 

3) 1. அசோகனால் உருவாக்கப்பட்ட தூபிகளும் கோபுரங்களும் இந்தியா எங்கும் பரந்து காணப்பட்டன என்ற கூற்றைக் கூறிய தேசசஞ்சாரி.
2. எந்த மன்னன் ஆட்சிக்காலத்தில் மாத்தளை அலுவிகாரையில் திரிபீடகம் நூலுருவாக்கப் பட்டதாகக் கருதப்படுகிறது?
3. இலங்கயில் தொழிலாளர் உரிமைக்காக் தேசிய அமைப்பை உருவாக்கிய முதலாவது தொழிலாளர் தலைவர்.
4. அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் ஜனாதிபதியாகப் பதவி வதித்தவர்.

பகுதி II

02. 1) பொலநறுவைக்காலத்தில் நீர்ப்பாசனத்திற்கு சேவையாற்றிய மூன்று மன்னர்களை பின்வரும் பட்டியலிலிருந்து தெரிவுசெய்க.
(வசபன், முதலாம் விஜயபாகு, மகாசேனன், முதலாம் பராக்கிரமபாகு, தாதுசேனன், நிசங்க மல்லன்)
2) அநுராதபுரகாலத்தில் இலங்கைக்கு வருகைதந்த ஆக்கிரமிப்பு குழு ஒன்றையும், புலம்பெயர் குழு ஒன்றையும் குறிப்பிடுக.
3) எந்த முறையில் நோக்கினாலும் புராதன இலங்கையில் நிலவிய நீர்ப்பாசன அமைப்புக்கள் தனித்துவமான பொறியியல் தொழில்நுட்பம் கொண்டனவாகும். இதனை இரண்டு விடயங்கள் கொண்டு விளக்குக.
4) நீர்வள நாகரீகத்தின் பொருளாதாரக் கோலங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

03. 1) இராசரெட்டையில் மாகனின் ஆட்சி இடம்பெற்றபோது இலங்கையில் பிரதேச ஆட்சியாளரின் கீழ் நிலவிய நிர்வாக நிலையங்கள் மூன்றின் பெயர் குறிப்பிடுக.
2) தம்பதெனிய காலத்தில் புகழ்பெற்றிருந்த நான்கு பிரதான பிக்குகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
3) ஆறாம் பராக்கிரமபாகு இலங்கை வரலாற்றில் ஏன் உன்னத ஆட்சியாளனாக மதிக்கப்படுகின்றான் என்பதற்கு ஏதுவான இரு காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.
4) தம்பதெனியாமுதல் கோட்டைக்காலம் வரை வர்த்தகம் மேம்பட்டிருந்ததற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக.

04. 1) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய ஐரோப்பிய நாட்டவரின் ஆதிக்க செல்வாக்கில் கீழைத்தேய நிர்வாக நிலையங்களின் பெயர்களை ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.
2) போர்த்துக்கேயரையும், ஒல்லாந்தரையும் கீழைத்தேச நாடுகளுக்கு வரத் தூண்டிய காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.
3) போர்த்துக்கேயரை விட ஒல்லாந்தர் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதில் சிறந்த மதிநுட்பத்துடன் செயற்பட்டனர் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக.
4) பிரித்தானிய ஆட்சியாளருக்கு இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

05. 1) கீழே A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ள செயல்கள் சம்பந்தமாக பிரசித்திபெற்ற நபர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் எழுதிக் காட்டுக.
A. மலைநாட்டு இராஜ்சியத்தில் முதலாவது றெசிடன்டாக கடமை புரிந்தவர்.
B. இலங்கை தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் பதவியை வகுத்தவர்.
C. சகல இலங்கைச் சிறுவர்களுக்கும் இலவச கல்வியை பெற்றுக்கொடுக்க முன்னோடியாகச் செயற்பட்டவர்.
2) டொனமூர் யாப்புச் சீர்திருத்தத்தின் ஆலோசனைகள் நான்கைத் தருக.
3) போக்குவரத்தத்துறையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டை உதாரணங்களுடன் விளக்குக.
4) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்களால் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட சேவைகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

06. 1) வரலாற்றை கற்பதற்கு உதவுகின்ற தொல்பொருள் மூலாதார வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.
2) பண்டுகாபயனின் ஆட்சிக்காலம் அரசியல் ரீதியான முக்கியத்துவம் பெறுவதற்கு வழி வகுத்த காரணிகள் இரண்டு தருக.
3) மிகக் குறுகிய காலத்தில் பௌத்த சமயம் இந்நாட்டில் பரவியது ஏன் என்பதை இரு காரணிகளின் உதவியுடன் தெளிவுபடுத்துக.
4) சிகிரிய உலகப் பிரசித்திபெற்ற ஒரு கலைப்படைப்பாகும். இக் கூற்றை மூன்று காரணங்களைக்காட்டி விளக்குக.

பகுதி III

07. 1) வேதகால ஆரியர்களின் வாழ்க்கை முறை பற்றிய தகவல்களைப் பெற உதவும் மூலாதாரங்கள் மூன்றின் பெயர் தருக.
2) கீழே A, B, C, D என்ற கூற்றுக்கு அமைவாக குறிப்பு தருக.
A. ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தின்படி ஆரியர்களின் தாய்நாடு.
B. ஆரியர்கள் முதன்முதலாக இந்தியாவில் குடியேரிய பிரதேசம்.
C. ஆரியர் சமூக அமைப்பில் உயர்மட்டத்தில் இருந்த சமூகப் பிரிவு.
D. ஆரியர் சமூகத்தில் முதல் அரச வம்சம்.
3) மகத குடியேற்றம் ஏனைய குடியேற்றங்களை விட மேலோங்கி வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் இரண்டினைக் கூறி விளக்குக.
4) அசோகச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலம் இந்திய வரலாற்றின் சிறப்பான காலப்பகுதியாகக் கருதப்படுகின்றது ஏன் என்பதை மூன்று காரணிகளின் உதவியுடன் விளக்குக.

08. 1) மானிய முறை சமூக அமைப்பில் காணப்பட்ட அடிமைகளின் மூன்று பிரிவுகளையும் தருக.
2) மத்திய காலத்தில் மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் நான்கைக் குறிப்பிடுக.
3) பிரான்ஸியப் புரட்சிக்குச் செல்வாக்கு செலுத்திய இரு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.
4) தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட பிரதிகூலங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக.

09. 1) வாலகங்காதரதிலகர், சுபாஸ் சந்திரபோஸ், கோபால் கிருஷ்ண கோகிலே, லாலாரஜ்பதிராய், சுரேந்திரநாத் பாணர்ஜி, மகாத்மா காந்தி - இவர்களில் இந்தியச் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட தீவிரப் போக்காளர்கள் மூவரைத் தருக.
2) 1857 இல் சிப்பாய்க்கலகம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் நான்கைத் தருக.
3) இந்திய மக்களுக்கு மிகப் பெரிய சேவையாற்றிய மகாத்மா காந்தி அவர்களிடமிருந்து நீர் பெறக்கூடிய படிப்பினைகள் இரண்டைக் குறிப்பிடுக.
4) சீனாவின் கமினியூனிஸ ஆட்சிசம்பந்தமான மூன்று விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

10. 1) 2ஆம் உலக மகா யுத்தத்திற்கு பின்னர் ஐ. நா. சபை தோற்றம்பெறுவதற்கு முன்னின்று உழைத்த அரசியல் தலைவர்கள் மூவரைக் குறிப்பிடுக.
2) ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3) குறைபாடுகள் இருந்தபோதிலும் ஐக்கிய நாடுகள் சபையினால் உலக சமாதானத்துக்காக குறிப்பிடத்தக்க சேவைகள் ஆற்றப்பட்டுள்ளன என்பதை இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக.
4) முதலாம் உலக மகா யுத்தத்தை விட 2ஆம் உலக மகா யுத்தம் உலகில் ஏற்பட்ட மிகக் கொடூரமான துன்பியல் நிகழ்வாகும். இது பற்றிய உமது கருத்துக்களை எடுத்துக்காட்டுக.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திருமதி நிரஞ்சலா துரைமணி அவர்களின் அன்புத் தாய் திருமதி சிவசுப்பிரமணியம் சிவபாக்கியம் அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

(105996)

## துயர் பகிர்கின்றோம்



*எமது நிறுவன உத்தியோகத்தர்*
அமரர் ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்

அவர்கள் 14.11.2010 அன்று அகால மரணமடைந்ததையிட்டு அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா இறைவனின் திருவடிகளில் ஆறுதல் அடைந்து நித்திய வாழ்வு கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து இவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் இவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநரும், பணியாளர்களும்,
கரித்தாஸ்-கியூடெக், யாழ்ப்பாணம்.

(சி/572871)

## மரண அறிவித்தல்

திருமதி **அன்னரத்தினம் சண்முகம்**



காட்டடைப்பு வீதி, காங்கேசன்துறை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அன்னரத்தினம் சண்முகம் 13.11.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## பணப்பரிமாற்ற சேவை தபாலகங்களுக்கு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், நவ.16

யாழ். பிரதம தபாலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வெஸ்ரேன் யூனியனின் பணப்பரிமாற்ற சேவையை ஏனைய தபாலகங்களுக்கும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி. குமரகுரு மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

மானிப்பாய், பண்டத்தரிப்பு, ஊர்காவற்றுறை அஞ்சல் நிலையங்களில் இந்தப் பணப் பரிமாற்ற சேவைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம-26)


### பிரத்தியேக வகுப்பு

தரம் 9, 10, 11 மாணவர்களுக்கு கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகியன பிரத்தியேக, குழு வகுப்புகள் நடத்தப்படும்.
தொ.பே: 0779228856.

### கோழிக்குஞ்சு விநியோகம்

பைரசா புறொயிலர் குஞ்சுகள், முட்டையிடும் பேட்டுக் குஞ்சுகள் பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம்.
கால்நடை தீவன வகைகளும் மருந்து வகைகளும் உண்டு.
தொ.பே. 021 222 5270, 0751985692.
திருமகள் களஞ்சியம், 668, கே.கே.எஸ். வீதி, (யா/ இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்)

### கோழிக்குஞ்சு விநியோகம்

முட்டைக் குஞ்சு, இறைச்சிக் குஞ்சு, சேவல்க் குஞ்சு என்பன ஓடருக்கு பெற்றுக்கொள்ளலாம்.
மானிப்பாய் - தொ.பே: 0778448659

### Computer Repair

உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களுடைய வீடுகளுக்கு வந்து திருத்தித் தரப்படும்.
தொ.பே: 0771329513


### திருத்தி வாசிக்கவும்

Auto Moter Lanka (Pvt) Ltd. நிறுவனத்தினால் 14.11.2010 உதயன் பத்திரிகையின் 6ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின் "தொமிசன்" 200/- டிக்கற் ஒன்றிக்கு - 30/- என்றுள்ளதை
**200/- டிக்கற் ஒன்றிக்கு - 50/-**
என திருத்தி வாசிக்கவும்.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ். பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் அவர்களின் பாசமிகுத் தாயார்

திருமதி கமலம் பாலசுப்பிரமணியம்

அவர்கள் இறைபதம் எய்திய செய்திகேட்டு மிக்க துயருறுவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை,
யாழ்ப்பாணம்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்
25 . 08 . 1943



விண்ணகம்
31 . 10 . 2006

**திருமதி சவுந்தரநாயகி சுப்பிரமணியம்**

திதி: தசமி

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை எம் துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும்
அன்னையவளுக்கு ஈடாகுமா?
அவனியில் நாம் சிறப்புடன் வாழ
அன்புடன் வழிகாட்டி நின்றாய்
அம்மா உன் இனிய நினைவுகள்
ஆண்டுகள் பல கடந்தாலும் நீங்காது.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் (டென்மார்க்).

பன்னாலை,
தெல்லிப்பழை.

(105955)

# 31ஆம் நாளின் நீங்காத நினைவுகள்

திருமதி
**மகேந்திரன் விஜயலட்சுமி (விஜயா)**



தோற்றம்:
1951.05.13



மறைவு:
2010.10.17

திதி:
தசமி
(16.11.2010)

மாறிலா மாண்பின் வீறே
மதிக்குமோர் தலைமைக் கூறே
பேறிலோ பெரிய பேறே
பெற்றதோர் கருணை ஆறே
வேறிலா திருந்த வாறே
விளங்கிடின் பெருங் கைம் மாறே
மாறியே பறத்தல் மாறே
மனங்களுக் களித்த தூறே!

பெற்றமை பேணிக் காத்த
பெருமைசேர் அருமை அம்மா
பற்றதன் சிகர மாகும்
பாங்கது ஓங்கும் அம்மா
மற்றவர் பெற்றுக் கற்கும்
மாட்சியின் காட்சி அம்மா
உற்றுடன் உறுத்தும் சோகம்
ஓட்டிட வருதல் வேண்டும்

விடிந்ததாம் பொழுத திங்கு
விடிந்ததாய் இல்லை அம்மா
முடிந்ததாம் உங்கள் வாழ்வால்
முடிந்ததே மகிழ்ச்சி அம்மா
படிந்ததாம் சோகத் தாலே
பதைக்கிறோம் தினமும் அம்மா
வடிந்ததாம் நிலையின் கண்ணீர்
வற்றுமோ பெற்ற தாயே!

ஓடியே முப்பத் தொன்றாய்
ஒதுங்குதோ தினங்கள் அம்மா
வாடியே வதங்கு கின்றோம்
வாழ்ந்ததை எண்ணு கின்றோம்
தேடியே திரியும் எங்கள்
தேடுதல் முடிய வில்லை
ஆடியே அலைந்து நாளும்
அழுவதோ வருத தாயே!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரம், இந்தியாவில் நடைபெற்றன. அன்னாரின் வீட்டுக்கிருதிய கிரியைகள் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை வளசரவாக்கம், சென்னையில் நடைபெறுகின்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கண்களைக் குளமாக்கிக் கலங்கும்
அன்பான பிள்ளைகள்
நவோதன்,
நிசாந்தி,
நிரஞ்சனி,
நாகதீபன்.

நிரந்தர முகவரி:
கரம்பன் மேற்கு,
கரம்பன்.

வதிவிட முகவரி:
வளசரவாக்கம்,
சென்னை,
இந்தியா.

T.P. 0091979 1171735, 00919791120863

(106063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் விரைவில் மலர நாம் பாடுபடுவோம்; சூகி தெரிவிப்பு

யாங்கூன், நவ. 16

நம்பிக்கையை விட்டு விடாதீர்கள். ஜனநாயகம் மலர நாம் பாடுபடுவோம் என மியான்மரின் ஜனநாயக தலைவி ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார். மியான்மரின் ஜனநாயக தேசிய லீக் கட்சித் தலைவி ஆங் சான் சூகி, கடந்த 21 ஆண்டுகளில் 15 ஆண்டு காலம் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

மியான்மரில் வீட்டுக்காவலில் பல ஆண்டுகளாக இருந்து சனிக்கிழமை விடுதலையான எதிர்க்கட்சி தலைவி சூகி, பேச்சு நடத்த வாருங்கள் என்று இராணுவ ஆட்சியாளர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.

மியான்மரில் பல ஆண்டுகளாக நடந்து வரும் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடி வருபவர் சூகி. இவர் ஜனநாயக ஆட்சி கோரி போராடி வருகிறார். அவரை ஆட்சியாளர்கள் வீட்டுக்காவலில் அடைத்துவைத்திருந்தனர்.

சனிக்கிழமை அவரது தண்டனை காலம் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து அவர் விடுதலையானார். அவர் ஞாயிற்றுக்கிழமை தன் கட்சி அலுவலகத்துக்கு வந்தார். அங்கு திரளாகக் கூடியிருந்த தொண்டர்கள் மத்தியில் முதன் முதலாக அவர் பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

வீட்டுச்சிறையில் இருந்தபோது நான் தினமும் 6 மணி நேரம் தொலைக் காட்சி சேவைகளைப் பார்த்து வந்தேன். இதைப் பார்த்ததன் மூலம் மக்களுக்கு என்ன தேவை என்பதை புரிந்துகொண்டேன்.

நமக்கு என்ன தேவை என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் அதை பெற நேர்மையான வழியில் பாடுபடவேண்டும்.

ஜனநாயக சுதந்திரத்துக்கு அடித்தளம் பேச்சு உரிமை தான். அதை பெற நாம் பாடுபடவேண்டும். நீங்கள் அரசியலில் இல்லாவிட்டாலும் அரசியல் உங்களைத் தேடி வரும். என்னை சிறையில் வைத்தவர்கள் மீது எனக்கு வருத்தம் கிடையாது. அவர்கள் மீது கோபமும் கிடையாது. இவ்வாறு சூகி கூறினார்.

அப்போது ஒரு நிருபர் சுப்ரீம் தலைவர் ஜெனரல் தான் ஷ்வேக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன என்று கேட்டார். அதற்குப் பதிலளித்து பேசிய சூகி என்னுடன் பேச்சு நடத்த வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்.

அதன் பின்னர் அவர் தொடர்ந்து பேசுகையில், எது சரியானதோ அதற்காக நாம் நிமிர்ந்து நிற்கவேண்டும். அரசியலில் உறுதியாக நாம் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே அவர் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:-

தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து, இராணுவ தலைவர் தான்ஷ்வேயை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளேன். மக்களின் பங்களிப்பு இல்லாமல் எதுவும் வெற்றி பெற முடியாது. பர்மா மக்கள் விதியை நம்பி செயல்படுகின்றனர். மக்கள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்; நம்பிக்கையை தளரவிடக் கூடாது.

நான் வீட்டுச் சிறையில் இருந்த போது நன்றாகத் தான் நடத்தப்பட்டேன். தினமும் ஆறு மணி நேரம் வானொலி கேட்டேன். இதேபோல மற்ற அரசியல் கைதிகளையும் அரசு நடத்த வேண்டும்.

நாட்டின் ஜனநாயக நடைமுறை ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான், ஜனநாயக தேசிய லீக் கட்சி ஆரம்பிக்கப் பட்டது. நாட்டில் ஜனநாயகம் எப்போது மலரும் என்பது தெரியாது.



விரைவில் ஜனநாயகம் மலர நாம் பாடுபட வேண்டும். பர்மா (மியான்மர்) மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை விலக்கிக்கொள்ள மேற்கத்திய நாடுகளுடன் பேசுவேன். மனிதஉரிமைமற்றும்சட்டத்தின்மீதுநம்பிக்கை கொண்டவள் நான். எனவே, இதற்காக நான் தொடர்ந்து போராடுவேன். என்னுடைய புகழைக் கண்டு இராணுவ அரசு பயப்படத் தேவையில்லை - என்றார்

## பங்களாதேஷில் கலவரம்; துப்பாக்கி சூடு, வாகனங்கள் தீக்கிரை

டாக்கா, நவ. 16

பங்களாதேஷில் முன்னாள் பிரதமர் கலீதா ஜியா இராணுவக் குடியிருப்பில் 30 ஆண்டுகளாக வசித்து வந்தார். இவர் அந்த வீட்டை காலி செய்யவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றம் கலீதா ஜியாவை வீட் டைவிட்டு வெளியேற் றும்படி உத்தர விட்டது. இதையடுத்து கலீதா ஜியா வலுக்கட்டாயமாக வீட்டிலிருந்து வெளி யேற்றப்பட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கலீதா ஜியாவின் பங்களாதேஷ் தேசியவாத கட்சித் தொண்டர்கள் நாடு முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது கலவரமாக வெடித்துள்ளது.

டாக்காவிலுள்ள கட்சி அலுவலகம் முன்னால் ஏராளமான தொண்டர்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் திடீரென வன்முறையில் இறங்கினர்கள்.

அந்த வழியாக வந்த வாகனங்களுக்கு தீ வைத்தனர். அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். இதேபோல நகரில் பல இடங்களிலும் கலவரம் ஏற்பட்டது. கலவரம் காரணமாக டாக்காவில் பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

## மெக்சிக்கோ ஹோட்டலில் வாயு இணைப்பு வெடித்து 7 பேர் பலி

கார்மென், நவ. 16

மெக்சிக்கோவிலுள்ள கார்மென் நகரில் சொகுசு ஹோட்டல் ஒன்று உள்ளது. இங்குள்ள வாயு இணைப்பில் கசிவு ஏற்பட்டு வெடிவிபத்து நிகழ்ந்தது.

இதில் ஹோட்டலில் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இடிபாட்டில் சிக்கி 2 ஹோட்டல் ஊழியர்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் 5 பேர் கனடா சுற்றுலா பயணிகளாவர்.

வெடிவிபத்துக்கு நாசவேலை காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இது பற்றி மெக்சிக்கோ பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

உலக அரங்கில்

# அண்டை நாடுகளுடன் நட்பை பேணவே விரும்புகின்றது சீனா

### ஆசியான் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

யோகஹாமா (ஜப்பான்), நவ. 16

"ஆசிய பசிபிக் பிராந்தியத்திலுள்ள தன் அண்டை நாடுகளுடன் சீனா நட்பைப் பேண விரும்புகிறது" என்று சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ, 'ஆசிய பசி பிக் பொருளாதார ஒத்துழைப்பு' மாநாட்டில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

சீனாவின் கிழக்கு மற்றும் தென் கடல் பகுதி எல்லைப் பகுதிகளில், சீனா ஆக்கிரமிப்புத் தன்மையுடன் நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டு நிலவி வருகிறது.

ஜப்பானின் தென்பகுதியிலுள்ள, 'செனகாகு' தீவுகளை தனக்குரியவை என சீனா உரிமை கொண்டாடி வருகிறது. இவ்விவகாரம் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. சமீபத்தில் சீன மீனவர் ஒருவரை ஜப்பான் கைது செய்ததை யடுத்து, இவ்விவகாரம் மீண்டும் சூடு பிடித்துள்ளது.

சீனாவுக்கு வந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும், பசிபிக் பிராந்தியத்தில் சீனா உரிமை கொண்டாடும் எல்லை விவகாரங்களைச் சுமுகமான முறையில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கூறியிருந்தார்.

சமீபத்தில், வியட்நாமின் ஹனோய் நகரில் நடந்த 'ஆசியான்' மாநாட்டில், சீனப் பிரதமரைச் சந்திக்க ஜப்பான் பிரதமர் தயா ராக இருந்தும் சீனப் பிரதமர் மறுத்து விட் டார்.

இந்நிலையில், ஜப்பானின் யோக ஹாமா நகரில் கடந்த இரண்டு நாட்களாக, 'ஆசிய பசிபிக் பொருளாதார ஒத்து ழைப்பு' (ஏ.பி. இ.சி.,) மாநாடு நடந்தது. அதில் உறுப்புகளாகவுள்ள கனடா, அமெ ரிக்கா, ஜப்பான், சீனா உள்ளிட்ட 21 நாடு களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டின் போது, சீன, ஜப்பான் ஜனாதிபதிகள் சந்தித்துப் பேசினர். இதையடுத்து, மாநாட்டின் இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை பேசிய சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ குறிப்பிடுகையில்,

இந்தப் பிராந்தியத்தில் சிறந்த அண்டை நாடாகவும், நட்பு நாடாகவும் இருப்பதாக சீனா மீண்டும் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறது. உள்நாட்டுத் தொழில்கள் நசித்து விடாமல் இருப்பதற்காக கடைபிடிக்கப் படும் சில சாதக நடவடிக்கைகள் இப்போது அதிகரித்து வருகின்றன.

பொருட்கள் பரிவர்த்தனை, முதலீடு மற்றும் சேவைத் துறைகளில் புதிய தடைகளை உருவாக்குவதை நாம் கைவிட வேண்டும் என்றார்.



பிரிட்டனில் ஆயுதப்படை வீரர்கள் தினத்தையொட்டி, தலைநகர் லண்டனிலுள்ள செனடாப் சதுக்கத்தில் நடந்த மலரஞ்சலி செலுத்தும் [illegible] பிரதமர் டேவிட் கெமரூன் (வலது ஓரம்) கலந்துகொண்டார். அருகில் [illegible] கோர்டன் பிரௌன், டோனி பிளேர் உள்ளிட்டோர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அடுத்தாண்டு அமெ. படைகள் வாபஸ்

இஸ்லாமாபாத், நவ. 16

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்க கூட்டுப்படைகள் அடுத்தாண்டு (2011) ஜூலை மாதத்திற்குள் விலக்கிக் கொள்ளப்படும் என பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ரிச்சர்ட் ஹோல்புரூக் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத் வந்திருந்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் இணைந்து செயலாற்ற வேண்டும். ஆப்க ானிஸ்தானில் ஜனாதிபதி ஹமீத் கர்சாயை நீக்க வேண்டும் என்ற தலிபான்கள் கோரிக்கையை ஏற்கமுடி யாது.

பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ் தானில் தீவிரவாதிகளை ஒடுக்கும் விடயத்தில் பாகிஸ்தான் இராணுவமும், அரசும் தான் புதிய யுக்தியை கையாள வேண்டும். இதற்கு நேட்டோ உதவி செய்யும்.

அடுத்தாண்டு (2011) ஜூலை மாதத்தில் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் விலக்கிக்கொள் ளப்படும். இதற்காக நேட்டோ நாடு களின் மாநாடு அடுத்த வாரம் அமெ ரிக்க ஜனாதிபதி ஒபாமா தலைமையில் நடக்கவுள்ளது.

இதில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய்க்கும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. அப்போது படைகளை திரும்பப் பெறுவது குறித்து விவாதிக் கப்படும். பின்னர் ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு இனி அந்நாட்டு மக்கள் கையில் தான். இப்படி அவர் கூறினார்.

# தட்டெறிதலில் புதிய சாதனை நிகழ்த்தினார் ஹரிகரன்

வலி.வடக்கு,நவ.16



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இளைஞர் சேவைகள் மன்ற அணிகளுக்குஇடையே நடத்தும் தடகளப் போட்டிகளில் தட்டெறிதல் நிகழ்வில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரன் வடிவேற்கரசன் ஹரிகரன் புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

நாவலப்பிட்டியில் அகில இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அணிகளுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் இடம் பெற்று வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டிகளில் யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத் தின் சார்பில் கலந்து கொண்ட வீரன் வடிவேற்கரசன் ஹரிகரன் 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் சாதனை நிகழ்த்தினார்.

தென்னிலங்கை வீரனால் 2007 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 37:57 மீற்றர் தூரம் என்ற சாதனையை முறியடித்து 44:60 மீற்றர் தூரம் என்ற புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

இவர் 20 வயதுக்குக் குறைந்த பிரிவினருக்கான போட்டியில் கலந்து கொண்டு இந்தச் சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

19 வயதுப் பிரிவுக்கு உட்பட்டவரான இவர், பாடசாலை மற்றும் மாவட்ட மட்டங்களில் சாதனைகளைப் பதிவு செய்துள்ளதுடன் தேசிய மட்டத்திலும் தனது முதலாவது சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

இவர் தேசிய மட்டத்தில் பாடசாலை மற்றும் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பதக்கங்களை ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(உ-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,நவ.16

யாழ்.மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபை முன்னாள் மாணவ முதல்வர் அமரர் பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக பாடசாலைகளுக்கு இடையே நடத்தும் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க் கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெறவுள்ள பெண்களுக்கான ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-




**பிற்பகல் 1.30 மணி**

✱ திருக்குடும்ப கன்னியர் மடம் 'ஏ' அணி எதிர் வேம்படி மகளிர் கல்லூரி 'பி' அணி.

**பிற்பகல் 2.30 மணி**

✱ யாழ்.இந்து மகளிர் கல்லூரி 'பி' அணி எதிர் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை அணி.

**பிற்பகல் 3.30 மணி**

✱ திருக்குடும்ப கன்னியர் மட 'பி' அணி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி அணி.

**பிற்பகல் 4.30 மணி**

✱ இராமநாதன் கல்லூரி அணி எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி.

(த-23)

## தர்சினிக்கு இன்னொரு வெண்கலம்!

வலி.வடக்கு,நவ.16

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நடத்தும் அகில இலங்கை ரீதியிலான மெய்வன்மைப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த இராஜமனோகரன் தர்சினி இரண்டாவது வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

முதல் நாள் போட்டியில் 20 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வெண்கலப்பதக்கத்தைப் பெற்றிருந்தார் தர்சினி. இரண்டாம் நாள் நிகழ்வில் குண்டெறிதல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று இரண்டாவது வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

இதேவேளை முதல் இரண்டு நாள்களில் நடைபெற்ற போட்டிகளில் வவுனியா மாவட்டம் மூன்று வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(எ-86)

**வெற்றி......**



பரிசு: காரைநகர் கோவளம் விளையாட்டுக் கழகம் தீபாவளி தினத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை கோவளம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற வீரருக்கு வடமாகாண உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் சைக்கிள் வழங்குவதை முதலாவது படத்திலும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வெற்றிக் கிண்ணம் வழங்குவதை இரண்டாவது படத்திலும், காரைநகர் பொலிஸ் அதிகாரி வீரர் ஒருவருக்கு பதக்கம் அணிவிப்பதை இறுதிப் படத்திலும் காணலாம்.

(த-250)

# வெளிநாடுகளில் குளிரூட்டிய மைதானங்கள்; தோல்வி கண்டமைக்கு இவையே காரணம்

## கரப்பந்தாட்டத் தேசிய வீராங்கனை புகழரசியின் அனுபவப் பகிர்வு

யாழ்ப்பாணம்,நவ.16

''கடந்த நான்கு வருடங்களாகப் பாடசாலைக் கரப்பந்தாட்ட அணியில் விளையாடி வருகின்றேன். இந்தாண்டு ஆரம்பத்தில் டி.எஸ்.ஐ. நிறுவனம் நடத்திய பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொண்ட வேளையில் என்னையும் எனது அக்காவையும் 19 வயதுப் பிரிவுத் தேசிய அணியில் விளையாடும் பொருட்டு பயிற்சி வழங்குவதற்காகத் தெரிவு செய்தார்கள்.''



தேசிய வீராங்கனை புகழரசி தனது சகோதரியுடன்

இவ்வாறு ஆரம்பிக்கிறார் மகாஜனாக் கல்லூரியின் 16 வயதுடைய கரப்பந்தாட்ட வீராங்கனை பாலச்சந்திரன் புகழரசி.

கடந்த மாதம் வியட்னாம் நாட்டில் இடம் பெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான 15 ஆவது ஆசியக் கிண்ணத்திற்கான இலங்கை தேசிய அணியில் முதல் தடவையாக இடம் பெற்ற புகழரசி தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:-

பாடசாலையில் 15 வயதுப் பிரிவில் 2007 ஆம் ஆண்டு விளையாடத் தொடங்கிய நான் தொடர்ந்து நான்கு வருடங்களாக விளையாடி வருகின்றேன். 15 வயதுப் பிரிவில் இரண்டு வருடங்களும் தொடர்ந்து 17 வயதுப் பிரிவிலும் விளையாடி வருகின்றேன்.

இக் காலத்தில் கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் என வெற்றிபெற்ற நான், 2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டேன்.

இந்தக் காலத்தில் எனக்கு ரமணன், கமலமோகன் ஆகியோர் பயிற்சியளித்தனர்.

தயாளன் தற்போதும் பயிற்சியைத் தொடர்ந்து வழங்கி வருகின்றார்.

நான் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற டி.எஸ்.ஐ.விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட போது தேசிய அணியில் விளை யாட என்னையும் எனது அக்காவையும் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தார்கள்.

இதனைக் கேட்டதும் பெருமகிழ்ச்சியாக இருந்ததுடன் அக்காவும் வருகின்றமை மேலும் உற்சாகமாக இருந்தது.

கொழும்புக்கு அழைக்கப்பட்ட எங்களுக்கு றொறிங்டன் மைதானத்தில் பயிற்சி முகாம் நடத்தது. முதலில் இடம்பெற்ற 24 பேர் தெரிவில் நானும் அக்காவும் தெரிவு செய்யப்பட்டோம்.

மீண்டும் இரண்டாம் சுற்றில் 18 பேர் தெரிவு செய்யப்பட்ட போதும் அதிலும் நாங்கள் இருவரும் தெரிவு செய்யப்பட்டோம். இறுதியாக இடம் பெற்ற வேளையில் 12 பேரில் ஒருவராக நான் தெரிவு செய்யப்பட்டேன்.

எனக்குச் சற்று குழப்பத்தையும் பயத்தையும் உண்டாக்கிய போதிலும் அங்கு என்னுடன் இருந்த ஏனைய வீராங்கனைகளும் பயிற்றுவிப்பாளர்களும் எனக்கு ஊக்கம் தந்து என்னை மனம் சோராது பயிற்சிகளில் கலந்து கொள்ளவும் மொழிப் பிரச்சினை இல்லாது இருக்கவும் வழி செய்தார்கள்.

பயிற்றுவிப்பாளர்களான விஜயரெட்ண, அஜந்த, ஏக்கநாயக்க ஆகியோர் என்னுடன் மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் எனக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்கினார்கள். நாளாந்தம் காலை, மாலையென பல மணித்தியாலங்கள் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஆரம்பத்தில் மொழி ஒரு தடையாக இருந்தாலும் அதனை நாளடைவில் சமாளிக்கக் கூடியதாக இருந்ததுடன், எனக்கு பெரும் உதவியாகக் கற்பிட்டியைச் சேர்ந்த சக வீராங்கனை ஈரெசா இருந்தார். அவர் தமிழில் கதைத்து எனக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகளைச் செய்தார்.

இந்தப் பயிற்சிக் காலத்தில் ஓரளவுக்குச் சிங்களத்தையும் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. தொடர் பயிற்சிகள் அடுத்த ஆண்டு முதல் எமக்கு வழங்கப்படவுள்ளதாகப் பயிற்சியாளர்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் இப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளமையால் கல்வி விடயத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாண்டு நான் ஜீ.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளேன்.

பரீட்சை முடிவடைந்ததும் இரண்டாம் கட்டமாக உயர் கல்வியைக் கருத்திற் கொண்டு எனது தாய், தந்தை மற்றும் அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோரது ஆலோசனைகளைப் பெற்றுச் செயல்படவுள்ளேன்.

நாங்கள் வியட்னாமில், கொங்கொங், இந்தோனேசியா, யப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் நடைபெற்ற போட்டிகளில் கலந்து கொண்டோம்.

போட்டிகளில் தோல்வியைத் தழுவிக் கொண்டாலும் அங்கு அமைக்கப்பட்ட மைதானங்கள் குறிப்பாக உள்ளக மைதானங்கள் குளிரூட்டப்பட்டு இருந்தமை பாதகமாக அமைந்தது.

ஆனாலும் நாம் போட்டியில் கடுமையான எதிர்ப்பினை ஏனைய நாடுகளுக்கு ஏற்படுத்தி இருந்தோம். கொங்கொங் நாட்டுடனான போட்டியில் 25:19 என ஒரு சுற்றை வென்றதுடன் அடுத்த மூன்று சுற்றுக்களை 25:21, 25:16, 25:21 என தோல்வி கண்டோம்.

இதேபோன்று அவுஸ்ரேலியாவுடனான போட்டியில் 25:11, 30:28, 25:21 என தோல்வியைத் தழுவிக்கொண்டோம்- என்றார்.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலியில் கெய்ல் ஓட்டமழை இலங்கை அணி திக்கித் திணறல்!

காலி, நவ. 16

காலியில் நடைபெற்றுவரும் டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரரான கிறிஸ் கெய்லின் துடுப்பு மட்டை ஓட்ட மழைய பொழிய, அந்த அணி அபார ஓட்ட இலக்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அந்த அணியின் ஆட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் இலங்கைப் பந்துவீச்சாளர்கள் திணறிவருகின்றனர்.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, இலங்கைக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிவருகிறது.

முதலாவது போட்டி நேற்று காலியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு, கிறிஸ் கெய்லின் துடுப்பு மட்டை ஓட்ட மழை பொழியத் தொடங்கியது. அவருடன் மறுமுனையில் களமிறங்கிய பாரத் அரைச்சதமடித்த (50) கையோடு ஆட்டமிழந்து சென்றார். பின்னர் வந்த பிராவோவும் அரைச்சதமடித்து (58) சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்த்தாலும் மறுமுனையில் நின்ற கெய்ல், இலங்கைப் பந்துவீச்சுகளை துவம்சம் செய்து பந்துகளை நாலாபுறமும் விரட்டிக் கொண்டிருந்தார்.

அதிரடியாக ஆடிய கெய்ல் இரட்டைச் சதம் கடந்தார்.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி, 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 362 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில் மெண்டிஸ், ரண்டீவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

கெய்ல் (219), சந்திரபோல் (20) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் இரண்டாம் நாள் ஆகும்.



## 2ஆவது சோதனையிலும் வன்னியாராச்சி தோல்வி

கொழும்பு, நவ. 16

கொமன்வெல்த் போட்டிகளில் குத்துச்சண்டையில் இலங்கைக்குத் தங்கப்பதக்கம் வென்றுகொடுத்த மஞ்சு வன்னியாராச்சியின் சிறுநீர் மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஊக்கமருந்துச் சோதனையிலும் அவர் தோல்வியடைந்துள்ளார். இதன் காரணமாக அவர் தங்கத்தைப் பறிகொடுப்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது.

அண்மையில் இந்தியத் தலைநகர் டில்லியில் நடந்த கொமன்வெல்த் போட்டிகளில் இலங்கைக்கு ஒரே ஒரு தங்கம் கிடைத்தது.

இந்நிலையில், அவரின் சிறுநீர் மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட ஊக்க மருந்துச் பரிசோதனையின் போது, 'நன்ட்ரோலின்' என்ற ஊக்கமருந்தை அவர் பயன்படுத்தியமை தெரியவந்தது.

அதையடுத்து, அவர் ஊக்க மருந்தைப் பயன்படுத்தியமையை உறுதிப் படுத்துமுகமாக இரண்டாவது தடவையாக அவரின் சிறுநீரின் மாதிரி சோதனைக்குட்படுத்தப் பட்டது. இச்சோதனையிலும் அவர் தோல்வியடைந்துள்ளார்.

இரு தடவைகள் மேற்கொள்ளப்பட்ட ஊக்கமருந்துச் சோதனைகளி லும் அவர் தோல்வியடைந்தமை யால், போட்டிகளில் பங்கேற்ற அவருக்குத் தடை விதிக்கப்படும். அதேவேளை, அவரின் பதக்கமும் பறிக்கப்படுவது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. எனினும், முறையான விதிகளின்படி இச்சோதனை நடைபெறவில்லை எனவும், இப்பெறுபேற்றை இலங்கை ஆட்சேபிக்கும் எனவும் தெரியவருகிறது.

## தென்னாபிரிக்காவுடனான மோதலில் தோல்வி நோக்கி பாக்.

துபாய், நவ. 15

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 451 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடி வருகிறது பாகிஸ்தான் அணி.

துபாயில், பாகிஸ்தான்-தென் ஆப்ரிக்கா அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் நடந்துவருகிறது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, முதல் இன்னிங்ஸிற்காக 380 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதன்மூலம் அந்த அணி 271 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த தென்னாபிரிக்க அணி, அம்லா (118), கலிஸ் (135) ஆகியோரின் சதங்களின் உதவியுடன் மொத்தமாக 318 ஓட்டங்களைக் குவித்த நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர், 451 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது இரண்டு விக்கெட்டுகள் இழப்புக்கு 100 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இன்று ஆட்டத்தின் கடைசி நாளாகும்.

## ஆஷஸ் தொடருக்கான ஆஸி. அணி அறிவிப்பு!




சிட்னி, நவ. 16

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் பங்கேற்கவுள்ள ஆஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடை யிலான 5 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி பிரிஸ்பேனில் ஆரம்பமாகிறது.

முதல் டெஸ்ட் போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியே நேற்று அறிவிக்கப்பட்டது. வீரர்களுக்கு அடிக்கடி ஏற்படும் காயங்கள் காரணமாக 17 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். என ஆஸ்திரேலிய அணித் தெரிவுக்குழுத் தலைவர் கூறியுள்ளார். எனினும், தொடர் தொடங்குவதற்கு முன்னர் சரியான நேரத்தில் 13 பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி வருமாறு:-

பொண்டிங் (அணித்தலைவர்), மைக்கல் கிளார்க் (துணைத் தலைவர்), வோட்சன், கடிச், மைக்கல் ஹஸி, மார்கஸ் நார்த், பீற்றர் சிடில், போலிஞ்சர், டோசர்டி, பெர்குசன், ஹெடின், ஹரிஸ், கௌரிட்ஸ், ஹில்பென்ஹாஸ், ஜோன்சன், உஸ்மான், கவாஜா, ஸ்மித்.

## சூடுபிடித்தது ஹைதராபாத் மோதல்; இந்தியாவை முந்தியது நியூஸிலாந்து!

ஹைதராபாத், நவ. 16

ஹைதராபாத்தில் நடந்துவரும் 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சூடுபிடித்துள்ளது. ஓட்ட எண்ணிக்கையில் முன்னுக்கு நின்ற இந்தியாவை முந்தி முன்னிலை பெற்றது நியூஸிலாந்து.

இந்தியா - நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கிடை யிலான 2ஆவது டெஸ்ட் போட்டி ஹைதராபாத்தில் கடந்த வெள்ளியன்று தொடங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, தனது முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுகளையும் இழந்து 350 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் தனது இனிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது, ஒன்பது விக்கெட்டுகள் இழப்புக்கு 436 ஓட்டங்களைப்பெற்றது.

ஹர்பஜன் சிங், ஸ்ரீசாந்த் ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். அன்றைய நிலவரப்படி இந்திய அணி, நியூஸிலாந்தை விட 86 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. பின்னர் நேற்றுத் தனது இனிங்ஸைத் தொடந்த இந்திய அணி, 472 ஓட்டங்களைப் பெற்றவேளை இறுதி விக்கெட்டையும் (ஸ்ரீசாந்த்-24 ஓட்டங்கள்) இழந்தது. அசத்தலாக ஆடிய ஹர்பஜன் டெஸ்ட் அரங்கில தனது இரண்டாவது சதத்தைப் (111-ஆட்டமிழக்காமல்) பூர்த்திசெய்தார்.

பின்னர், 122 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, இன்ரோஸை முதல் விக்கெட்டாக இழந்தது.

அவர் அரைச்சதமடிக்கும் (49) வாய்ப்பை ஓர் ஓட்டத்தால் தவறவிட்டார்.

எனினும், இன்னொரு ஆரம்ப வீரரான மக்கலம் சதமடித்து அசத்த, நியூஸிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

இறுதியில் நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது, நியூஸிலாந்து அணி நான்கு விக்கெட்டுகள் இழப்புக்கு 237 ஓட்டங்களை பெற்றது. மைக்கலம் (124), வில்லியம்சன் (12) ஆகியோர் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். நேற்றைய நிலவரப்படி நியூஸிலாந்து அணி, 115 ஓட்டங்களால் முன்னிலை வகிப்பதுடன், 6 விக்கெட்டுகளையும் கைவசம் வைத்துள்ளது. இன்று ஆட்டத்தின் இறுதி நாள் ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் ப.நோ.கூ. சங்கம் (வ/து)
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவிவெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி : பொதுமுகாமையாளர்
சம்பளக்குறியீட்டு இல. : 101/08
சம்பள அளவுத்திட்டம் : 66/2006க்கமைய
: 11200 - 140x10-150x10-14100

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 9 ஆம் சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 10 ஆம் சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச்சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில் (4) நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தர) சான்றிதழ் அல்லது க.பொ.த. (உயர்தர) 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்ட பதவியொன்றில்ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

2. பதவி : கணக்குப் பதிவாளர்
சம்பளக்குறியீட்டு இல. : 301/11
சம்பள அளவுத்திட்டம் : 66/2006 இற்கு அமைய
: 10450-100x10-110x10-12550

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது எழுதுவினைஞர் பதவியொன்றில் இரண்டு (2) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுச் சங்க ஊழியர் 13 ஆம் சம்பளத்திட்டத்தில் எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு (4) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

(ஆ) ஐக்கிய இராட்ச்சிய கணக்குப்பதிவாளர் நிறுவன இடைநிலைப் பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்களில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் கல்வி பொது.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்களில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**விண்ணப்பிக்கும் முறை:** சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் பிரதிகளுடன் *தலைவர் காரைநகர் பல நோ. கூ. சங்கம் என்ற முகவரிக்கு* 25.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கவும்.

குறிப்பு:விண்ணப்பதாரி சங்கப் பணியாளர் ஆயின் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர். (சி-572880) தலைவர்.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



எமது பாடசாலை அதிபர் சற்குணராசா பிரேமவல்லி அவர்களின் தாயாரும் எமது பாடசாலை முன்னாள் ஆசிரியர் கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவி

### திருமதி கனகரத்தினம் கலாவல்லி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (17.11.2010) புதன்கிழமை கீரிமலையில் இடம்பெறும். இந்நாளில் அவரது ஆத்மா சாந்தியடைய நாமும் எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர், ஆசிரியர்கள்
யா/ நாரந்தனை கணேச வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.

## மரண அறிவித்தல்

### திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை செல்லம்மா அவர்கள் நேற்று (15.11.2010) திங்கட்கிழமை பி.ப.4.45 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், சங்கரப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், கந்தசாமி, இராசபூமணி, சபாரத்தினம், இராசமணி நவரத்தினராசா, விக்கினேஸ்வரி ஆகியோரது அன்புத்தாயும், அன்னம்மா, செல்லையா, பரமேஸ்வரி, செல்லத்துரை, காலஞ்சென்ற புனிதவதி மற்றும் தம்பிராசா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தபேந்திரன், உருத்திரேந்திரன், லதாஜினி, ஜெயந்தன், கணநாதன், ரங்கநாதன், விமலநாதன், தயாநிதி, ஜெகநாதன், சுகந்தினி, சியாஸ்கரன், கிரிபாகரன், பிரபாகரன், ரெனீஸ்வரன், ரதீஸ்வரன், கஜேந்தினி, சிவாந்தினி, தனுசியா, கருணீகன், கார்த்திகா, கவநீதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமைபி.ப.ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரியான் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்.
ச.நவரத்தினராசா (சின்னராசா) (முன்னாள் தெ.மே.ப.நோ.சங்க முகாமையாளர்)
த.தம்பிராசா (யாழ்.மாநகரசபை-சாரதி).

கைதடி மேற்கு,
கைதடி. (106074)

## தம்பாட்டியில் நேற்று பறந்தது புலிக்கொடி

யாழ்ப்பாணம் நவ,16

ஊர்காவற்றுறை தம்பாட்டியில் நேற்றுப் பறந்தது புலிக்கொடி.

தம்பாட்டி மீன்பிடிச் சங்க அலுவலகத்தில் நேற்று அதிகாலை புலிக்கொடி ஏற்றப்பட்டு இருந்ததைத் தாம் கண்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவர்களால் புலிக்கொடி அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை,

இந்தக்கொடி ஏற்றப் பட்ட விடயம் குறித்து தம்பாட்டி மீன் பிடிச் சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு, பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிய வந்தது.

(ஒ)

## பெருமாள் கோயிலில் சொர்க்கபாவனை உற்சவம் திங்களன்று

யாழ்ப்பாணம், நவ.16

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலய கார்த்திகைத் தீபம் ஏற்றும் சொர்க்கபாவனை உற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இந்த உற்சவத்தில் அடியார்கள் பங்குபற்றி பெருமாளின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-16)

## த.வி. கூட்டணியின் அமைப்பாளர் தெரிவு

யாழ்ப்பாணம், நவ.16

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாணத் தொகுதி அமைப்பாளராக செல்லையா விஜயரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

த.வி.கூ. தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தத் தெரிவில் இணை அமைப்பாளராக சோ.சீவரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். (ஒ-10)

## முகாமைத்துவ அலுவலக அடிக்கல் நடும் விழா

இணுவில், நவ.16

நல்லூர் பிரதேச சபை திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டம் - 2010 இற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு இணுவில் காரைக்காலில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் மே.சாந்தசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியும் கலந்துகொள்வர்.

(ஒ-16)

## கொக்குவில் இந்து தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், நவ.16

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தமிழ்த்தின விழா இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெற வுள்ளது.

தமிழ் மன்றத்தலைவி செல்வி கி.பிறேமிலா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் கலந்துகொள்வார்.

இதில் வெளியிடப்படவுள்ள ''தேமதுரம்'' மலரின் வெளியீட்டுரையை திருநெல்வேலி அ.த.க.பாடசாலை அதிபர் ந.[illegible] நிகழ்த்துவார்.

(ஒ-16)

## வேலைக்கு ஆள் தேவை (Parmacy)

கிளிநொச்சி நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள பால்மா மருந்தகத்திற்கு அனுபவமுள்ள Sri Lanka Medical Council இல் பதிவு செய்யப்பட்டவர் அல்லது தகுதியுடையவரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.விண்ணப்பிப்போர் தமது சுயவிவரத்தை எழுதி எதிர்வரும் 19.11.2010 இற்கு முன்பு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்கவும்.

குறிப்பு: கிளிநொச்சி பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

நியூ பிரியங்கா நகை மாளிகை

*இல.2G, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.: 0212225644*

இல.69, யாழ்சாலை,
(கச்சேரி முன்பாக)
கிளிநொச்சி,
0213208611,
தொ.பே.: 0777175059

BLAKE HALL COLLEGE

Blake Hall College was established as a result if the to help students achiveve personal career dreams through affordable graduate studies in the UK.

SPOT ADMISSION

No Need IELTS / Intake Jan 2011

தேவையான ஆவணங்கள் : O/L, A/L Certificates, Passport

UNDERGRADUATE COURSE
- BA Hons Business Management
- BA Hons Business Marketing
- BA Hons Business Accounting

TOP - UP COURSES
- BA Hons Business
- BSc Hons Business

இறுதி சந்தர்ப்பம்
UK இல் கல்வி தொடர
திகதி : 20th Nov 2010
நேரம் : 9 am - 12 pm
முன் பதிவுகளுக்கு

JAFFNA, BRANCH 82/12 A, CHETTY STREET NALLUR
Phone:- 0774454646/0777849853

EUROPEAN TECHNOLOGY &BUSINESS COLLEGE
No. 22A, Frankfort Place, Bambalapitiya, Colombo -04, Srilanka.
Tel : 011 2508443 / Mob : 0777 849 853,
Web : www.etbclanka.com / E-mail : etbc@etbclanka.com

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
### கிருஸ்ணன் கனகம்மா

பிறப்பு 12-10-1928 இறப்பு 19-10-2010

கடந்த 19.10.2010 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும். மேலும் 18.11.2010 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு எமக்கு ஆறுதல் கூறிய மற்றும் சகல வழிகளிலும் உதவிகள்புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

*432/2, மடம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மக்கள், பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி



அன்னை மடியில் 24-11-1937 ஆண்டவன் அடியில் 17-10 -2010

அன்பின் உருவாக
அரவணைத்த எம் தலைவா!
துன்பம் எமக்களித்து
தொலை தூரம் சென்றீரோ
கண்கள் கலங்கி நிற்க
காலங்கள் கரைந்தாலும்
என்றும் உம் நினைவு
உள்ளத்தில் தங்கி நிற்கும்.

இன்று *(16.11.2010)* செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய மற்றும் மதிய போசன நிகழ்வினில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

56/16, வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி. (சி-572828)

மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவழ்ந்து வீதியைக் கடந்த கால்களற்ற நபர் வாகனத்தால் மோதுண்டு உயிரிழந்தார்

கொழும்பு, நவ. 16

இரு கால்களும் செயலிழந்த நபரொருவர் கைகளைப் பயன்படுத்தி தவழ்ந்தவாறு பாதையைக் கடக்க முற்பட்ட போது வேகமாக வந்த வாகனத்தால் மோதுண்டு மரணமான பரிதாப சம்பவம் மிரிகமயில் இடம் பெற்றுள்ளது.

கந்தலம - வரக்கா பொல வீதியில் பிரிஸ்யால பிரதேச வாசியான சந்தரே எனும் நபரே மரணமானார்.

கடந்த 11ஆம் திகதி மாலையில் பிரிஸ்யாலயில் பகுதியில் வாகனத்தால் மோதுண்ட பின் மீரிகம வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட பின்னர் மரணமாகியுள்ளார்.

குறிப்பிட்ட வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மரண விசாரனை மீரிகம வைத்தியசாலையில் நடைபெற்றது. மீரிகம பொலிஸ் போக்குவரத்து பிரிவினர் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டுள்ளணர். (ம-5)

## கண்ணீர் அஞ்சலி



### தர்மராஜா தவகேதீஸ்வரன் (கண்ணன்)

மல்லாகம் கலைமகள் முன்பள்ளி ஆசிரியை செல்வி. த. றங்கேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரன் தர்மராஜா தவகேதீஸ்வரன் (கண்ணன்) அவர்களின் துயரச் செய்தி அறிந்து எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
கனிஷ்ட வித்தியாலயம், கலைமகள் முன்பள்ளி,
அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள்.

புகையிரத வீதி,
மல்லாகம்.

## 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1937 . 10 . 29



மறைவு 1995 . 11 . 02

திருமதி.

### பரம்சோதி கமலாதேவி

(ஓய்வு பெற்ற ஆசிரியை) திதி:16.11.2010

*அன்பாலும் பண்பாலும்*
*அனைவரையும் அரவணைத்த*
*எம் அன்புத் தெய்வமே!*
*ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்*
*ஆறாது எம் துயரம்.*

'சந்திரவாசா',
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(106065)

குடும்பத்தினர்.

# தாக்கப்பட்ட மாணவர் யாழ். ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, நவ. 16

சாவகச்சேரி நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற சாரணர் பாசறைக்கு சாரணர் கொடியைக் கொண்டுவர மறந்த மாணவனை ஆசிரியர் தாக்கியுள்ளார். சப்பாத்துக் காலினால் தாக்கியதில் மாணவனின் நாரி எலும்பில் பாதிப்பு ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

மட்டுவில் மத்தியைச் சேர்ந்த கதிர்காமச்சந்திரன் வினோத் (வயது 18) என்னும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. மாணவனே பாதிக்கப்பட்டவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் மாணவன் முறைப்பாடு செய்தபின்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஒ-207)

சர்வதேச நாடுகளிற்கான விமான பயணச் சீட்டுக்களை உங்கள் வீட்டில் இருந்தவாறே முற் பதிவுகளை மேற்கொள்ளலாம்.



மேலதிகத் தொடர்புகளுக்கு:
**Metro Travels & Tours (Pvt) Ltd.**
62/33, Stanley Link Road, Jaffna.
Tel: 021 5673555 / 021 5673666
Fax: 0212220404
e-mail : info@metrotravels.lk

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி வீரகத்தி



குடத்தனையைப் பிறப்பிடமாகவும் நாகர் கோயில் தெற்கை வசிப்பிடமாகவும், தற்போது ''மதிபுரம்'', உபயகதிர்காமம், புலோலியில் வசித்துவந்தவருமான சின்னக்குட்டி வீரகத்தி நேற்றுமுன்தினம் (14.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வானைப்பிள்ளையின் (பொன்னு) அன்புக் கணவரும் பரமேஸ்வரன் (நல்லலிங்கம், பிரதேச சபை, பருத்தித்துறை), பரமேஸ்வரி, அழகேஸ்வரி (லண்டன்), யோகேஸ்வரி (லண்டன்), புவனேஸ்வரி (லண்டன்), ராஜேஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணாதேவி, மாசிலாமணி, சிவராசலிங்கம், செல்வராசா காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் சறோ, சண்முகம் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ''மதிபுரம்'', உபயகதிர்காமம், புலோலியில் இன்று (16.11.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''மதிபுரம்'',*
*உபயகதிர்காமம்,*
*புலோலி.*

(106056)

*தகவல் :*
**பரமேஸ்வரன்**
*(மகன்).*

## துயர் பகிர்வு



எமது நண்பரான
தர்மராஜா
தவகர்ணேஸ்வரன்
(கண்ணன்)
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

பூசகர், தொண்டர்கள்,
பெரியதம்பிரான்
தேவஸ்தானம்,மல்லாகம்.

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
## ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகளுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல் - 2011

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2011 தொடக்கம் 31.12.2011 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்கான குத்தகைக் கேள்விகள் கீழே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் | :16.11.2010இலிருந்து 30.11.2010வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | : 02.12.2010 பி.ப 3 மணி வரை |
| கேள்வி திறக்கப்படும் திகதி | : 03.12.2010 பி.ப 2 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | : பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தலைமை அலுவலகம் |

கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** என்ற முகவரியிட்டு அரக்கு முத்திரை இட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத் தபால்மூலம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி** என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும். கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் தங்களது ஆள் அடையாள அட்டையைக் கொண்டுவருதல் வேண்டும்.

| தொ. இல. | குத்தகை வகை | இடம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | மீளளிக்க முடியாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | பளைச்சந்தை | 25,000.00 | 1,500.00 | 500.00 |
| 02 | மாட்டிறைச்சிக்கடை | பளைச்சந்தை | 2,50,000.00 | 3,000.00 | 500.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | இயக்கச்சிச் சந்தை | 20,000.00 | 1500.00 | 500.00 |
| 04 | மாட்டிறைச்சிக்கடை | இயக்கச்சிச் சந்தை | 1,50,000.00 | 2500.00 | 500.00 |

**நிபந்தனைகள் :**

1. இறைச்சிக்கடைகளுக்கான மாத வாடகை ரூபா 500.00 செலுத்தப்பட வேண்டும்.
2. வியாபார உத்தரவுக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
3. சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
4. எம்மால் நிர்ணயிக்கப்படும் கொல்களத்திலேயே இறைச்சிக்குரிய மிருகங்கள் அறுக்கப்பட வேண்டும்.
5. இறைச்சிக்காக ஆடு, மாடு கொல்லப்படமுன் எம்மால் குறிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைய நடந்துகொள்ள வேண்டும்.

திரு. சி. சிவப்பிரகாசம்,
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 17.10.1954
இறப்பு: 16.04.2005



பிறப்பு: 12.06.1957
இறப்பு: 06.11.2000

**அமரர் வீரகத்தி குலஆனந்தன்**
(முன்னாள் திடீர் பரிசோதனைக்குழு அதிகாரி வ.பி.போ.ச)
திதி: சித்திரை பூர்வபக்க அட்டமி

**அமரர் குலஆனந்தன் யோகேஸ்வரி**
திதி: ஐப்பசி பூர்வபக்க தசமி

அன்பு தந்தையே! அன்புத் தாயே!
உங்களைப் பிரிந்து ஆண்டுகள் பல சென்றாலும்
இன்னும் ஓயாது தவிக்கின்றோம்
ஆயிரம் உறவுகள் எம் அருகே இருந்தாலும்
பெற்ற தாய் தந்தைக்கு ஈடாகுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

30/4, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தல் குறித்து கபே, மனித உரிமைகள் நிலையம் கண்டனம்

கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த மக்கள் மற்றும் அங்கு ஊடகப் பணிக்காக சென்ற ஊடகவியலாளர்களை ஒரு சில நபர்கள் அச்சுறுத்தியமையை தாம் கடுமையாக கண்டிப்பதாக இலங்கை மனித உரிமைகள் நிலையமும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான அமைப்பும் (கபே) தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கபே அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிசவிக்கப்பட்டுள்ளதாவது:-

''நேற்று முன்தினம் (14) யாழில் இடம்பெற்ற கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் ஊர்காவற்துறை மக்களின் சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கை இடம்பெற்ற போது, அங்குவந்த சந்தேகத்திற்கிடமான நபர்கள் சிலர் சாட்சிய மளிப்பதிலிருந்து விலகி நிற்குமாறு அச் சுறுத்தியுள்ளமை மற்றும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தியுள்ளமையை எமது அமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

ஊர்காவற்துறைப் பிரதேசமானது காணாமற் போதல், கடத்தல்கள் ஏராளமாக இடம்பெற்ற ஒரு பிரதேசமாகும். அவ்வாறான ஒரு பிரதேச மக்கள் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிப்பதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால், இப்பகுதி மக்களுக்கு சுதந்திரமாக சாட்சியமளிக்க முடியவில்லை என்பதை இலங்கை மனிதஉரிமை நிலையம் இனங்கண்டுள்ளது. சில நபர்கள் சாட்சிகளின் பெயர்களை குறித்துக் கொண்டுள்ளதுடன் சாட்சியமளிக்க வந்தவர்களை அச்சுறுத்தியும் உள்ளனர். இதனால் மக்கள் பின்னர் சாட்சியமளிக்க அஞ்சியுள்ளனர். புகைப்படம் எடுக்க வந்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிராந்திய ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்தியுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் சுதந்திரமாக சாட்சியமளிக்கும் வாய்ப்பு, பறிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதுடன் சாட்சியமளிக்க வருவோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அதிகாரிகளின் கடமையாகும் என்பதை இலங்கை மனிதஉரிமை நிலை யமும், கபே அமைப்பும் ஆணித்தரமாக சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளது'' - என்றுள்ளது. (சி)

# சரணடைய வந்த எவருமே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசந்த நவரட்ண பண்டார, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை நேற்றுக் குறுக்கு விசாரணை செய்தார். இதன்போது கேட்கப்பட்ட கேள்விகளும் - பதில்களும் வருமாறு:-

**கேள்வி:-** ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவா நீங்கள் பணி புரிகிறீர் கள்?

**பதில்:-** ஆம்.

**கே:-** உங்களது பணியை விளக்கமுடியுமா?

ப:- இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தில் உயர் ஸ்தானிகருக்கு உதவியாகச் செயற்படுவதுடன் ஐக்கிய நாடுகள் சபையில், சமாதானத்தை ஏற்படுத்துதல் போன்ற பணிகளிலும் ஈடுபடுகிறேன்.

**கே:-** நீங்கள் எப்போது இராணுவத்தில் இணைந்தீர்கள்?

ப:- 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி இராணுவத்தின் விஞ்ஞான பிரிவில் இணைந்தேன்.

**கே:-** அதன்பின்னர் என்னென்ன பொறுப்புக்களை வகித்தீர்கள்?

ப:- நான் 1985ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி பயிற்சிபெறும் அதிகாரியாக இராணுவத்தின் விஞ்ஞானப் பிரிவில் இணைந்து, மேலதிக அதிகாரியாகச் செயற்பட்டேன். அதன் பின்னர் விசேட பிரிவுடன் இணைக்கப்பட்டேன். கஜபா படைப் பிரிவினருடன் யாழ்.குடாநாட்டுக்குச் சென்றேன். அங்கு நான் அப்படைப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாகச் செயற்பட்டேன். அதன்போது ஒரு சந்தர்ப்பத்தில் காயமடைந்தேன். பின்னர் ஒரு மாத காலம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன். அதன் பின்னர் நிறைவேற்று அதிகாரியாகவும், அப்படைப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரியாகவும் செயற்பட்டேன்.

### அனைத்து படை நடவடிக்கைகளிலும் பங்கேற்பு

அப்போது இலங்கையில் நடைபெற்ற அனைத்துப்படை நடவடிக்கைகளிலும் நானும் ஈடுபட்டேன். இலங்கையின் இராணுவப் பாடசாலை, விஞ்ஞானப் பிரிவு ஆகியவற்றின் ஆலோசகராகவும் செயற்பட்டேன். அப்போது பூநகரியில் இரண்டாவது கட்டளையிடும் அதிகாரியாகவும் இருந்தேன். யாழ்ப்பாணம் மீட்கப்பட்ட பின்னர் 5ஆவது படைப்பிரிவின் அதிகாரியாக இருந்து கிளிநொச்சி மீட்பின் போதும் செயற்பட்டேன். பின்னர் வன்னி மனிதாபிமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டேன்.

கிழக்கில் ஏற்பட்ட சுமுகமற்ற நிலையின் போது அங்கும் சென்றேன். பின்னர் இராணுவத் தலைமையகத்துக்குத் திரும்பினேன். 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13ஆம் திகதி 6 வருடங்களாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முகமாலை மீட்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி 58 ஆவது படைப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாகவும், இராணுவ கமாண்டர் பிரிவின் அதிகாரியாகவும் செயற்பட்டேன். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொடக்கம் இன்று வரை ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றி வருகின்றேன்.

**கே:-** வன்னி மனிதாபிமான நடவடிக்கைகளில் இறுதிக் கட்டத்தில் நீங்கள் 58ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டுள்ளீர்கள். விசேடமாக புதுமாத்தளன் மனிதாபிமான நடவடிக்கை தொடர்பாகக் கூறமுடியுமா?

ப:-வன்னி மனிதாபிமான நடவடிக்கை மன்னாரில் ஆரம்பமானபோது நானும் இருந்தேன். அதன் பின்னர் மன்னார் உள்ளிட்ட பல பகுதிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. 2009ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கிளிநொச்சியைக் கைப்பற்றியதோடு, ஆனையிறவு, விஸ்வமடு, புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் ஆகிய பகுதிகளும் கைப்பற்றப்பட்டன.

புதுமாத்தளன் பகுதியில் விடுதலைப் புலிகளினால் ஒரு லட்சத்துக்கும் அதிகமான அப்பாவி மக்கள் தடுத்துவைக் கப்பட்டிருந்தார்கள். இராணுவத்தினரால் அவர்களைக் காப்பாற்ற முடிந்தது. உலகில் எங்கேயும் இடம்பெறாததும், பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து அதிகளவான அப்பாவி மக்கள் காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பமும் 58 ஆவது படைப் பிரிவினருக்கு கிடைத்தது. இராணுவத்தினரால் தவறு இழைக்கப்படலாம். கொலைகள் செய்யப்படலாம் என்று உலகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

**கே:-** அதன் போது மனித உரிமை மீறப்பட்டது என்று ஏதாவது ஒரு சர்வதேச அமைப்பு குற்றஞ்சாட்டியதா?

### மக்களைக் காப்பாற்றினோம்

ப:- இல்லை. சாதாரண மக்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற் படாதவாறு திட்டமிட்ட வகையில் செயற்பட்டு அவர்களைக் காப்பாற்றினோம்.

**கே:-** 58ஆவது படைப் பிரிவு வன்னி மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இராணுவத் தளபதியாகக் கடமை புரிந்தவர் யார்?

ப:- இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா.

**கே:-** வன்னி மனிதாபிமான நடவடிக்கையில் நீங்கள் கூறியது போன்று 58ஆவது படைப்பிரிவு விசேட பங்களிப்பை வழங்கியது. வன்னி நடவடிக்கையின்போது அன்றிருந்த இராணுவத் தளபதிக்கும் உங்களுக்கும் இடையே உறவு அல்லது தொடர்பு எப்படி இருந்தது?

ப:- முரண்பாடுகள் இருக்கவில்லை. சிறந்த தொடர்பு பேணப்பட்டது.

**கே:-** வன்னி மனிதாபிமான நடவடிக்கையின் இறுதி நாள் எப்போது?

ப:- என்னைப் பொறுத்தவரையில் முழு இலங்கையும் பயங்கரவாதத் திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியே. இறுதி யுத்தம் இடம்பெற்று 50 மீற்றர் பரப்பளவுக்குள் பயங்கரவாதிகளை முற்றுகையிட்டோம். அப்போது இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொலைபேசி ஊடாக அழைப்பை மேற்கொண்டு விடயத்தைக் கூறினேன். அதன் பின்னர் அவர் எனக்கு வாழ்த்துகளைத் தெரிவித்ததோடு களத்திலிருந்த படை அதிகாரிகளுக்கும் தனது வாழ்த்துகளைப் பரிமாறினார்.

**கே:-** வன்னி மனிதாபிமான நடவடிக்கையின் இறுதி இரண்டு வாரங்களில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நாட்டில் இருந்தாரா?

ப:- எனக்கு ஞாபகம் இருக்கின்ற வகையில், சரத் பொன்சேகா யுத்தம் நிறைவடைய 2 அல்லது 3 நாள்களுக்கு முன்னர் சீனா சென்றார். மே மாதம் 11ஆம் அல்லது 12ஆம் திகதி வெளிநாடு சென்று 17ஆம் திகதி மீண்டும் நாடு திரும்பினார்.

**கே:-** வன்னி மனிதாபிமான நடவடிக்கைகளின் போது உங்கள் படைப்பிரிவுடன் ஊடகவியலாளர்களும் இருந்தார்களா?

ப:- வன்னி மனிதாபிமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எம்முடன் இருந்தார்கள். அதில் சிலர் எம்முடன் இறுதிவரை இருந்தனர். சிலர் குறுகிய நாள்களில் திரும்பினர். இன்னும் சிலர் காலை வந்து மாலை திரும்பினர். ஆனால் அவர்கள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் வந்திருந்தார்கள். தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினி மற்றும் சுயாதீன தொலைக்காட்சி என்பனவற்றின் ஊடகவியலாளர்கள் இறுதிவரை எம்முடன் இருந்தனர்.

**கே:-** வன்னி மனிதாபிமான நடவடிக்கைகளின்போது சரணடைதல் இடம்பெற்றதா?

ப:- ஆம். முதன்முதலில் பெண் போராளி ஒருவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார். அதன் பின்னர் மேலுமொரு பெண் போராளி சரணடைந் தார். பின்பு மூன்று போராளிகள் சரணடைந்தனர். அதில், ஆசிரியை ஒருவரும் இருந்தார்.

**கே:-** விடுதலைப் புலிகளா சரணடைந்தார்கள்?

ப:- ஆம்.

**கே:-** இறுதிக்கட்டத்தின் போது சரணடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததா?

ப:- ஆம்.

**கே:-** சரணடைய வந்தவர்கள் வெள்ளைக் கொடிகளை ஏந்திய வண்ணமா வந்தார்கள்?

ப:- இல்லை. வெள்ளைக்கொடிகளையோ கறுப்புக் கொடிகளையோ காட்டிக்கொண்டு அவர்கள் சரணடையவில்லை. சிலர் நிர்வாணிகளாக சரணடைய வந்தபோது இராணுவம் அவ[illegible]ளையும் பொறுப்பேற்றது.

**கே:-** அவ்வாறு சரணடைய வந்தவர்களை இராணுவம் சுட்டுக்கொன்றதா?

ப:- இல்லை. நாங்கள் ஆரம்பம் முதல் இறுதி வரைக்கும் சிறப்பாகச் செயற்பட்டோம். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த- பலவந்தமாகப் புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட - அப்பாவித் தமிழ் மக்களைக் காப்பாற்றினோம்.

**கே:-** சரணடைந்தவர்களை என்ன செய்தீர்கள்.

ப:- சரணடைந்தவர்களில் சிலர் தாங்கள் பொதுமக்கள் என்றும், சிலர் போராளிகள் என்றும் கூறினார்கள். ஆனால் நாங்கள் அவர்களைப் பொதுமக்கள் என்றே நோக்கினோம். சரணடைந்தவர்களுக்கு முதலில் தாகத்துக்கு தண்ணீர் கொடுத்தோம். பின்னர் முதலுதவி அளித்து உணவு வழங்கினோம்.

(இதனையடுத்து வழக்கு விசாரணை இன்று செவ்வாய்க்கிழமை காலை 10[illegible] மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.(ஒ-சி)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கார்த்திகேசு



''செல்விவளவு'', இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கார்த்திகேசு 13.10.2010 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னமணியின் அன்புக் கணவரும் பிள்ளை (கனடா), பூலோகம், ஈஸ்வரி (ஆசிரியை, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சிவம் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), யோகலிங்கம் (கனடா), சிறி நவக்கிளி (கனடா), ஈஸ்வரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேந்திரம் (கனடா), கோபால கிருஸ்ணன், குட்டித்தம்பி, சிவசாந்தி (ஆசிரியை, அல்வாய் றோ.க.த.க. பாடசாலை), உமா (கனடா), ரகுபதி (கனடா), கௌரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் கிருஷாந்தன் (முகாமைத்துவ உதவியாளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், யாழ். செயலகம்), சித்திராங்கி (ஆசிரியை, தேவரையாளி இந்துக் கல்லூரி), நசியந்தன் (ஆசிரியர், மட்டக்களப்பு, கல்லடி விபுலானந்தர் மகாவித்தியாலயம்), கிருஸ்ணானந்தி, அனுஷாந்தன், கிருஷ்ணப்பிரியா (மாணவி, Kursk state, Medical University, Russia), மகிழ்ப்பிரியா, புவிசாந்தன், குணாளன் (றுகுணு பல்கலைக்கழகம், மாத்தறை), கார்த்தி ஆனன் (சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), கார்த்திஆனந், கார்த்திகாயன், கார்த்தியப்பிரசாந், கார்த்தியப்பிரகாஷ், கார்த்தியப்பிரியன், சிவாஸ்கர் (கனடா), விக்னா, செந்தீரன், ரஞ்சினி, யாழேந்திரன், சலுஜா, பிரியங்கா, உமையங்கா, வாரணன், கார்த்தியா சின்னகார்த்தின், கார்த்தியன் (சுவிஸ்), கார்த்தி மணிரா ஆகியோரின் அன்புப் பேரனும் கிசானன், அபிஷாந், சிவஞ்ஞசன் (கனடா), இதன், ரிதன், யசிக்கா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2010) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''செல்வி வளவு'',*
*இமையாணன்,*
*உடுப்பிட்டி.*

(104488)

தகவல் : குடும்பத்தினர்.


விசேட கருத்தரங்கு

முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கானது

* யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு யாழ்.
செவ்வாய், வியாழன் 1-5 மணி, புதன் 08.30-2மணி
* கிறிஸ்டல்-நெல்லியடி
செவ்,புதன்,வியா,வெள்ளி 3-6 மணி

இப்பரீட்சைக்கான விசேட வழிகாட்டி ரூபா 150/= இந்த தொகுப்பு- த.தவசேகர் வகுப்பிலும்,பிரபல புத்தகநிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

வான் சாரதி தேவை

50 வயதுக்கு மேற்பட்டவர்

தொடர்பு – 0718474325

அன்றும்... இன்றும்... என்றென்றும்

கணக்கீடு

திரு.பாலகஜன் H.N.Dip- in- ACC

A/L 2011 கம்பனி - காசுபாய்ச்சல் கூற்று Day Batch

புதன் மாலை 3- 5 மணி

A/L 2011 வங்கி இணக்கக்கூற்று A/L 2012

ஆரம்பம் புதன் மாலை 5- 6 மணி

நாளை (17.11.2010) மாலை 3 மணி

BEACON மார்நகர் (வேலிங்டன் சந்தி அருகில்)

SPOT ADMISSIONS

Stanfords College UK

Blake Hall College UK

Stanfords College, Blake Hall College இல் இருந்து வருகை தரும் பிரதிநிதிகளால் January - February Intake இற்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கான Offer வழங்கப்படும்.

- Management (Business & Financial)
- English Language
- Computing
- Travel, Tourism & Hospitality Management

நடைபெறும் தினங்கள்

16-11-2010 Stanfords College

20-11-2010 Blake Hall College

குறிப்பு: அனைவரையும் சுயவிபரக் கோவையுடன் கல்விச்சான்றிதழ்களையும் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

Eisc EXPRESS

INTERNATIONAL STUDIES & CONSULTANTS

30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Saravana Bavan)
Tel: 011-2500207, Robin- 0777 222 422,
Selva- 0714 299 935
E-mail: eisc_2007@yahoo.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org